
RC. No. M 3003
"PAHUTHARIVU" (REASON
FED

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறுகதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா

உள் நாடு ரூ. 1—0—0.	வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6.	தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

"பகுத்தறிவு"க்கு எந்த மாதத்தில் சந்தாதாரர்களாகச் சேர்ந்தாலும் வருட ஆரம்பமாகிய மே மாதம் முதலிலிருந்து பத்திரிகைகள் அனுப்பப்படும். கொஞ்சம் பிரதிகளே கைவசமிருப்பதால் எல்லோரும் முந்திக்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"பகுத்தறிவு" சந்தாதாரர்களுக்கு முதல் வருடமைண்டு வால்யம் (12 பிரதிகள் சேர்ந்தது) ஒரு ரூபாய்க்குக் கொடுக்கப்படும். தபால் சார்ஜ்லேது. சொற்பக் காப்பிகளே இருப்பதால் உடனே ஆர்டர் கொடுங்கள்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிட வேண்டும்.

விஷய அட்டவணை பக்கம்.

மாதர் மறுமணம் (மாட்சி) (மறைமலை)	1
போலி மெஞ்ஞானம் (எர். சிங்காரவேலு)	3
இதுவா ஜீவகாருண்யம்? (கைவல்ய சாமியார்)	11
விஞ்ஞான வெற்றி (சர் எப். ராபீன்சன்)	17
தமிழுக்கு ஹிந்தி ஈடாகுமா? (சர். கே. வி. ரெட்டி நாயடு)	21
ஹிந்தி படித்தால் வடநாட்டில் வேலை கிடையாது (சர். எம். கிருஷ்ணா நாயர்)	43
பழங்கதைப் பேசி பயனில்லை (பாரதியார்)	52
கடவுள்ளப்பற்றிய ஆபாசக்கதை (ஆஸ்திகன்)	73

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு.

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 3. } ஈரோடு 1938 மார்ச்சு 1. { இதழ் 11.

மாதர் மறுமணம் போற்றுக!

(இளவலூர்: மறைமணி)

குன்றி இசை

மாதாமறுமண்ண தாலவரும நன்மைகள
மட்டிலடங்குமோ தோழர்களே
ஆகலினால்இனி மேல் விதவைமணம்
அன்புடனே கொளல்.வேண்டுவமே

வேதங்கள் ஆகமம் என்று விளம்பிடும்
வீணர்கள் சொல்லை இகழ்ந்துவிட்டே
மாதர்மறுமணம் தன்னைப்புகழ்பெற
மாநிலமீதினில் கொண்டிடுவோம்.

இத்தலத்தாடவர் மட்டுமே மக்களோ
ஏற்றமுடைப் பெண்டிர் மக்களன்றோ?
சற்றுமறிவிலா வைதீகரே இது
சாத்திரமோ நும்வழக்க மதோ?

பகுத்தறிவு

பத்துவயதுடைக் கன்னியினை ஒரு
பாழுங்கிழவன் மணந்திடுங்கால்
கத்தும் சிறுவனைப் பெண்கொளல் மாத்திரம்
கன்றல்லவோ அறிவாளர்களே

கற்புக்கற்பென்று கரைந்திடும் வைதிகக்
கண்கெட்ட மாந்தரே கேட்டிடுவீர்
கற்பென்ற சொல்லுக்கு நீர்கொண்டதாம் பொருள்
காணவும் கூடுவதோ புகல்வீர்

ஓருவன் ஓருத்தியைக் கூடுதல் என்பதே
உண்மைபெறும் புகழ்க் கற்பாகும்
அறிவிலுயர்ந்தவர் கொள்வதுமிதே
அறிந்திடுவீர் உலகாளர்களே

ஒத்தவயதினர் ஒத்தகுணத்தினர்
ஒத்த மனத்தினாராய் அவர்தாம்
நித்தம் வளர்த்திடும் காதலராகவே
நேர்ந்திடச் செய்வதே கற்பதுவாம்,

தக்கவயதினில் தன்கணவன் உயிர்
தாழ்ந்திடக் கன்னி துணை இன்றியே
மிக்கமகிழ்செயும் இன்பங்களின்றியே
மேவிடச் செய்வது கற்புக்கொலோ.

கணவன் இறந்தபின் கன்னியவள் ஓரு
காதல்புகனைக் கைம்மையற,
மணவினையேகொண்டு வாழ்ந்திடல் என்பது
மாண்புபெறும் நல்ல கற்பல்லவோ?

மக்களில் ஆடவர் மட்டும் சுகம்பெற
மங்கையிற் பல பேர்களையே,
தக்கவயதன்றித் தள்ளாப் பருவத்தும்
தன்மனையாகக் கொளல் நன்று கொலோ?

ஆடவர் என்பவர் மாத்திரம் எத்தனை அக்கியப்
பெண்களைக் கூடினுமே,

போலி மெய்ஞ்ஞானம்.

(எம். சிங்காரவேலு)

மெஸ்மரிசம் (Mesmerism) என்று வழங்கும் கல்வி, மெஞ்ஞானமா? அதன் விபரமென்ன? கண்களுக்குத் தெரியாத பொருள்களைக் கண்டு பிடிக்கின்ற விஷயம் உண்மையா? தூரத்தில் நிகழும் அல்லது நிகழ்ந்த விஷயங்களைத் தெரிந்து சொல்லும் விஷயத்தின் உண்மை என்னவென்று வினவுகின்றார்கள். இதற்கு முன்பு பல கண்பர்கள் இந்தக் கேள்விகளைக் கேட்டுமிருக்கின்றனர். இதனால் இந்த மெஸ்மரிசம் என்று அழைக்கப்படும் வித்தை அனேகர் மனதில் பதிந்து இருப்பதாகத் தெரிகிறது. இதற்கு முந்தியே நாம் மெஸ்மரிசம் இன்ன விஷயமென்றும், அது ஓர் போலி வித்தை என்றும் அதை, மெஞ்ஞானிகள் உதறித் தள்ளி விட்டார்கள் என்பதையும், அதற்குப்பதிலாக இப்நாடிசம் (Hypnotism) என்ற வித்தையை வழங்குகின்றார்களென்றும், "குடி அரசு" இதழ்களில் குறிப்பாகக்காட்டி வந்திருக்

கேடில்லாக் கற்பது வாகிடுமாம் எனல் கேட்கச்
சகித்திடுமோ புகல்வீர்.

மூன்னால்மணக்த மனைவி இருக்கவே,
மூன்றொருவான்கென வேணமட்டும்,
கன்னியரை மணம் செய்து மகிழ்தலும்
கற்பது வாகிடுமோ புகல்வீர்.

ஆதலினால் இனிப் பெண்களும் தன்மன
அன்புடன் சேர்ந்தே அணைத்து நிதம்,
காதலின் கூடும் கணவனைச் சேர்ந்திடக்
கற்பித்திடுவதே நீதிகளாம்.

கின்றோம். இந்தப் பண்டைய கால வித்தையை நமது நண்பர்கள் விபரமாக அறியுமாறு இங்கு எடுத்துரைப்பாம். இந்த மெஸ்மரிசம் என்ற வித்தையை ஒரு காலத்தில் மெய்ஞ்ஞான மென்று சில மெய்ஞ்ஞானிகள் கூறிவந்திருக்கின்றனர். இது இன்று ஓர் போலி ஞானமென்று நிரூபிக்கப்படுகின்றது. இதைப்போன்றனவும், இதைச் சார்ந்தனவுமான இன்னும் சில போலி ஞானங்கள் உண்டு. இவைகளை (Bnedo Science) என்று ஆங்கிலத்தில் வழங்குவார்கள். அவையாயன: — (Telepathy) அதாவது ஒருவர் மனதில் தோன்றும் எண்ணங்கள் இன்னொருவர் மனதில் புலன்கள் வழியிலாக இல்லாமல் தோன்றுவது (Clairvoyance) அதாவது தூரத்தில் நடக்கும் விஷயங்களைக் கண்கள் மூலமாக அல்லாமல் கண்டறிவது (Spiritualism) அதாவது இறந்தோர் ஆட்சமாதேகம் (Disembodied Spirits of the dead) கண்களுக்குத் தோன்றுதல் மேஜை, நாற்காலி, வீட்டு சாமான்கள், கதவு, ஜன்னல், மனிதனால் அசைக்கப்படாமலே அசைதல், இந்தத்தோற்றங்களைப் பொதுவாக Occultism அதாவது மறைவான வித்தைகள் என்று அழைப்படுதுண்டு. இந்தப் போலி வித்தைகளின் ஆபாசங்களைத் தெரிந்துகொள்ள மனமுடையவர்கள் முன் கட்டுரையில் கூறியுள்ள நூல்களை வாசிப்பதோடு 1, Hypnotism by Albert Moll (Scott), 2. Hallucinations and Illusions by Edmund Parith (Scott) 3. Apparitions and thought Transference by Podmene (Scott), 4. Illusions by Sully (Scott), 5. Newer Spiritualism by Podmcre முதலிய நூல்களை படித்தறியலாம். நமது பொது மக்கள் இம்மயக்க வித்தைகளை உணர்ந்து மூட நம்பிக்கைகளை விட்டொழிக்குமாறு இம்மறைவான வித்தை (Occultism) களின் போலி உண்மையைச் சுருக்கமாக எடுத்துரைப்பாம்.

எனக்கு மூன்று இருபதும் பத்து வருஷமும் (Three Scores years and Ten) கிட்ட நெருங்கி வருகிறது. இது காறும் (Occultism) மறைவான வித்தையில் கூறும் தோற்றங்கள் ஒன்று கூட என் அனுபவத்தில் வந்ததில்லை. நான் வசித்து வரும் இடம் மூட நம்பிக்கைகளில் மிகுந்திருக்கும் மீன் பிடிப்போரால் கடந்த 2000 வருஷங்களாக வசிக்கப்பட்டு வருகின்றது. என்னுடன் விளையாடியவர்கள் அநேகர் மாண்டனர். இன்னுஞ் சிலர் ஜீவித்து வருகின்றனர். இவர்களில் ஒருவராகிலும் சென்ற அறுபது வருஷங்களாகப் பேயோ, பிசாசோ, செத்தவர்களையோ, பார்த்ததாகக்

சொன்னதில்லை. ஆனால் மாரியாத்தாளுக்கும், காத்தவராய னுக்கும், அண்ணன்மார், தம்பிமார், கன்னிகளுக்கு பூசைகள் போடுவதில் குறைச்சல் இல்லை. என்ன பூசைகள் போட்டும், கும்பிட்டும், தெய்வங்கள் ஆடியும், எல்லைகளுக்குக் காவு கொடுத்தும் இவர்களை அகாலப்பிணி, மூப்பு, சாக்காடு விட் டொழிந்தபாடில்லை. மற்றத் தொழிலாளிகளில் வருஷமொன் னுக்கு 1000-பேரில் 30, 40, சாவென்றால் இவர்களில் 10 பேருக்கு 60.க்கு மேல் வருஷா வருஷம் சாகின்றனர். இவர் களில் அம்மை, விஷசுரம், வாந்திபேதி, வராத நாளில்லை. ஆனால் ஒவ்வொரு குப்பத்திலும், ஒன்று இரண்டு மாரியம் மன் கோயில்கள் இருக்கின்றன. அவைகளுக்கு வருஷா வரு ஷம் செலவாகும் பணம் 500-முதல் 1000-என்று சொல்லலாம். நான் வசிக்கும் இடம் நடுக்குப்பமென்று பெயர். இதில் ஆண், பெண் குழந்தைகள் 600-பேர் வசிக்கின்றோம். இதில் ஒரு கோயிலுண்டு. இதற்கு ஏறக்குறைய ஒரு லட்சம் ரூபாய் சொத்துண்டு வருஷந்தோறும் இந்த மாரி அம்மனுக்கு ரூபாய் 2000.செலவாகிறது. ஆனால் ஒரு வைத்திய சாலைக்கு ரூபாய் 500.செலவு செய்யலாகாதாவெனில். அது கூடாதாம்! குப்பம் முழுமையும் நரகலோகமாகவே இருக்கும்!! இவர்களுடைய மூடத்தனத்தால் பிறக்கும் இரண்டு குழந்தை களில் ஒன்று அகால மரணமடைகின்றது. எங்களைத் தவிர மற்ற யாரும் 60.வயது அடைந்தவர்கள் இல்லை. இவ்வளவு விவரமாக என் இந்தக்குப்பத்தாரின் நிலைமையைச் சொல்ல வந்தேனெனில் இதேவிதமாகவே நமது 29-கோடி காட்டுப்புற மக்கள் (Villagers) இவ்வித மூட நம்பிக்கையில் ஆழ்ந்து வறுமை, பிணி, மூப்பு, சாக்காட்டால் கஷ்டப்படுகின்றனர் என்று விளக்கவென அறிக. எங்கள் குப்பம் (Village) நமது காட்டிலுள்ள 15-லட்சம் கிராமங்களில் அடையாளமான (Typical) கிராமமென அறிக. நாம் கூறிவரும் மூட நம்பிக் கைகளாகிய (Spiritualism Occultism) என்னும் மாயவித் தைகளால் நமது கோடான கோடி மக்களுக்கு விளையும் தீமைகளையும் கேட்டையும் சிந்திக்கச்சிந்திக்க என்ன அபாய நிலைமையில் நமது நாடு இருந்து வருகின்ற தென்பது கண்கு விளங்கவில்லையா? மதங்களில் மூட நம்பிக்கைகளால் விளை யும் கேடு ஒருபக்கமிருக்க மாயவித்தைகளால் (Mysticism) விளையும் கேட்டினைச் சொல்லவும் வேண்டுமா? இதனை அறியாது "புத்த குருக்கள் சொல்வது புத்த மதமல்ல. நான்கள் சொல்வதுதான் சரியான புத்தமதம்" என்று ஒரு தோழர் நாம் எழுதிவரும் புத்தமத மூட நம்பிக்கைகளைக்

குறித்து பரிகாசமாக "திராவிடனில்" எழுதுகின்றார். மதங்கள் விஷயங்களில் நமது தோழர்கள் எந்த மதமாயினும் சரி, இவ்வளவு அபிமானமும் வைராக்கியமும் வைக்கும்வரை மூட நம்பிக்கைகள் நமது நாட்டைவிட்டு ஒழியாதென அறிக. இந்து மதஸ்தர்களின் நாட்டில் வழங்கும் மூட நம்பிக்கைகளுக்கு இந்து மதமே காரணம். கிறிஸ்து நாட்டிலும், மகமதிய நாட்டிலும் வழங்கும் மூட நம்பிக்கைகளுக்கு அந்தந்த மதங்களே காரணம். அதுபோலவே புத்த நாட்டில் வழங்கும் மூட நம்பிக்கைகளுக்கு புத்தமதமே காரணமென அறிக. புத்தர் இதைச் சொல்லவில்லை, அதைச்சொல்லலில்லை என்று சொல்லும் மத பாசாங்குகளை (Religious Apologeties) ஒழித்து; எல்லாவித மதங்களும் மூட நம்பிக்கைகளெனத் தெளிதலே உத்தம புருஷருக்கு அடையாளமென அறிக. எந்த விவேக சாலி 1000, 2000 வருஷங்களுக்கு முந்திச் சொல்லிய போலி சித்தாந்தங்களையும், கோட்பாடுகளையும், பண்டை நீதியையும், நெறியையும் கொண்டு இந்த காளில் நமதுமானிட வாழ்க்கையை நடத்த முயலுவான்?

(Hypnotism) அதாவது மயக்கவித்தை என்று கூறும் ஓர்வித தூக்கம் பண்டைகால முதல் (Mesmerism) மெஸ்மரிசமென்று வழங்கி வந்தது. ஜர்மன் டாக்டர் (Mesmer) மெஸ்மர் என்றவர் இந்த வித்தையை மிக்க சாமார்த்தியமாகக் கற்றுத் தெரிவித்தார். இந்த வித்தையின் விஷய மென்னவெனின் மனிதனுக்குள் ஒருவித நுட்ப (Subtle) சக்தியுண்டு. அந்த சக்தியைக் கொண்டு மற்றொருவனை விழிப்பில் தூங்க வைக்கக்கூடும். அந்த ஒருவித தூக்கத்தில் (Hypnotic Sleep or Trance) கண்களுக்கு தெரியாத வஸ்துக்கள் தெரியும். மறந்து போன விஷயங்களும் ஞாபகத்துக்கு வரும், எதைச் செய்யச்சொன்னாலும் அந்தத் தூக்கத்திலிருப்பவன் செய்வான். சர்க்கரையை அந்தத் தூக்கத்திலுள்ளவனைக் கசக்கின்றதென்று சொன்னால் கசப்புக்கு வேண்டிய செய்கைகளையும் சைகைகளையும் செய்வான். அந்த நிலைமையிலுள்ளவனுக்கு சில நோய்களும் தீரும். இந்த மெஸ்மர், விஞ்ஞான முறைப்படிவிளக்கி வைத்தழுததாக ஒருகாலத்தில் எண்ணி வந்தபடியால் மெஸ்மரிசமென்று வழங்கப்பட்டது. மெஸ்மர் இந்த கடவடிக்கைகளுக்கு ஒரு சக்தி காரணமென்று கூறி வந்தார். இது அவருடைய யோசனையே யொழிய மெஞ்ஞானமல்ல. இந்தச் சக்தியைப் பார்த்தவருமில்லை, பரீட்சித்தவருமில்லை. இந்தப் புதிய மனுஷ சக்தியை [Human Magnetism] மனித காந்த சக்தி என்று வழங்கப்

பட்டது. இது வெறும் உத்தேசமாக முடிந்தது. மனித னுக்குள் காந்த சக்தியொன்று இருப்பதாகத் தெரியவில்லை. இந்த இப்நாடிச மயக்கத்தில் செய்யும் கடவடிக்கைகளுக்கு உசாவுதலே அல்லது தூண்டுதலே [Suggestion] போதுமான காரணமென தற்போது விஞ்ஞானிகளால் எண்ணப்படுகிறது. இதனைச் சற்று விளக்குவோம்.

விழிப்பில் [Waking State] நாயை 'வுஸ்' 'வுஸ்' என்று உசாவினால் ஓடுகிறது. மனிதனை அடி யென்றாலும், சுடு என்றாலும் இந்த உசுப்பினாலேயே அடிக்கின்றான், சுடுகின் றான். இந்த கடத்தைகள் விழிப்பில் உசாவுதலால் காட்டும் கடத்தையாகும். அதுபோலவே, ஓர்வித தூக்கத்தில் அதாவது இப்நாடிச தூக்கத்தில் அதாவது மயக்க தூக்கத் தில் (Trance) உசாவினால் அந்த தூக்கத் திலுள்ளவன் செய்யச்சொன்னதையும், சொல்லச்சொன்னதை யும், ருசிக்கச் சொன்னதையும் செய்கிறான், சொல்லுகின் றான், ருசிக்கின்றான். இந்த மயக்கத்தில் விழிப்புக்குரிய கடத்தைகள் இல்லாதபடியால் [Waking Behaviours] உசா வின சொல்லுக்குரிய [Suggestedword] கடத்தைகளைக் காட்டுகின்றான். சாதாரண விழிப்பில் சர்க்கரை என்றால் அதற்குரிய ருசியின் ஞாபகம் உண்டாகின்றது. அது போல வேஇப்நாடிச மயக்கத்தில மண்ணை வாயில்போட்டு சர்க் கரை என்றாலும் சர்க்கரைக்குரிய ஞாபகம் உண்டாகிறது விழிப்பில் ஞாபகத்துக்கு வராத விஷயங்களும், இந்த மயக்கத் தில் ஞாபகத்துக்கு வருகிறது. மறந்துபோன விஷயங்களும் இந்த இப்நாடிச தூக்கத்தில் தோன்றுகிறது. விழிப்பில் தோன்றி மறைந்த விஷயங்களும் இந்தத்தூக்கத்தில்தோன்றி மறைவதுண்டு. ஒரு சிறு பெண் குழந்தையாய் இருக்கும் பேயை, யாரோ ஒருவர் சமஷ்கிருத பாஷையையோ, அராபிக் பாஷையையோ லத்தீன், கிரீக்கோ, ஈபுருவோ, அவள் அருகா மையில் படித்து வந்தார். அவள் காதுமூலமாகக் கேட்டிருந்த சொற்கள் அவள் மனதில்அவளுக்குத்தெரியாமலேபடிந்திருந் தன. அவள் அனேக வருஷம் பிறகுஇந்த மயக்கத்தில்அல்லது வலியில் (Hysteria) தான் இளமையில் கேட்ட பாஷையை உச்சரிக்க ஆரம்பித்தாள். இவள் ஆதிவாழ்வை அறியாதார் இது என்ன விந்தை என்று அதற்குத் தகுந்த கதைகளை கட்டுகின்றார்கள். அவள் முன் ஜன்மத்தில் படித்த பாஷையைப் பேசுகின்றாள், அல்லது பேய் பாஷையை உளறு கிறாள், என்று கதைகளைக் கட்டுகின்றார்கள். விஷயங்களை உள்ளதை உள்ளபடி விசாரித்துணராமையால் பேய்க்கதையும்,

பிசாசுக்கதையும், மறு ஜன்மக்கதையும் அவைகளுக்குப் பரிகாரமாக மந்திர தந்திரங்களும் எழுகின்றன.

காணாத பொருளைக் கண்டுபிடிக்கும் கதையிலும், விழிப்பில் ஞாபகத்திற்கு (Memory) வராத விஷயம் இப்நாடிமுசித்தில் அதாவதுமயக்கத்தில்ஞாபகத்திற்குவரும் விஷயமே காரணம.

இந்த இப்நாடிச மயக்கம் பிறரால் உண்டாகும் அல்லது தானே வரவழைத்துக் கொள்ளலாம். இதை (Auto-hypnesis) அதாவது தானே வரவழைத்துக்கொள்ளும் மயக்கமென்று கூறுவர். இவ்வித மயக்கத்தை (Trance) என்றும் கூறுவர். இந்த (Trance) மயக்கத்திலுள்ளவர்கள் 'தெரியாத விஷயங்களைத் தெரிந்து சொல்வதாகவும் செத்தவர்களுடன் பேசுவதாகவும் பிறர் நினைத்த விஷயங்களைத்தான் சொல்வதாகவும், கண்ணுக்கெட்டாத் தூரத்தில் நடக்கும் சம்பவங்களைத் தூர திருஷ்டியால் (Distant Vission) பார்த்துச் சொல்வதாகவும் இதுபோன்ற அபூர்வக்கதைகள் பலவுண்டு. இவைகளை எல்லாம் விசாரிக்குமளவில் சில கேள்விச் சொல்லாகவும் (Hearsay) சில பொய்யாகவும் சில மிகைப்படுத்திய விஷயமாகவும் (Exaggerated) மற்றும் சில சாதாரணமாக அறியக்கூடியதாகவும் ஏற்படுகின்றன.

இப்நாஷிஸ் (Hypnosis) என்ற மயக்கத்தில் விழிப்பில் நடக்கும் நடத்தைகள் இல்லாமையால் சில புலன்கள் நுட்பமாகவும், துரிதமாகவும், சுறுசுறுப்பாகவும் வேலை செய்கின்றன. மெதுவாகப் பேசினாலும் கேட்கின்றன. சிற்சில சைகைகளையும் அறிகின்றன. இத்தியாதி நுட்ப துரித குணங்களை புலன்களை இப்னாஷிஸ் (Hypnosis) என்றமயக்கத்திலும் டிரான்ஸ் (Trance) என்ற மயக்கத்தினாலும் அடைகின்றபடியால், சாதாரணமாய் விழிப்பில் நமது புலன்களுக்கு எட்டாத விஷயங்கள் இப்நாஷிஸ் அடைந்த (Hypnotised Subjects) வர்களுக்கு எட்டுகின்றன. குறி சொல்லுகிறவன் தானே இந்த மயக்கத்தை வரவழைத்துக் கொண்டு (Self hypnosis) கேள்வி கேட்போருடைய சைகைகளை நுட்பமாய் அறிந்து கொண்டு தானே தன் மனதில் கண்டறிந்தவன் போல அந்தக் கேள்விகளுக்குத் தகுந்த விடை அளிக்கின்றான். இந்த மயக்கத்தில்தான் (Medium) மீடியம் என்று வழங்கும் குறி சொல்வோர் ஜனங்களை மயக்குகின்றார்கள்.

இப்நாஷிஸ் மயக்கத்தில் சில நோய்கள் தீருவதாகச் சொல்கின்றார்கள். இதற்குமுன் குறிப்பிட்ட (Dr. Moll) டாக்டர் மால் அதிகாரியாவர். சாதாரணத் தூக்கத்தில் ஆயாசம், இளைப்பு, தலைவலி, மயக்கம், போதை முதலிய கஷ்டங்கள் நீங்குவதுபோல் இப்நாஷிஸ் தூக்கத்திலும், சில நரம்புபற்றிய நோய்கள், தீரக்கூடும். இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை இந்த மயக்கத்தில் உசுப்பால்(Suggestion)சில நோய்கள் தீருகின்றன. ஒழுங்கு அறிவுள்ள சில நரம்புகள் உசுப்பால் ஒழுங்கடைகின்றன. ஒழுங்கடையவும் அந்தநோய் தீருகின்றது, இதனை அறிவுமல் மந்திரத்தால் தீர்ந்ததாகப் பாமரமக்கள் நினைக்கின்றார்கள். இதோடுபோகாமல் பூசாரி மின்போசத்திற்குட்பட்டு பூசையும் படையலும், போட்டுவீண் விரயம் செய்கிறார்கள். பூசாரி செய்வதெல்லாம் உசுப்பே (Suggestion) இதனால் சிலருக்கு சில நோய்கள் வாசியாகின்றன மசூதிகளில் குழந்தை காதில் ஊதுவதும், ஓர்வித உசுப்பே. இவ்வித உசுப்பால் சில நோய்கள் வாசியாவதால் அதாவது தீருவதால் இதனை அல்லா (Allah) வின் அருள் என்று நினைக்கின்றார்கள்! மாதா கோவில்களில் ஊதுவத்தி (Candles) கொளுத்தவதும், தண்ணீர் தெளிப்பதும் ஓர்வித உசுப்பென அறிதல் வேண்டும். இதனால் சில நோய்கள் தீர்ந்தால், இயேசுவின் மகிமையால் தீர்ந்ததாக எண்ணுகின்றார்கள்! வாஸ்தவத்தில் ஒருவனுடைய நம்பிக்கையே அவனுக்கு சுப்பாக நின்று வேலை செய்கிறது. இதனை (Auto Suggestion) என்று அழைப்பார்கள். தேள் கொட்டுக்கு வேப்பிலையைக்கொண்டு டந்திரிப்பதும் ஓர் வித உசுப்பே. (Suggestion) அதாவது உசுப்பால் சில நோய்கள் தீர்ந்த போதிலும் சாதாரண சிகிச்சைகளைக் கைவிடலாகாதென விஞ்ஞானிகள் எச்சரிக்கை செய்கின்றதை மறக்கலாகாது.

இப்நாடிஸத்தோடு சம்பந்தப்பட்ட (Telepathy) டெலிபதி என்ற விந்தை வேறொன்றுண்டு. இந்த (Telepathy) டெலிபதி என்னவெனில் ஒருவன் மனதில் தோன்றிய செய்தியோ, விஷயத்தையோ இன்னொருவன் மனம் மூலமாக அறிதல். இதற்குத் திருஷ்டாந்தம் வேண்டுமானால் நமது சாதாரண அனுபவத்தில் வரும் சில சம்பவங்களை டெலிபதியால் தெரிந்துகொள்கின்றதாக ஓர் சித்தாந்தம் காட்டியுள்ளனர். சில வேளையில் நாம் நினைத்தவர் வருவதுண்டு. நாம் நினைப்பதைப்போல் நடப்பதுண்டு. நாம் பலதடவை நமக்கு வேண்டியவர்களை வரவேண்டுமென்றாகிலும், சந்திக்க வேண்டுமென்றாகிலும், கோருகின்றோம். அந்த பிரகாரம்

ஒரு வேளையில் நாம் கோரியவர்களைச் சந்திக்கின்றோம். இதை (Telepathy) டெலிபதி மூலமாக தெரிடுவதாக சிலர் எண்ணுகின்றார்கள். அதாவது நமது நினைப்பு அவர்களுடைய மனதில் ஏதோ வழியால் தூண்டப்பட்டு அவர்கள் புறப்படுவதாகவும், அதனால் நாம் அவர்களைச் சந்திப்பதாகவும் சொல்லுகின்றார்கள். கம்பி இல்லாமல் தந்திபோவது போல் (Wireless Message) ஒரு மனத்தில் தோன்றிய சமாச்சாரம் மற்றொரு மனத்தில் தோன்றுகின்றதாக சிலர் உத்தேசிக்கின்றார்கள். ஆனால் ஒரு மனத்தில் தோன்றிய விஷயம் மற்றோர் மனத்தில் தோன்றுகின்றதா என்பதைத் தான் பரீஷிக்கவேணடும். இதைப் பரீட்சித்தவரை (Telepathy) டெலிபதி ருசுவடைந்ததாகப் படவில்லை. இவ்வித பரீட்சையில் தவறுதல் அதிகமாகக் காணப்படுகின்றன. சில இடங்களில் சில மெய்ஞ்ஞானிகளாகிய (Crookes Oliver Lodge) முதலியோர் ஏமாந்து போனதாகத் தெரியவருகிறது. கும்பகோணத்தை அடுத்த வலங்கிமானில் ஒரு (Telepathy) நாம் எண்ணியதைத் தெரிவிக்கிறாராம். அதனை நமது நண்பர்கள் விசாரித்தல் அவசியமாகும். இதன் விஷயமாக கற்றறிந்த மெஞ்ஞானியாகிய (Dr. Moll) டெலிபதி என்னும் வித்தை மெஞ்ஞான முறைப்படி கடுமையாகப் பரீட்சிக்கப்படவில்லை என்றும், அவ்விதமாகப் பரீட்சை செய்தவரை சாதாரண காரணங்களால் ஒருவர் மனத்தில் தோன்றியதை இன்னொருவர் தெரிவித்திருக்கலாமென்றும், பன்முறை தனது நூலில் காட்டுகின்றார். முக்கியமாக அகத்தினழகு முகத்தில் தோன்றும் என்ற பழமொழிக்கிணங்க ஒருவருடைய எண்ணத்தை எண்ணிக்கொண்டிருந்தால் நமக்குத் தெரியாமலே அது நமது வாயால் சொல்ல நேரிடுகிறது. இதனைத் தந்திரசாலி கண்டுகொண்டு தன் மனத்தில் தோன்றியதுபோல் சொல்லுகின்றான். இந்தியாதி மோசங்களால் ஜோதிடம் சொல்லுகின்றவர்கள் ஜீவிக்கின்றார்கள்.

பல தடவை ஒரு விஷயத்தைப்பற்றி நினைத்தால் ஒரு தடவையாகிலும் அதேமாதிரி நடக்கலாம். அந்த சம்பவத்தை மாத்திரம் நாம் கவனிக்கிறோமேயொழிய பல தடவை நினைத்தும் அதன்படி நடவாத சந்தர்ப்பங்களை கவனிப்பதில்லை. நமது பந்து மித்திர உறவினர்களைப்பற்றி நினைக்காத நாள் இல்லை. ஏதோ ஒருநாள் நினைத்தமாதிரி அவர்களுக்கு நேரிட்டாலும் நேரிடலாம். அதனைக்கொண்டே நாம் நினைத்தபடி நேரிட்டது; ஆகலால் அவர்கள் மனத்தில் அந்த சமயத்தில் நினைத்தது நமது மனத்தில் தாக்கியது

இதுவா நமது ஜீவகாருண்யம்?

(கைவல்ய சாமியார்)

ஜீவகாருண்யமென்பதை விரித்து அநேகர் எழுதியிருக்கிறார்கள். படிப்பின் அஹம்பாவத்தால் தன் கொள்கையே மேல் என நினைத்துக்கொண்டால் விஷயங்களின் உண்மை விளங்காது: மனதை காலாபக்கமும் ஓட்டி பின் ஒன்றாக்கி அதை உற்று ஆலோசித்தால் பொதுவான விஷயங்களை புத்தி கிரகித்து உண்மையை விளக்கும். வஸ்துக்களைப்பற்றிய புற அறிவு விரைவிலே வந்து விடும். அகத்தைக் காண்பதோ பல நூற்றாண்டு பழகித் தன்னைக்கட்டிய பின்பு கைகூடும். இயற்கைக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பு ஆழ்ந்த உள்ளத் தொடர்பு. அதன் அன்பாகிய உயிர்த்தளையை அதன் உலகத்தோடு ஒட்டுகையில் அதன் பொருட்டு நெஞ்சம் திறத்தலால் உண்டாகும் சீவகாருண்யம் நமது புஸ்தகங்களிலுமிருக்கின்றன. குடும்பத்தின் விஸ்தாரம், இருதய விஸ்தாரம் விசாலமான் உலகத்தில் நீண்ட காலத்தில் இயல்வதான விஸ்தாரம். இதைப்பற்றின ஜீவகாருண்யம் நமது புஸ்தகங்களிலுமிருக்கின்றன. ஒரு கொடியைக் கிள்ளாதிருப்பதிலிருந்து தனக்கென்று தேக முதல் எந்த ஒரு சிறு சாதனத்தையும் வைத்துக்கொள்ளாமலிருப்

என்று சித்தாந்தப் படுத்துவது மெஞ்ஞான சித்தாந்தமாகாது. ஏகதேச சம்பவத்தைக்கொண்டு அதன் காரணத்தை சித்தாந்தப்படுத்துவது பாமர மக்களுக் கடுக்குமே யொழிய மெய்ஞ்ஞானிகளுக்கு ஒவ்வாது. நமது எண்ணப்போல் நடவாத சமயங்களை நாம் கணக்கெடுப்பதில்லை. ஏகதேச சம்பவத்தை மாத்திரம் கவனிக்கின்றோம். இந்த மனப்பான்மையால் எந்த மூடநம்பிக்கையையும் நம்புகின்றோம். இதுதான் மூட நம்பிக்கைகளிலுள்ள முக்கிய காரணம். இந்த மனப்பான்மையுள்ளவரை உலகம் மூடநம்பிக்கையில் ஆழ்ந்து கிடக்குமென்பதற்குத் தடையில்லை.

பது வரையிலும் ஜீவகாருண்யமென்றே நமது புஸ்தகங்கள் சொல்லுகின்றன ஜீவகாருண்யம் நீதி சடமை எல்லாம் தத்துவங்களில் சிறிது விதியாசப்பட்டாலும் பாஞ்பனையில் அண்ணன் தம்பியைப் போன்றவையே. வேடனுக்காகப் புறா உயிர் விட்டதும் புறாவுக்காக வேடனுக்கு ராஜா தன் மாம் சத்தை அறுத்துக்கொடுத்ததுமான கதைகளை நமது புஸ்த கங்களில் எழுதியிருப்பது மிகைபடக்கூறல் என்னும் குற்றத் திற்குள் வந்தாலும் உயர்ந்த அத்தமுடைய கதையளவில் சொல்லலாமே ஒழிய அனுபோகத்திற்கு ஒத்துவருவதல்ல.

நமது எடுகளிலுள்ள ஜீவகாருண்யத்தை சரியாகச் சன சமூகங்களுக்கு அதிலுள்ள கருத்தின்படி சொல்லவில்லை. எழுதியிருக்கும் எடுகள் கோவில் பூசைக்கும் தீர்த்த யாத்தி ரைக்கும் எழுதப்பட்டுப் பாப்பான் பிழைப்பாக யிருக்கிறதே ஒழிய ஜீவகாருண்யத்திற்கு உபயோகப்படுவதில்லை. பல கோவிலுக்கு போய்ப் பார்ப்பானுக்கு வேண்டியதைக் கொடுத்துவிட்டால் எல்லாப்பாவமும் தீர்ந்துவிடுமென்றும் ஜாதி தெரியாமல் தொட்டால் ஆசாரமும் பக்தியும் கெட்டு விடுமென்றும் இருக்கையில் ஜீவகாருண்யம் இந்த எடுகளால் எப்படி உண்டாகும்? "இதிகாசங்களில் சிறந்ததான ராமாய ணமும் பாரதமும் கேட்டமாத்திரத்திலேயே எல்லா பாவமும் போய்விடும். ராமபஜனை செய்தீர்களானால் கண்டிப்பாய் மோக்ஷம் கிடைக்கும், சுந்தரகாண்டம் பாராயணம் பண்ணி னீர்களானால் உங்களுடைய எல்லாத் துக்கங்களும் தீர்ந்து சுக வாழ்வு வாழுவீர்கள் எங்களுக்கு நல்ல கணையாழியும் சேலை வேஷ்டியும் பணமுங்கொடுத்தால் புண்ணியம்" என்ப தான உபதேசங்களிலும் அதைக்கேட்டு அந்தபடியே நடப்ப தான நமது பைத்தியக்காரத்தனத்திலும் என்ன ஜீவகா ருண்ய மிருக்கும்? அது போலவே பாரதம் "துரோபதை மானம் காத்த கிருஷ்ணனைக் கும்பிட்டு அர்ச்சுனன் தவ நிலைச் சுருக்கம் படித்து அவன் வழியில் செய்ததையெல்லாம் மறந்து எனக்கு வேண்டியதை கொடுத்து விடுங்கள்" என் உபதேசத்தை கேட்பதாலும் அந்தப்படி நடப்பதாலும் வரும் ஜீவகாருண்யமென்ன? சீதைக்கும் துரோபதைக்கும் துக்கம் தீர்ந்தால் நமக்கு சந்தோஷமே. ராமனையும் கிருஷ்ணனை யும் பஜனை செய்வதில் நமக்கு ஆக்ஷேபனையில்லை. ஆனால் ஜீவகாருண்யம் அடங்கிவிட்டதா? இதுபோலவே பெரிய புரா ணமும் கண்ணைப்பிடுங்குவதும் மூக்கையறுப்பதும் குழந்தை யின் கழுத்தை ஒடிப்பதும் கையை அறுப்பதும் இதை போன்ற இன்னும் பல கதைகளையுமுடையது. இந்த இடத்

தில் சிவபெருமானிடம் வைத்த அன்பால் காட்டின பக்தியை குறைகூற வில்லை அதல்ல இங்கு விஷயம். அதனால் பக்தியும் மதபற்றுமுண்டாகலாம், ஆனால் அப்புராணம் கற்றுக் கொடுத்த ஜீவகாருண்யமென்ன? புராணம் பதினெட்டும் கணக்கற்ற ஸ்தல புராணங்களும் அதைக்கேட்ட மாத்திரத்திலும் அதில் சொல்லப்பட்ட முர்த்திகளை நினைத்த மாத்திரத்திலும் ஸ்தலத்தை மிதித்த மாத்திரத்திலும் முக்தி கிடைத்து விடுகிறதென்று சொல்லுகிறபடியால் பின் எந்த ஜீவகாருண்யம் வேண்டியிருக்கிறது! இந்து மதலோக குருவென்போர்கள் எல்லாரிடமும் வாங்கின பணத்தை தம் கூடடத்திற்கு மட்டும் வயிறு வெடிக்க உண்ணக்கொடுத்து, மற்றவர்களும் கூன் குருடு ஊடங்களும் பிச்சையோடிருக்கப் பார்த்திருக்கும் லோககுருவாலும் அவர்படித்த சாஸ்திரத்தாலும் சிஷ்ய கோடிகள் லோககுருவின் பாதத்தில் பணம் போட்டால் புண்ணியமென்று கற்றுக்கொண்டதாலும் எற்பட்ட ஜீவகாருண்யமென்ன? ஜாதிக்குரு வருஷத்திற்கு வருஷம் வாங்கும் காணிக்கை போக தன்பெண்டாட்டி பிள்ளைகள் ஆடம்பரமாகப் பிழைத்ததால் மடம் கடன்பட்டு விட்டதால் அதைத் தீர்த்தாலே எல்லாப்பண்ணியமும் வந்து விடுமென்று அதற்கும் பணம் வாங்கிப் போகிறான். அதனால் கிடைத்த ஜீவகாருண்யம் என்ன? கோவில் குருக்கள் பலவாறு அபிஷேஷகத்திற்குப் பலவித பட்டி கை எழுதி தரகு நீக்கி கடைக்காரனும் குருக்களும் எடுத்து கொள்வதுமன்றி, குருக்கள் மறுபடியும் கும்பிடவந்தவர்களிடம் தர்க்கம் பண்ணித்தக்ஷணைபெற்றுக்கொள்ளுவதில் இருக்கும் ஜீவகாருண்யமென்ன? எல்லாக் கோவில்களுக்கும் கக்ஷத்திரம் தவறாமல் கட்டளை ஏற்படுத்திக் குருக்கள் வீட்டில் கும்மானம் போடச்செய்வதால் வரும் ஜீவகாருண்யமென்ன? புரோகிதர்களுக்குப் பாதாக்ஷையிலிருந்து படுக்கை ராக்ஷவரையிலும் கொடுக்கும் தானத்தால் வரப்போகும் ஜீவகாருண்யமென்ன? காசி கயா ராமேஸ்வரம் முதலிய தீர்த்தக்கரையில் கெட்டுப் போனபாப்பானுக்கும் திண்டு தலையணையில் சாய்ந்து கொண்டே இருக்கும் பண்டாக்களுக்கும், அள்ளிக்கொடுக்கும் பணம், பூரிக்கும் நெய்யும் புஷ்டிக்கு அல்வாவும் மப்புக்கு குடாக்கும் மயக்கத்திற்கு அபினியுமாகுமே ஓதிய வந்த ஜீவகாருண்யமென்ன? சாகும்போது ஒரு மாடும், செத்தபின் ஒரு மாடும், கருமாந்திரத்திற்கு ஒரு மாடும் பார்ப்பானுக்குக் கொடுத்தால் அந்த ஜீவன் பாவம் நீங்கி சொர்க்கத்திற்குப் போவதாயிருக்கையில் ஜீவகாருண்ய கவலை ஏன்?

தேவாரம் இரண்டு பாட்டும், திருவாய் மொழி இரண்டு பாட்டுஞ் சொல்லி, வில்வமோ துளசிபோவிக்கிரகத்தின் தலையில் போட்டு அத்தழையை எடுத்து தன் தலையிலும் வாயிலும் போட்டுக்கொண்டால் பாவமெல்லாம் கடவுள் ஏற்றுக்கொண்டு புஷ்பவிமானத்தை அனுப்புவதாயிற்றால் ஜீவகாருண்யத்தின் கவலை எதற்காக? தன் மதப்பற்றுதலுக்கு ஏற்றபடி ஒரு ஏடு எழுதிவிட்டாலும், எழுதி வைத்திருக்கும் எட்டிற்கு அர்த்த மெழுதினாலும், அல்லது எத்தனையோ சாமிகளில் ஒரு சுவாமிக்கு பத்துப்பதிகம் எழுதி விட்டாலும், ஜீவகாருண்யம் முதிர்ந்தவர்களாகவே காம் பாராட்டுகையில் மாணாக்கர்களும் படித்தவர்களும் ஜீவகாருண்யத்திற்கு ஏன் அதிக தூரம் போகவேண்டும்? சாகையில், எவ்வளவு பொருளிருந்தாலும் கோவிலுக்கு சிறிது மானியமோ பாப்பானுக்குச் சத்திரமோ இடிந்த பாழும் கோவிலை கட்டியோ வைத்துவிட்டால் அவன் செத்தவுடன் மோக்ஷத்திற் ஏற்றுவதாயிருந்தால் அவன் இனித்தன் பணத்தால் சம்பாதிக்கவேண்டிய ஜீவகாருண்ய மென்ன இருக்கிறது? ஏகாதசிக்கு ஸ்ரீரங்கத்திற்கும், திருவாதிரைக்கும் சிதம்பரத்திற்கும், கார்த்திகைக்குத் திருவண்ணாமலைத் தீபத்திற்கும், பூசத்திற்குப் பழனிக்கும், ஆடிஅமாவாசைக்கு ராமேஸ்வரத்திற்கும், இப்படியே ஒவ்வொரு நட்சத்திரத்திற்கும் ஒவ்வொரு கோவிலுக்கும் போய் வந்தால் அந்தப் பலன் அநேக நாள் நிறைந்துகிடக்குமென்று நம்பி இருக்கையில் வேறு ஜீவகாருண்யம் உள்புக இடமெங்கே? இதையெல்லாம் விட ஒருதரம் காசிக்குப் போய் கங்கையில் முழுகிவந்தால் எல்லாப் பாவங்களும் நசித்துப் போகிறதென்கையில் ஜீவகாருண்யங்களையே நம் சமூகம் நம்பி உபதேசமாகவும், மதமாகவும் செய்து வருகிறது. இதனால் யாதொரு பிரயோஜனமும் இதுவரையிலு முண்டானது மில்லை; இனி உண்டாகப் போவதுமில்லை என்னும்படியான உண்மையை எப்பொழுது தெரிந்து கொள்ளப் போகிறார்கள்? முன் சொன்ன வழிகளிலல்லாமல் இந்துமதம் ஜீவகாருண்யத்தைச் சரியான வழியில் உபயோகித்திருக்கிறதா என்பதை முதலணியிலிருக்கும் தேசங்களைப் பார்த்துக் கவனியுங்கள்.

மூப்பத்திரண்டு தர்மமும், வித்வானின் ஜீவகாருண்யப் பாட்டும் எடுகளும் எனக்கு தெரியும். கோவில்கள், திருகாட்கள், பண்டிகைகள், ஆசாரங்கள், மந்திரங்கள், பூசைகள் யாகங்கள், என்னதான் செய்யினும் மனிதன் தன் சக்திக்கு ஏற்றவாறு ஜன சமூகத்திற்குத் தன் கடமையை செய்யாது விட்டால் அவன் கடவுளால் தள்ளப்படுவான் என்னும் சாஸ்திரங்களும் எனக்குத்தெரியும். மனுஷ்ய ஜாதியில் பரம ஐக்யத்தையும் ஆழ்ந்த பந்தத்தையும் சாந்தியையும் தர்ம சிந்தையையும் உடையதாய் மனிதர் பரமார்த்தங்களின் பொருட்டுக் காட்டில் கூடிய அந்தக்காலத்தில் எழுதின எடுகளை மறைத்து தங்கள் அகப்பாவத்திற்கும் காரியத்திற்கும் ஏற்றாப்போல மறைத்த எட்டின் போல் பல எடெழுதி தங்கள் பெருமையும் லாபமும் என்றும் நிலைத்திருக்க அநேக எடெழுதி அதையே ஜன சமூகங்களுக்குச் சொல்லி அவர் களை என்றைக்கும் ஒரு பலனும் அடையாத வழிக்குக் கொண்டுவந்து விட்டு இனியும் அதிலேயே புகுத்திக்கொண்டு போகும் ஏற்பாட்டைத் தெரிந்துதான் ஒரு காலும் நன்னிலைக்கு வரமுடியாத குருக்கள் புரோகிதர்கள் இவர்களின் மத மாகிய இந்துமதம் ஒழிய வேண்டுமென்கிறது 'குடி அரசு'. பார்ப்பான் தங்கள் வயற்றிற்கு உழைப்பில்லாமல் உண்பதற்கு என்ற கடவுள் வழிபாடும் தங்களுக்கே தானமும் கொடுத்து வந்தால் அதனால் எல்லா ஜீவகாருண்யமும் வந்துவிடும் என் கின்ற சிறு வாக்கியமும் இல்லாத புஸ்தங்களே இல்லை. அன் றியும் ஜன சமூகங்களாவது இந்தப் புரட்டைப்பற்றி தெரிந்து கொள்ள மார்க்கமுமில்லை.

வேதங்களை எல்லாம் சத்தேகமறக் கற்று ஒழுக்கம் நிறைந்து தபசால் மெலிக்தவர்கட்குத் தானமும் ஜன சமூகங் களின் மெலிவுக்குத் தகுந்தபடி அதனதன் அவசியத்திற்கு ஏற்றதாய் எழைகளுக்கு செய்வதே தருமமென்றும் விதித்த இந்து சாஸ்திரத்தின்தானதர்ம வேறுபாட்டைப்பற்றி ஜனங் களுக்கு எவ்வளவு தெரியும்? அதைத் தெரிந்தவர்கள் எவ் வளவு தூரம் விளக்கிக் காட்டி இருக்கிறார்கள்? தெய்வத்தை யும், சாஸ்திரத்தையும், புராணத்தையும் சொல்லி எல்லாம் பார்ப்பானுக்கே கொடுத்துவிடுங்கள் என்றுதானே விளக்கி விளக்கி யிருக்கிறார்கள். சாஸ்திரமோ யாருக்கும்தெரியாது; படிக்கவும் கூடாது. சுவாமியைச் சொல்லுகிறவனும்

சுவாமியைக் கண்டதில்லை. நாம் காணவேண்டுமானால் அக்கினியில் குளித்தெழ வேண்டும். இதையெல்லாம் ஆலோசித்துத்தான் 'குடி அரசு' பார்க்கக்கூடாத சாஸ்திரமும் பார்ப்பான் சுவாமியும் நமக்குப் பலனை உண்டுபண்ணாதென்கிறது. கோவிலுக்குப்போகும் வழியில் வியாதியினாலே சோர்ந்தோ கீழே கிடப்பவனுக்குத் தண்ணீர் கொடுத்தால் அதனால் ஏற்படும், தீட்டு கோவிலுக்குப் போவதைத்தடுத்து விடுமென்று நினைத்து முகத்தைத் திருப்பிகூட அவனைப் பார்க்காமல் போய்விடுகிறார்கள், பழனிக்கும் திருப்பதிக்கும் போகிறவர்களில் வியாதியால் வழியில் அகோர ஜீவகாருண்ய பக்தகோடிகளின் முன்னணியில் தாகத்திற்கு தண்ணீர்கில்லாமல் செத்தவர்கள் அநேகர். கோவிலுக்குப் போனையில் தீட்டுப்படாமல் சாமியைப் பார்க்க வேண்டும், வருகையில் தீட்டுப்படாமல் சுதியில் வீடுவந்து சேரவேண்டும், மத்தியில் அகோரா கோவிந்தா வென்பதோடு ஜீவகாருண்யம் முடியவும் வேண்டுமே ஒழிய மனிதனுக்கு மனிதன் செய்ய வேண்டிய கடமையைப்பற்றி பக்திமான்கள் படிக்கவில்லையே! சிலரிடம் வாய்பேசாமலும் சிலரைப்பார்க்காமலும் சிலரைத் தொடாமலும் தான் மட்டும் மறைப்பு கட்டி உண்ணும் இந்து மதத்திற்கும் ஜீவகாருண்யத்திற்கும் பொருத்த முண்டாகுமா? வேத மத சாஸ்திரப்படிப்பில் மலையாள தேசம் போனதே. அந்த தேசத்தில் மனிதனை மனிதன் செய்யும் கொடுமைக்குக் காரணம் எந்த இந்துமதமோ அந்த இந்துமதம் ஒழிந்தாலல்லவா ஜீவகாருண்யம் நிலைக்கும். படித்தவர்களும், பக்திமான்களும், உயர்ந்த ஜாதிக்காரர்களும் ஜீவகாருண்யத்தை தங்கள் வாயளவில் சொல்லி, கோவில் பூசை முதலானவைகளை பிராமணனுக்கும்தான் தர்மம் இவர்களுக்குச் செய்யவேண்டியது பணக்காரர்களுக்கும் உபதேசித்து இத்துடன் ஜீவகாருண்யத்தை முடித்து விடும் இந்து மதம் ஒழிய வேண்டுமென்றுதான் 'குடி அரசு' சொல்லுகிறது.

விஞ்ஞான வெற்றி.

(எச். எம். ராபின்சன்)

மரண பயமில்லை.

இந்நாளிலே எத்தனையோ நூதன மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இறந்து போனவர்களை உயிர் பிழைக்கச்செய்யும் மருந்தைக் கண்டுபிடித்ததைப்போல் மக்கள் வேறு எந்த மருந்துகளைக் கண்டும் ஆச்சரியமடையவில்லை மக்கள் இதை ஒரு புதுமை என்றே கருதுகின்றனர்.

மனிதன் மரண பயத்தால் அஞ்சிக்கிடந்தான். இதை டாக்டர் ஆல்பர்ட் எஸ். ஹைமன் கண்டுபிடித்த செயற்கை இருதயத் துடிப்பால் ஒழித்துவிட்டார் என்றே சொல்லவேண்டும். இருதயத் துடிப்பு நின்று நீண்ட நேரமாய் விட்டாலும் மரணத்தினின்று அவனை மீட்கச்செய்யலாம் என்று அவர் நிரூபித்திருக்கிறார். அவர் கண்டுபிடித்த கருவி பரீக்ஷிக்கப்பட்டு வருகிறதென்று கருதவேண்டியதில்லை. இப்பொழுது எத்தனையோ பேர் மரண்வாயிலிருந்து காப்பாற்றப்பட்டிருக்கின்றனர்.

இப்புதுமையில் அவர் எவ்வித மான பெரிய சூத்திரத்தையும் கையாளுவதில்லை. அதை விளக்கினால் மிகச் சாதாரணமானதாகவே விளங்கும். அதாவது இவர் கண்டு பிடித்த செயற்கை இருதயத் துடிப்பு என்றதருவி, இருதயத்திலுள்ள மின்சாரச் சக்தியை இக்கருவியின் மூலமாக இருதயத்தில் செலுத்தப்படுகிறது.

நமது இரத்தாசயத்துக்குமேல் மின்சார சக்தியை உண்டு பண்ணும் செல்ஸ் இருக்கின்றன. இவைகளுடைய மின்சாரச்சக்தியால் இருதயத்தின் தசைகள்நிமிஷத்துக்கு 72 தடவை சுருங்கவும், விரியவும் செய்கின்றன. உடற்கூற்று சாஸ்திரிகள்இப்பாகத்தை 'சினுஸ்நோட்' என்றழைக்கின்றனர்இதை

'இருதயத்தைத் துடிக்கச்செய்யும் கருவி' என்று சொன்னால் சாதாரணமாக விளங்கும். டாக்டர் ஹைமென் கண்டு பிடித்திருக்கும் கருவி இந்த செல்ஸ்களுக்குமின்சாரத்தைச்செலுத்தி தசைகளை இயங்கச் செய்கிறது.

கருவியின் வரலாறு.

சுமார் பத்து வருஷங்களுக்கு முன் டாக்டர் ஹைமன் நின்றுபோன இருதயத்துடிப்பை எப்படி மீண்டும் அதற்கேற்ற மின்சாரத்தைச்செலுத்தி துடிக்கச் செய்வது என்று சிந்திக்க லானார். வெகு பிரயாசைக்குப் பின் 1/1000 ஓல்ட் கரண்ட் இருந்தால் போதும் எனக் கண்டு பிடித்தார்.

அடுத்தப் பிரச்சினை இந்தக் கரண்ட்டை எப்படி உள் செலுத்துவது என்பது. இதற்காக ஐந்தரை அங்குல முள்ள தங்க ஊசியைக்கண்டுபிடித்தார். இந்த ஊசிக்குள் 1/100 அங்குல தூரத்தில் இரு எலக்ட்ரோட்ஸ் வைக்கப்பட்டிருக் கின்றன. இவைகள் ஒரு சிறு ''ஜெனரேட்டரா''ல் இணைக் கப்பட்டிருக்கின்றன. இதுதான் அந்தக் கருவியின் வரலாறு.

சோதனை.

இக்கருவியைப்பரிசோதிப்பதற்காகஇனியாபன்றியைகொ ன்று அதன் இருதயத்தில்இந்தஊசியால்மின்சாரத்தைச்செலுத் திபார்த்தார். பன்றியைக் கொன்று 110 செக்கண்டுகளுக்குள் அதன் இருதய துடிப்பு முற்றிலும் நின்றுவிட்டது. மேலும் 120 செக்கண்டுகள் கழிந்த பின் டாக்டர் ஹைமென் தனது சோதனையை ஆரம்பித்தார்.

ஊசி செலுத்தின 30 செக்கண்டுகளுக்குள் பன்றியின் இருதயம் துடிக்க ஆரம்பித்தது. நிமிஷத்திற்கு 64 தடவை துடிக்க ஆரம்பித்து, ரத்தம் சிறு ரத்தக்குழாய் வழியாகப் பாய ஆரம்பித்தது. 60 செக்கண்டு ஆனதும் ஊசி எடுக்கப் பட்டு விட்டது. சிறிது நேரத்திற்குள் பன்றி உயிருடன் எழுந்து ஓட ஆரம்பித்துவிட்டது. இம்மாதிரி டாக்டர் பல இனிபா பன்றிகளைச் சோதித்து பார்த்தார். இவைகளிலெ ல்லாம் வெற்றி பெற்றார்.

மனித சோதனை.

மிருகங்களில் வெற்றிபெற்ற பின், மனிதனைப்பிழைக்கச் செய்வதில் சோதிக்கலானார். முதலாவது இறந்துபோன நோயாளியிடம் சோதனை செய்ய ஆரம்பித்தார்.

ஒரு நடுத்தர வயதுள்ள ஒருவர் நிமோனியா கண்டு ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வந்தார். நிமோனியா முற்றி எம்பீமாவில் வந்து முடிந்தது. வையிற்றின் உள்ளே உள்ள சீழை வெளிப்படுத்துவதற்காக ரணசிகிச்சை செய்தார். அனேகமாக இந்தவிதமான சிகிச்சையில் உயிர் பிழைப்பது மிக அரிது. அப்படியிருக்க, இம்மனிதனையும் டாக்டர் மிக ஜாக்கிரதையுடன் ரணச்சிகிச்சை செய்தார். நோயாளி உயிர் துறந்தான். அவனை உயிர்ப்பிப்பதற்காக அந்த சர் ஜன் அட்ரனலைன் ஊசியும் குத்திப்பார்த்தார். எவ்வளவு பிரயாசை பட்டும் முடியவில்லை. சர்ஜன் கையை விரித்துவிட் டார். பிணத்தை ஆப்பரேஷன் ரூமைவிட்டு அப்புறப்படுத்த சர்ஜன் உத்தரவு மிட்டு விட்டார். அப்புறப்படுத்த ஆயத்தம் செய்யும் சமயத்தில் ஒருவர் டாக்டர் ஹைமனைக் குறித்து சர்ஜனுக்கு நினைப்பூட்டினார். உடனே அவருக்கு ஆள் அனுப்பப்பட்டு அவரும் 8 நிமிஷத்தில் வந்து சேர்ந்தார். நிமோனியா பன்றிகளை எந்த ஊசியால் குத்தி உயிர்பித்தாரோ அதே ஊசியால் அம்மனிதனின் வலப்பக்கத்தில் உள்ள மூன்றாவது நான்காவது மார்பெலும்புகளுக்கிடையே தமது ஊசியை செலுத்தினார். அம்மனிதனும் உயிர்த்தெழுந் தான். அநேக நாட்கள்வரை உயிருடனிருந்தான். நிமோனியாவின் கடுமையால் கடைசியில் அந்நோயிக்கே இரையானான.

இதற்கு பிறகு சில மாதங்களில் பலரை பரீட்சித்துப் பார்த்தார். வாயுவு குத்தலாலும், தண்ணீரில் மூழ்கிப் போவதாலும், மற்றும் பல அகால காரணத்தாலும் இறந்து போன பலரை உயிர் பிழைக்கச் செய்திருக்கிறார்.

இறப்பின் வகை.

இறப்பு இருவகைப்படும், ஒன்று அகால மரணத்தால் நேரிடும் இறப்பு, மற்றொன்று நீண்டநாள் நோய்வாய்ப்பட்டு அதனால் ஏற்படும் இறப்பு, இவ்விரண்டுவகை இறப்பில் மூக்கியதே உயிர் பிழைக்கச்செய்ய முடியும். உயிர் போய் 15 முதல் 20 நிமிஷங்களுக்குள் செயற்கை முறையால் பிழைக்கச்செய்யலாம் என டாக்டர் ஹைமன் கூறுகிறார். இதுவரை இக்கருவி உபயோகிக்கப்பட்டதில் 4-ல் ஒருவர் உயிர் பிழைத்திருக்கின்றனர்.

ஆரம்பத்தில் இக்கருவி 90 பவுண்டு அல்லது ராத்தல் நிறை இருந்தது. இதன் கிரயம் 12,000 டாலர். 1931-ம் வருஷத்தில் ஒருசிறிய சூட்கேஸ் அளவுக்குச் சிறியதாக குறுக்கப்பட்டுவிட்டது. அதன் இடையும் 40 ராத்தலாய்விட்டது. அதன் பின் மூன்று வருஷத்தில் அக்கருவியின் சைஸ் சிகரெட் பெட்டியளவுக்கு குறுகிவிட்டது. கடைசியில் 1936-ல் டாக்டர்ஹைமன் அக்கருவியை 6 அங்குலநீளத்துக்குக்குறுக்கிவிட்டார். அதன் எடையையும் ஒரு ராத்தலுக்குள்கொண்டுவந்துவிட்டார். இவ்வளவு சிறியதாயிருந்தும் ஆதியில் கண்டுபிடித்த அந்த அளவுக்கே இதனால் காண்ட் செலுத்தப்படுகிறது. இப்பொழுது அதன் கிரயம் 50 டாலருக்கு குறைந்துவிட்டது. ஆனால் விலைக்குக் கிடைப்பதுதான் கஷ்டமாயிருக்கிறது.

இருதய சம்பந்தமான நோய்களைக் கண்டுபிடித்து அறிந்து அதைத் தடுப்பதற்காகத் தோன்றியிருக்கும் விட்கின் பௌண்டேஷன் நிர்வாகக் கமிட்டியின் தலைவர் ஜேக்கப் வீர்க்கின் தர்மமாக அங்கீகரிக்கப்பட்ட ஆஸ்பத்திரிகளுக்கு இக்கருவியை வழங்கிவருகிறார். இதற்குப் பிறகு மற்ற சொந்த வைத்தியர்களுக்குக் குறைந்த விலைக்கு இக்கருவிகளை அக்கமிட்டியார் வழங்குவார்.

தமிழுக்கு ஹிந்தி ஈடாகுமா?

(சர். கே. வீ. ரெட்டி நாயுடு சொற்பொழிவு)

சென்ற பிப்ரவரி மாதம் 27—2—38-ந் தேதி காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்பாளர் மகாநாட்டுத் தலைவர் சர். கே. வி. ரெட்டி நாயுடு செய்த தலைமைப் பிரசங்கம் வரு மாறு:—

வரவேற்புக்கழகத் தலைவரே, பிரதிநிதிகளே, நண்பர்களே,

நன்றி கூறல்.

இப்பெரும் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் கௌரவத்தை எனக்கு அளித்தமைக்காக என் மனப்பூர்வமான வந்தனத்தை உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உங்களுடைய அன்பான அழைப்பை ஏற்றுக் கொள்ள முதலில் நான் தயக்கமடைந்தேன். எனினும், இந்தியைக் கட்டாயப் பாடமாக்குவது, ஒரு மகத்தான பிரச்சினைமட்டு மல்லாமல், நமது பாஷை, கலை, நாகரீகம் ஆகியவைகளைப் பாதிப்பதாக இருப்பதை உணர்ந்த பிறகு, உங்கள் அழைப்பை ஏற்றுக்கொண்டேன்.

மேலும், என்னை இந்த மகாநாட்டிற்குத் தலைமை வகிக்கக் கேட்டுக்கொள்வதன்மூலம், இந்த பிரச்சினைத் தமிழர்களை பாதிக்கக்கூடியதோடு, இந்த மாகாணத்திலுள்ள நான்கு பாஷா பிரதேசங்களையும் பாதிப்பதுஎன்பதை ஆச்சாள்வோர் அறியட்டும் என எண்ணுகிறீர்கள் என நம்புகிறேன்.

அது முற்றிலும் உண்மையேயாகும். இவ்விஷயத்தில் உங்களுடன் ஒத்த கருத்துடைய பல ஆந்திரர் இருக்கிறார்களென உறுதி கூறுகிறேன்.

துரோவிடாத்தம் ஓடும் ஒருவனாவது, இந்த வேண்டாத இந்தி பாஷை ஏற்கனவே பாரத்தைச் சுமந்துள்ள நமது சிறுவர்களின் உழும், சாந்தத்தோடு இருக்கும் நம்வீட்டினுள்ளும் புகுத்தப்படுவதைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டான்.

முதலிலேயே ஒன்று கூறிவிடுவோம். பிள்ளைகளும் பெற்றோரும் விரும்பினால் இந்தியைப் படிக்கலாம். அதை நாம் கண்டிக்கப் போவதில்லை. கிரேக்கபாஷையானாலுஞ் சரி, அன்றி சீன பாஷையானாலுஞ் சரி, யார்வேண்டுமானாலும் தமக்குப் பிரியமான பாஷையைப் படிக்க உரிமை இருக்கிறது. கட்டாயப் படுத்தி இந்தியைத் திணிக்கும் செய்லையே நாம் கண்டிக்கிறோம், எதிர்க்கிறேம்.

பாரதியாருக்குப் பாராட்டு.

சர்க்கார் (காங்காஸ் சர்க்கார்) கொண்டுவரும் இத்திட்டத்தை எத்தக்காரணங்களுக்காக, எதிர்க்கிறோம் என்பதை மிகத் திறமையாக, தோழர் எஸ். சோமசுந்திர பாரதியார் அவர்கள், முதன் மந்திரி, கனம் ராஜகோபாலாச்சாரியாருக்கு விடுத்த ஒரு பகிரங்கக் கடிதத்தில் விளக்கிக் கூறியுள்ளார்.

தமிழ் நாட்டின் நிலகமெனத்திகழும் அண்ணாமலை சர்வகலாசாலையிலே, தோழர். பாரதியார், தமிழ்ப்போராசிரியராக உள்ளார். அவர் கலை பல கற்றவர். ஆகவே இவ்விஷயமாக, திடமான அபிப்பிராயங்கூற மிகத்தகுதி வாய்ந்தவர்.

அவர் காங்காஸ் வாதி. சென்ற தேர்தலின் போது தன்னால் கூடுமான அளவு காங்காஸ் கட்சியையே ஆதரித்து ஓட்டுகள் வாங்கித் தந்தவர்.

ஆகவே, அவருடைய அபிப்பிராயங்களைக் கட்சிச்சண்டை, மனமாச்சரியங் காரணமாக எழும்பியனவு, எனப் புறக்கணிக்கவும் மூடியாது.

அந்த பகிரங்கக் கடிதத்திலே, அவர் காட்டியுள்ள வாதங்களை விரித்துக் கூறவேண்டிய அவசியமில்லை. இவ்விஷயத்தில், அதிகாரத்தை உபயோகித்துத்திணிக்க முயல்வது, "வேண்டப் படாதது, அவசியமற்றது, புத்திசாலித்தனமு மாகாது" என்று அவர் கூறியுள்ளார்.

இந்தத்திட்டம் நிறைவேற்றப் படுமானால், பிராஜா உரிமை பாதிக்கப்படுவதோடு, தமிழின் தனிப்பெருமை குன்றும், தராசிட நாகரீகம் சிதையும். அவர் எடுத்துக் காட்டியுள்ளபடி, இந்தப் போக்கிற்கு இரண்டு காரணங்களுண்டு.

என் இந்த போரம்?

ஒன்று சில வடநாட்டுத் தலைவர்கள் கூடிய ஒரு இரகசிய கூட்டத்திலே, தோழர். ராஜகோபாலாச்சாரியார், காங்கரஸ் பதவி ஏற்றால், தான், இந்தியைக் கட்டாய பாடமாக்கிப் பரப்புவதாக ஒப்புக் கொண்டு, வாக்களித்தது. இரண்டாவது, சமஸ்டி ஏற்பட்டால், அகிலஇந்தியாவிற்கும் ஒரு பொதுப் பாஷை தேவையாக இருக்குமென்பது. தோழர் பாரதியார் இந்த இரண்டு காரணங்களுமே, பொருத்தமற்றன, வாதத்தின் முன்பு நிற்காதன, என்பதைக் கூறியுள்ளார்.

இந்த மாகாண மக்களைக் கலந்து ஆலோசிக்காமல், சொந்த முறையிலே, வாக்களிக்க, தோழர் ராஜகோபாலாச்சாரியாருக்கு உரிமை இல்லை.

இது காங்காரை மட்டும் சேர்ந்த விஷயமல்ல. காங்காரிலும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் கட்டாய இந்திப் பிரவேசத்தை எதிர்க்கிறார்கள்.

எவ்வளவு பெரியவராயிலும், ஒருவர்தானாக ஒரு ஏற்பாடு செய்து கொண்டால், அது மற்றவர்களையும் கட்டுப்படுத்தக் கூடியதாகாது.

ஹிந்தி நமக்கு அன்னிய மொழியே!

இரண்டாவது காரணத்தையும் கண்டித்து, தோழர். பாரதியார், பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு இந்தியைக் கட்டாயப்படுத்துவதின் தவறை, பல காரணங்களுடன் விளக்கியுள்ளார்.

அவைகளை நீங்களறிவீர்கள். நான் மறுபடி அவைகளைக் கூற ஆசைப்படவில்லை. மனிதனுடைய கருத்துக்களை, பாஷை எவ்வளவு தூரம் உருவாக்குகிறது என்பதை இன்றைய (காங்கரஸ்) சர்க்கார் உணரவில்லை.

மக்களுடைய பாஷையை ஒட்டியே மனோ வளர்ச்சி இருக்கிறது. குழந்தைகளின் கருத்து வளர்வதும், பிறகு

வாழ்க்கையிலே இலட்சியங்கள் எற்படுவதும், பாஷை, கலை ஞானம் ஆகியவைகளினாலேயேயாகும்.

கார்க்கர்ஸ் தலைவர்கள் பழைய காலத்திய கலைகளிலே பற்றுக்கொண்டவர்கள். அவர்களுடைய தேசீய வாழ்க்கைத் தத்துவங்களும் கருத்துக்களும் நம்மை துவாபர யுகத்திற்கோ, கிரேதா யுகத்திற்கோ அழைத்துப்போகக்கூடியன.

அப்படிப்பட்ட இவர்கள் அன்னியபாஷையை நம்மிடையே புகுத்துவானேன். தொண்டர்களாகிய நமக்கு, ஆங்கிலம் எப்படி அன்னிய பாஷையோ, அப்படியே ஹிந்தியும் அன்னிய பாஷைதான். அதிலும், ஹிந்தி பாஷை, பழைய நாளைய பாஷையுமல்ல, பூரண வளர்ச்சி அடைந்ததுமல்ல.

தமிழெங்கே, ஹிந்தி யெங்கே!

நான் ஹிந்தி பாஷையைக் கற்றறிந்தேனில்லை, எனினும், எனக்குத் தெரிந்தவரை, 13-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலான், ஹிந்திபாஷையின் ஆதி கவி எனப்படும் "சண்ட் பார்டி" என்பவரிருந்தாரென அறிகிறேன்.

அவர், "பிரிதிவிராஜராஸ்யூ" என்ற நூலை எழுதினார். அந்தப் பாஷையிலே அதற்கு முன்னால் வேறெந்த கலை இருந்ததாக நாமறியோம்.

ஆனால் தமிழ், இந்தியாவின், ஆதிகாலபாஷை. தமிழ் இலக்கணமாம் 'தொல்காப்பியம்' இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இயற்றப்பட்டது.

தமிழெங்கே? ஹிந்தி எங்கே? இரண்டிற்குமா தட்டிப்போட்டுப் பார்ப்பது! தொல்காப்பியம் என்பது ஒரு இலக்கண நூல். ஒரு பாஷை நல்ல வளர்ச்சி அடைந்த பிறகுதான் அதற்கு இலக்கண நூல் தேவையாக இருக்கும்

ஆகவே இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே தமிழ்மொழி ஒரு உன்னத வளர்ச்சியைப் பெற்றிருந்தது என்பது விளங்கும. தமிழ்மொழி, பண்டைக்கால மொழி என்பதோடு, கவர்ச்சி, வனப்புநிரம்பியமொழி. அதன் அடிகளை நெருங்கவும் ஹிந்தியினால் முடியவே முடியாது. "கவிதை இயற்றும் வகைக்கு ஏற்றபடி மொழியை வளர்த்ததில், சமஸ்கிருதத்தைவிட தமிழே நிகரற்றது" என டாக்டர் பர்னல் கூறுகிறார்.

"திராவிட மொழிகளின் இலக்கணங்களை ஒப்பிட்டுப் பார்த்தல்" என்ற புத்தகத்தை எழுதிய ஆசிரியர் கால்டுவெல் தமிழில் கலைச் சொற்களை, ஒரு கவி திடீரென இயற்றி இருக்க முடியாது. நீண்ட காட்களாக, அவைகள் உற்பத்தி செய்யப் பட்டு, வளர்ச்சி அடைந்திருக்கவேண்டும், என்பதைக் கவனிக்கும்போது, தமிழ், மிகப்புராதனகாலத்திலிருந்தே உன்னதமாக வளர்க்கப்பட்டு உச்சநிலை அடைந்தது" எனக் கூறுகிறார்.

இத்தகைய ஆதிமொழி என ஹிந்தியைக்கூற முடியுமோ? குறள், தேவாரம், திருவாசகம், போன்ற ஒரு மணிக்கு ஒப்பான ஒரு நூலேனும் ஹிந்தியில் காட்ட முடியுமா? ஹிந்தி, மிக நன்றாக வளர்ச்சி அடைந்த பாஷை என்றுகூட வைத்துக் கொள்வோம். அதற்காக, அதை நமது மாகாணத்தில் கட்டாயப் படுத்திப் புகுத்தவேண்டுமோ?

வீணுக்கு என் இந்த உழைப்பு?

10, 12வயதுள்ள முதல் மூன்று பாரங்களில் வாசிக்கும் மாணவர்களுக்கு, திணிக்கப்படவேண்டுமென பிரயத்தனம் நடக்கிறது. ஏற்கனவே, இந்த மாணவர்களின் அறிவுத்திறனுக்கு அதிகமான பாடவகைகள் உள்ளன. இந்தப் புது மொழியைப் போப்ப ஏராளமாவான பணச் செலவாகும், ஏராளமான உழைப்பும் தேவையாக இருக்கும். காலம், பணம் இவற்றை, கட்டாய ஹிந்தித்திட்டத்திற்கு விரயமாக்காது, மாணவர்களின் நன்மைக் கேற்ற வேறு எதற்கேனும் உபயோகித்தால் மிக இலாபகரமாக இருக்கும். இந்த வகுப்புகளில் படிக்கும் மாணவர்கள் மீது மேலும் சுமையை ஏற்றுவது அடாது.

கோமாளிக்காரணங்கள்.

எந்த காரணத்திற்காக ஹிந்தி கற்பிக்கப் படவேண்டும்? அதனால் என்னபயன் விளையும்? மூன்று ஆண்டுகளுக்குக் கட்டாயப் படுத்தப்படுவதால், ஹிந்தியை மாணவர்கள் படிப்பதால், அவர்களுக்கு அந்த பாஷா ஞானம் அப்படியே இருக்குமென்றா எதிர் பார்க்கப் படுகிறது?

சிறு பிராயத்தில் இந்தியைப் படிப்பதால் இவர்கள் பெரியவர்களாகி, வேலை தேடிக்கொண்டுவடநாட்டிற்குச்செல்லும்போது, ஹிந்தி பாஷாஞானம் உதவியாகஇருக்குமெனக்கூறுவது வெறும் கோமாளிக் கூத்தாகும்.

கலை முறை கலை முறையாக நமது மக்கள், யாத்திரை, வியாபாரம் முதலியவற்றின் பொருட்டு வடநாடு சென்று வருகிறார்கள், ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்கிக் கற்கவேண்டுமென்ற அவசியம் ஒன்றும் ஏற்படவே யில்லை.

ஏதோகொஞ்சம் பேசத்தெரிந்தால் போதும் வடநாடு சென்று, திரும்ப. ஹிந்தியைப் படித்துவிட்டால் நமது வாலிபர்களுக்கு வடநாட்டிலே வேலை கிடைக்குமெனக் கூறப்படுவது மற்றொரு கேலிக்கூத்து.

வடநாட்டிலேபடித்தவர்களிடைவேலையில்லாத்திண்டாட்டமில்லையா? முதல் மூன்று பாகங்களில் ஹிந்தியைக்கற்றுக்கொண்டதற்காக' மதராசிகளை'' சுலபத்திலே, வட நாட்டு மாகாணங்கள் வேலைக்கு அமர்த்திக்கொள்ளவா போகின்றன? இவைகள் சுத்த அபத்தம், ஆகவே இவைகளைப் பொருட்படுத்துவதற்கே யில்லை.

மர்மம் இதுதானோ!

இந்தியை வைத்தே திருவோப் என காங்கரஸ் மந்திரிகள் பிடிவாதமாக இருப்பதன் காரணந்தான் என்ன! இம் மாகாணத்துப் பார்ப்பனர் தங்கள் மூதாதைகள் சரிதை, அவர்கள் பாஷையாம் சமஸ்கிருதம், இவைகளிடம் உள்ளபற்றை, மறந்து விடவில்லை எனக் கூறப்படுகிறது.

கடந்த மூன்று நான்கு ஆண்டுகளாக இந்தியைப் படித்து விட்டு இருப்பவர்களுக்கு, காங்காஸ்காரர், வேலை தேடிக்கொடுக்கவே இட்பிரயத்தனம் செய்கிறார்கள் எனவும் கூறப்படுகிறது.

இவர்களை ஆசிரியர்களாக ஏற்படுத்திவிட்டால், அவர்களும் வயிறு வளர்க்கமுடியும், காங்காஸ் பிரசாரத்திற்கும் அவர்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம். ஆக இவ்விரண்டு காரியங்களுக்காகவுமே, திட்டம் போடப்பட்டிருக்கிறது எனவும் சொல்லப்படுகிறது.

இதைப்போன்ற ஏதாவதொரு காரணத்தைத் தவிர இவ்வளவு அவசர அவசரமாக ஹிந்தித் திட்டத்தைக் கொண்டுவந்து பதைபதைத்து நிற்பதற்கு, வேறு என்ன காரணத்தைக் கூறுவது. ஒருவேளை இவைகளே சரியான காரணங்களாக இருக்கக்கூடும்.

ஆனால் இவைகளேதான் காரணங்களாக இறக்கவேண்டுமெனக் கூறவும் தேவையில்லை. இந்திய ஒற்றுமைக்கு ஒரு பொது மொழி அத்தியாவசியம் என அவர்கள் மனப்பூர்வமாக எண்ணியுமிருக்கலாம். அதுதான் அவர்களுடைய எண்ணம்என்பதை வேண்டுமானாலும் ஒப்புக்கொண்டே பார்ப்போம்.

பொதுமொழி தேவையா?

உண்மையிலேயே, ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்குவதற்கு ஏதாவதொரு காரணத்தை கூறவேண்டுமானால், சமஷ்டி ஏற்பட்டு, மகாணங்களும், சுதேச சமஸ்தானங்களும் ஒன்றாகவும் பொது மக்களிடை ஒரு ஐக்கிய உணர்ச்சி ஏற்பட, யாவரும் ஒரு தேசமக்கள் என்ற உணர்ச்சிவள, ஒரு பொது மொழி தேவை, என்பதைத்தான் கூறமுடியும்.

அந்த ஒரு காரணந்தான் ஏதோ, பார்வைக்காவது காரணம் போல் தோற்றக்கூடும். இவ்விதம் பார்த்தால், இது அரசியல் நோக்கத்துடன்வரும் திட்டமென ஏற்படுமே தவிற, கல்வித் துறையிலுள்ள கொள்கை, இலட்சியங்களுடன் சம்மந்தப்பட்டதல்ல என்பதும் விளங்கும்.

ஆனால் சமஷ்டி ஏற்படின், தேசபக்தி வளருமோ, தேசீய ஒற்றுமை பலப்படுமோ; மக்கள் ஒன்று கூடுமோ, ஒரு பொது மொழி அத்யாவசியந்தானா? சரித்திரம், மாறுபட்ட உண்மையையே சாற்றுகிறது.

கானடாவைப் பார்ப்போம். அங்கு சமஷ்டி அரசியல் இருக்கிறது. அங்கு இப்போதும், பிரான்சு, இங்கிலீஷ் ஆகிய இரு மொழிகளும் பேசப்பட்டு வருகின்றன. 1791-ம் ஆண்டு சட்டம் ஏற்பட்டதிலிருந்து,

குயூபெக்சட்டசபையில், பிரன்ச்சு இங்கிலீஷ் ஆகிய இருமொழிகளும், உபயோகிக்கப் படுகின்றன. இரு மொழிகளும் உபயோகிக்கப்பட வேண்டும் என்பது, அரசியில் அமைப்பில் திருத்தங்கள் ஏற்பட்டநாள் தொட்டு, கடை முறையிலே காட்டப்பட்டே வருகிறது.

இதற்காகத் தனியாக யாதொரு தீர்மானமும் சட்டசபைகளிலே இயற்றப்படவுமில்லை. [பிரைம்னர்எழுதியுள்ள கானடா சரித்திரம். 1891-ம் ஆண்டு விஷயத்தைப் பார்க்கவும்,] லார்டு

டேல்ஹவுசி, லார்டு டர்காம் இருவரும், இரண்டு வெவ்வேறான மொழிகள் நிலவுவதை விரும்பவில்லை.

லார்டு டர்காம் இயற்றிய 1840ம் ஆண்டு "யூனியன் சட்டம்" 41 செக்ஷன்படி, சட்டசபை நடவடிக்கைகள் இங்லீஷ் மொழியிலேயே இருக்க வேண்டுமெனவும், தேவையானால் மொழி பெயர்த்துக் கொள்ளலாமெனவும், சட்டசபை வாதங்களின் போது இரு மொழிகளையும் உபயோகிக்கலாமெனவும், சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் லார்டு எல்ஜின்வேற முடிவுக்குவந்தார், கனடா நாட்டு பிரன்ச்சுமக்கள், தங்கள்மொழியை உபயோகிக்கும் சௌகரியத்தைப் பெற வேண்டுமென்றார். அதன்படியே, 1848-ம் ஆண்டு, யூனியன்சட்டம் திருத்தப்பட்டு பழைய சட்டத்தின் 41-வது செக்ஷன் எடுக்கப்பட்டதுடன், 1867-ம் ஆண்டு இறற்றப்பட்ட சட்டத்தின் 133-வது செக்ஷனபடி, சட்ட சபைகளிலும், நீதி மன்றங்களிலும், இங்கிலீஷ், பிரன்ச்சு ஆகிய இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து தாய்பட்டது.

இதுவே இன்று அழுலில் இருந்து வருகிறது. பிரன்ச்சு கனடியாகளுக்குத்தங்கள் மொழிமீது இருந்த பற்றின் காரணமாக இங்கிலீஷ்தான் கனடாவில் பொதுமொழிபாக இருக்க வேண்டுமென வற்புறுத்த பிரிட்டிஷ் பார்லிமெண்டிற்கே துணிவு ஏற்படவில்லை.

கனடாவின் தேசியத்திற்கு ஒரு பொதுமொழி இருந்தே தீரவேண்டும், அதுவே இன்றியமையாதது என்றும் கருதப்படவில்லை.

ஆப்பிரிக்கா—மற்றொரு உதாரணம்.

தென் ஆப்பிரிக்காவை எடுத்துக்கொள்வோம். அங்கு இரு ஜாதியினர் இருக்கின்றனர். இரு மொழிகள் இருக்கின்றன. ஆங்கிலேயருக்கு இங்லீஷ், போயர் எனப்படும் டச்சுக்காரருக்கு டச்சுமொழி, இன்றும் இருந்துவருகிறது.

1909-ம் வருஷத்திய தென் ஆப்பிரிக்கா சட்டத்தில், இங்கிலீஷ்டச்சு ஆகிய இரு மொழிகளும் சர்க்கார் உபயோகப்படுத்த வேண்டுமென்றும், இரண்டிற்கும் சம உரிமை, சம சந்தர்ப்பம், சம அந்தஸ்து, காப்பட வேண்டுமெனவும், சட்டசபை நிகழ்ச்சி

கள், குறிப்புகள் யாவும் இரு மொழிகளிலும் எழுதப்பட வேண்டுமெனவும், செக்ஷன் 137, கூறுகிறது.

மேலும், இரு மொழிகளில் எதேனும் ஒன்று தெரியவில்லை என்ற காரணத்திற்காக எந்த சர்க்கார் உத்தியோகஸ்தரையும் நீக்கக்கூடாது என, செக்ஷன் 145.ல் கண்டிருக்கிறது.

ஆகவே, தென் ஆப்பிரிக்கா விற்கு, ஒரு பொதுமொழி அவசியம் என்று கருதப்படவில்லை. மெஷ் யூனியன் சட்டம், பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இயற்றப் பட்டதென்றாலும், அதனைத் தயாரித்தவர்கள், தென் ஆப்பிரிக்கா வாசிகளான, ஆங்கிலேயரும், டச்சுக்காரருமேயாகும்.

இரு சாராருக்கும், தத்தமது மொழியை விட்டுவிட மனமில்லை இருவரும், ஒன்றுபட, ஒரு மொழி அவசியம் எனக் கருதவுமில்லை என்பது இதனால் நன்கு விளங்குகிறது.

இயற்கையையும் மீறிய நாடு.

சிவிட்ஜர்லாண்டு தேசத்திலே மூன்று விதஜாதியினர் உள்ளனர். மூன்று வித பாஷைகள் பேசப்படுகின்றன. ஆனால் தேசம் ஒன்றுதான். தேசிய ஒற்றுமையும் உள்ளது.

1874வது ஆண்டுநிறைவேறிய, சமஷ்டி சட்டததின்படி ஜெர்மன், பிரன்ச்சு, இதாலியன், ஆகியமூன்றுமொழிகளும்தேசியபாஷைகளாக எற்படுத்தப்பட்டன!

அங்கு100-க்கு 71 பேர் ஜெர்மன் மொழியும், 23பேர் பிரன்ச்சு மொழியும், 5 அல்லது 6 பேர், இத்தாலிய மொழியும், பேசுபவர்கள் என்ற போதிலுங்கூட, மூன்று மொழிகளும், தேசிய மொழிகளாக எற்படுத்தப்பட்டன.

இந்த மூன்று மொழிகளும் பல நூற்றாண்டுகளாகப் பேசப்பட்டு வந்தன. ஆகவே இவைகளில் எதையும் குறைபடுத்தாதவகையிலே சமஷ்டி ஆசியலிலே ஏற்பாடு செய்யப்பட்டதுடன், சட்டங்கள், இம்மூன்று மொழிகளிலும் பின்வாண்டு, சுயேச்சையாகிவிட்டதாகக் கூறிவிட்டு, தீவுகளும் தனக்குச் சொந்தமென்று கூறிவிட்டது.

தீவு வாசிகள் தாம் யாருக்குச் சொந்தமென்பதை தாமாகவே தீர்மானஞ்செய்ய வேண்டுமென்றனர். 1920-ம் ஆண்டு,

அத்தீவுகளுக்குப் பின்லாண்டு சுயாட்சி தந்தது. ஆனால், தன்னை விட்டுப்பிரியும் உரிமை அளிக்க மறுத்தது. பின்னிஷ் மொழியை, அத்தீவுகளில் திணிக்க, பின்லாந்து முற்பட்டது. அவர்கள் அதனை எதிர்த்தனர். அப்போது சர்வதேச சங்கம் குறுக்கிட்டு, அத்தீவுகளுக்கு மொழி உரிமை வழங்கப்பட வேண்டுமெனத் தீர்மானித்தது.

ஷெ தீவுகள், ஸ்வீடிஷ் மொழி கற்பிக்கப்படும் பள்ளிக் கூடங்களுக்கே சர்க்கார் செலவில் பணம்தந்து போஷிக்கும். சர்க்கார் கல்விச் சாலைகளிலெல்லாம் ஸ்வீடிஷ் மொழியே பகற்றுக் கொடுக்கப்படும். சர்க்கார் செலவில் நடக்கும் ஆரம்பப்பள்ளிக் கூடங்களிலும், ஸ்தலஸ்தாபனங்களின் ஆதரவில் நடைபெறும் பள்ளிக்கூடங்களிலும், பின்னிஷ் மொழி, சர்க்காரோ, ஸ்தலஸ்தாபனமோ சம்மதித்தாலொழிய, கற்றுத்தரவேண்டிய அவசியமில்லை—என சர்வதேச சங்கம் கூறிற்று. பின்லாண்டு சம்மதித்தது.

தேசீய சர்வாதிகாரம் இனிக்கிடையாது.

இந்த (மைனாரிடிகள்) சிறுபான்மையினர் பிரச்சினையைப் பற்றி, பர்மிங்காம் சர்வகலா சாலையின், சர்வதேச சரித்திரப் பேராசிரியர், திரு. ஜான் ஸ்டீபன்ஸ் M. A. என்பவர் கூறுவதாவது:—

"இந்த சிறுபான்மையினரின் கல்விச்சாலைகள் விஷயம், சிறுபான்மையருக்கும், பெரும்பான்மைவகுப்பினருக்கும் இடையே பெருத்த விவாதத்தை உண்டாக்குகிறது. இந்த பள்ளிக்கூடப் பிரச்சினை மிக முக்கியமானதென எங்கும் ஒப்புக்கொள்ளப் படுகிறது. சிறுபான்மையினரின் அரசியல் பிரச்சினை இதை ஒட்டியே நடைபெறுகிறது.

அந்தந்த சர்க்காரின் போக்கு எப்படி இருக்கிறது. என்பதைப்பற்றிப்பரி சோதிக்க இந்தப் பள்ளிக்கூடப் பிரச்சினையே முக்கியமானதாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. புதிய நாடுகளிலே இணைக்கப்பட்ட சிறுபான்மையினர்களுக்குச் சர்க்கார்பள்ளிக் கூடங்களிலே சேரும் உரிமை தரப்பட்டது. மிக முக்கியமான ஒரு கொள்கையாகும். ஒருநாடு, ஒரேவிதமானதேசீயம், மொழி, ஞானத்தை, அங்குள்ள எல்லார்பேரிலும் சுமத்தியே தீருவது என்பது கூடாது என்பதே இக்கொள்கையின் கருத்து. எல்லோரையும் ஆதரிக்கும் ஒருநாட்டு அமைப்பிலே, பலப்பல நாகரீகம்,

மொழி ஞானப்பற்றுள்ளவர்கள் இருக்கலாம். அவரவர்கள் கலை களை அவரவர்களே அனுபவித்துக்கொண்டு, நாடு என்ற ஒரு கொள்கைக்காகமட்டும், நாட்டினிடம் பக்தி செலுத்தி வாழமுடியு மென்பது இதன் கருத்தாகும்.

ஒரு நாட்டு அரசியலுக்குச்சர்வ அதிகாரமும் உண்டு என்ற அரசியல் வைதீகத்தில், மாறுதல் வற்பட்டிருப்பதை, இந்தச்சிறு பான்மையினர்களின் உடன் படிக்கை காட்டுகிறது. ஸ்டீபன்ஸ் எடுத்துக் காட்டியுள்ளபடி, "எல்லோரும் ஒரே தேசீயக்கலைக்கு அடிபணிய வேண்டுமென்று கூறும் அதிகாரம் ஒருநாட்டு அரசியல் அமைப்பிற்கு இல்லை என்பதை மேற்படி உடன்படிக்கைகள் விளக்குகின்றன.

ஜெர்மனி சம்பவம்.

1919-ம் ஆண்டு நிகழ்ந்த புரட்சிக்குப் பிறகு அமைக்கப்பட்ட ஜெர்மன் அரசியல் அமைப்புத் திட்டமும், மொழிப்பிரச்சினை எவ்வளவு முக்கியமான தாகக் கருதப்பட்டது என்பதை விளக்கு கிறது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் இரண்டாம் பகுதி யிலே, ஜெர்மனியர்களின் ஜீவாதார உரிமைகள் 113வது செக்ஷ னில் கூறப்பட்டுள்ளது. அதன்படி ஜெர்மன் சமஷ்டியிலே, பல திறப்பட்டவரின் மொழி உரிமையிலே, சட்ட பூர்வமாகவோ, கடைமுறை மூலமாகவோ, சர்க்கார் கைவைக்கக் கூடாதெனக் கண்டிருக்கிறார்கள்.

தாய்மொழி பாதுகாப்பு ஜீவாதார உரிமைளில் ஒன்றாகக் கருதப்பட்டது என்பது கவனத்திலிருக்க வேண்டுகிறேன். சர்வ தேச சங்கத்தாலும், ஐரோப்பிய தேசங்களாலும், 'தாய் மொழி'ப் பயிற்சி விஷயம் எவ்வளவு முக்கியமானதாகக் கருதப்பட்டது என்பதை எடுத்துக்காட்டவே, சிறு பான்மையினரின் உடன் படிக்கைகளை விளக்கிக்கூறினேன். இந்த உடன்படிக்கை களைக் கவனித்தார், தாய்மொழி பயிலத்தடைகள் விதிக்கப்பட வில்லை என்பதே தெரியவருகிறது.

அதைப்போலவே, இப்போது தமிழ் பயில யாதொரு தடை யும் போடப்படவில்லை, ஆகவே என் இந்தப் புகார் என்று கூறு வது நமக்குத்திருப்தி அளிக்காது. நாம் என்ன கூறுகிறோ மென்று வெளியிடப்பட வேண்டுமெனவும், சர்க்கார் அதிகாரிகள் நியமனத்தின்போது எந்த மொழிக்காரரிடை அவர் ஊழியம் செய்யபோகிறாரோ, அம்மொழி அவருக்குத் தெரிந்ததுதானா

என்பதைக் கவனித்துப் பார்க்கவேண்டுமெனவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

இந்த மூன்று ஜாதியினரும், பெயாளவில் வேறானவர்கள். ஆனால். மிக ஒற்றுமையுடன், கூடிக் கலந்தே வாழ்ந்து வருகின்றனர். இயற்கை, ஏதேனும் பிரிவினைகளை உண்டாக்கினாலும், அதையுங்கடந்து இந்நாட்டினர் ஒன்றுபட்டு வாழ்கின்றனர்.

டிசினோ என்ற பிரதேசம், மற்ற இடங்களிலிருந்து பிரிந்து நிற்கிறது. பிரம்மாண்டமான மலை குறுக்கே நிற்கிறது. ஷாப் காசன் என்ற பிரதேசத்தைனைன் நதி பிரித்து வைத்திருக்கிறது எனினும், தேபசகதியும், சமஷ்டியில் பற்றும் ஒங்கு உச்ச நிலையில் இருக்கிறது.

கனவே காணலாம்.

இவைகளை எல்லாம் கவனிக்கும்போது, இந்தியாவிற்கு ஒரு பொது மொழி அவசியமில்லை என்பது நன்கு விளங்கும். பல நூற்றுக்கணக்கான மொழிகள் பரவி உள்ள, மாகாணங்களிலும், சுதேச சமஸ்தானங்களிலும், ஒரு புது பொதுமொழிப்பரப்பி நிர்ப்பந்தப் படுத்துவதென்பதும் சாத்தியமான காரியமாகாது.

மொழிகளிலேயே, பலசிதைவுகள் ஏற்பட்டுவிடுகின்றன. ஒன்றுகொன்று விரோதமாகி விடுகின்றன. கோடிக்கணக்கான மக்களுள்ள, பரந்த இந்தியாவிலே இது சாதாரணமாக நிகழக்கூடியதே. நிரந்தரமான ஒரு அகில இந்தியப் பொது மொழி சோப்பன உலகில் தான் இருக்கமுடியும்.

சர்க்கார் மொழியாகவும், கோர்ட்டு விவகாரங்களுக்கு மொழியாகவும் இருக்கும் இங்கிலீஷ் மொழியே, 100 ஆண்டுகளாக வெள்ளைக்கார ஆட்சி இருந்தும், நமது நாட்டில் பேசப்படும் எந்த ஒரு மொழியையும் கள்ளிவிட்டு, அதன் ஸ்தானத்தில் தான் அமரமுடியவில்லை.

சிறுபான்மையினர் மொழிப் பிரச்சினை.

ஐரோப்பாவிலே சிறுபான்மையினரின் மொழிப்பிரச்சினை பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. ஒரே நாட்டிலே, அன்னியர் படையெடுப்பு, தேசத்தைப் பங்குபோடுதல் ஆகிய காரணங்களால் மக்கள் ஒரு கதம்பமாக இருக்கிறார்கள். பல காலமாக மொழி, மதம், இவைகளில் முற்றிலும் மாறுபட்ட பல

வகையான மக்கள், மத்திய ஐரோப்பிய பிரதேசங்களிலே ஒன்றுகூட்டி வைக்கப்பட்டுள்ளனர்.

பெரும்பான்மையினரின், மொழி, நாகரீகம் இவைகளிலே சிறுபான்மையினரைக் கட்டுப்படுத்தும் முயற்சிகள்யாவும் அடியுடன் தோற்றன.

(ஜர்மன்) சண்டைக்குப் பிறகு, இந்தப் பிரச்சினை மிக சிக்கலாகிவிட்டது. சண்டைக்குப் பிறகு ஏற்பட்ட சமாதான உடன்படிகைகை, ஐரோப்பிய நிகழ்படத்தையே உருமாறும்படி செய்துவிட்டது.

பழைய பிரதேசங்கள் துண்டிக்கப்பட்டு, மற்றைய பிரதேசங்களுடன் ஒட்டுவிக்கப்பட்டன. ஜெர்மனி ஆஸ்டிரியா, ஹங்கேரி, போலந்து, யுகேஸ்லேவியா, ஜெக்கோஸ்லோவேக்கியா, ரூமேனியா, கிரீஸ், பல்கேரியா, துருக்கி, முதலிய பலநாடுகள், சண்டையின் பலனாக இத்தகைய மாறுதல்களை அடைந்தன.

சமாதான உடன்படிக்கைகள் தயாரிக்கப்பட்டபோது வேறு நாடுகளுடன் சேர்க்கப்பட்ட, சிறுபான்மையினரின், மொழிப் பிரச்சினை, அமோகமாக எழுப்பிற்று இதனைத் தீர்க்க சிறுபான்மையினரின் உடன்படிக்கை 1919ல், போலந்துடன் ஏற்பட்டது.

இந்த உடன்படிக்கைகளில் சிறுபான்மையினரின் மொழிகளுக்குப் பாதுகாப்புத் தரப்பட்டது. சர்வதேச சங்க முன்பாக இவைகள் சமர்ப்பிக்கப் பட்டன.

இந்த உடன்படிக்கையின்படி, போலந்து மொழியை வியாபாரம், மதம், பத்திரிகா உலகம், பிரசங்கமேடை, முதலிய துறைகளில் உபயோகிப்பதற்கு யாதொருவிதமான தடையும் விதிக்கப்படகூடாதென்றும், போலந்து மொழிதவிற வேறு 'தாய்மொழி' யிலுமேலாருக்கு, சௌகரியஞ் செய்துதர வேண்டுமென்றும், பண உதவி அளிக்கப்படவேண்டுமெனவும், ஏற்பாடாகி இருக்கிறது.

சர்வதேச சங்கத்தின் தீர்ப்பு.

பின்லாந்து (Finland) தன்னுடன் இணைக்கப்பட்ட ஆலந்துதீவு வாசிகளுக்கு மொழிப்பாதுகாப்பை அளித்தது. இந்

தத்தீவு வாசிகள், ஸ்வீடன் நாட்டு வம்சத்தினர் இத்தீவுகள் ஸ்வீடனுக்குச் சொந்தமானவைகளாக இருந்தன.

1809-ம் ஆண்டு இத்தீவுகளும், பின்லாண்டும், ரஷ்யாவிற்குத் தாப்பட்டன, 1917-ம் ஆண்டுவரை இவைகள் ரஷியாவின் ஆட்சியின் கீழ் இருந்தன. ரஷியாவில் புரட்சி ஏற்பட்டதால், மாணவர்களைப் புதுமொழி பயிலவேண்டுமென நிர்ப்பந்தித்தால், அது அவர்களுக்குச் சுமையாக இருக்கும்,

அதனால், சொந்த மொழி வளர்ச்சிதடைப்படும்; இளம் பிராயத்திலே வேறு புது மொழி பயின்றால், சொந்தமொழி வளர்ச்சிக்குன்றும். இது கோடியான முட்டுக்கட்டையாக இல்லாதிருப்பினும் இது முட்டுக்கட்டையாகவே இருக்கும் என்று எண்ணுகிறோம்.

எந்த அன்னியனுக்கும் இந்தத் துணிச்சல் ஏற்படவில்லை.

சரித்திரம் தெரிந்த நாளாக, இந்தியா, அன்னியருக்கு இரையாகியே வந்திருக்கிறது. முதலிலே துரானியரும், மங்கோவியரும், பிறகு ஆரியர், சேகிக்கர், அராபியர், பெர்ஷியன்தே சத்தவர், மொகலாயர், இறுதியிலே ஐரோப்பியர்களான, போர்சுகீசர் பிரன்ச்சுக்காரர், ஆங்கிலேயர், என, இத்தனை நாட்டினர், இந்தியாவைப் பிடித்தனர். ஆரியர்கள், மொகலாயர்களைப் போன்றவர்கள் இங்கேயே தங்கிபும் விட்டனர்.

ஆனால் இந்த அன்னியர்கள் யாரும் எப்போதும் தங்களுடைய மொழியை இந்தியர்கள் மீது திணிக்கப் பிரயத்தனப் பட்டதாகத் தெரியவரவில்லை- கூட்டங் கூட்டமாக வந்த ஆரியர்கள், ஆதிகுடிகள் வசித்துவந்த வளப்பமான பிரதேசத்திலே குடி ஏறினார்கள். அந்தப்பிரதேசங்களிலே அவர்கள் மொழி பரவிற்று. மொகலாயர் ஆண்டபோது, இந்தியர்கள், அரபி, உருது, பெர்ஷியன் முதலிய மொழிகளைப் பயின்றனர்.

மொகலாயர்கள்' இம் மொழிகளைப் படித்தே தீரவேண்டுமெனத் திணிக்கவில்லை. தாமாகவே, சர்க்காரில் செல்வாக்குபெற, அம்மொழிகளைப் பயின்றனர். பிரிட்டிஷார், தமது மொழியை, நம்நாட்டிலே திணித்ததாகச் சில சமயங்களிலே கூறப்படுகிறது.

இதுதவறு.

ஆர்த்தர்மேஹ்யூஎன்பவர்கூறுகிறது போல, ஆரம்பப்பள்ளிக் கூடங்களிலில்லாது உயர்தாவகுப் புகளிலே இங்கிலீஷ்பாஷை மூலம் பாடங்கள் போதிக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம், வெறும் கல்வி முறையை ஒட்டி வந்தமுடிவாகும்.

கலை சம்மந்தமான முடிவல்ல. பாட போதனை ஆங்கிலத்திலே என்ற முடிவு, தற்கால சாந்தியாக ஏற்படுத்தப்பட்டது. மேனாட்டுக் கருத்துகளையும் விஷயங்களையும் போதிக்கும் வகைக்கு அந்தந்த சுதேச மொழிகள் சீர்திருத்தப்படும் வரையில்தான் ஆங்கில மொழிமூலம் பாடபோதனை இருக்கவேண்டுமெனவும் அதிகாரிகள் கருதினார்கள்.

இந்திய சர்க்கார், பிரிட்டிஷ் சர்க்கார் ஆகியவைகளின் ஒத்தாசையுடன் மாகாண சர்க்காரும் இதற்கான வழிகளிலே ஊழைத்தன. துரதிஷ்டவசமாக அம்முறைகள் பலிக்காமற் போய்விட்டன.

குறை நம்முடைய தேதவிர, அன்னியருடையதல்ல. ஆங்கிலங் கற்றவர்களுக்கு உயர்தாமான உத்தியோகங்கள் கிடைத்தன. ஆங்கிலமொழியிலே உள்ளகலை ஞானமும், விஞ்ஞானமும் அவர்களை வசீகரப்படுத்திற்று.

ஆகவே அவர்கள் தாய்மொழியை உதாசீனம் செய்யலாயினர். திராவிடருடைய தென் இந்தியாவிற்கு ஆரியர்கள் வந்த போதுங்கூட, தங்கள் மொழியை நம்மீது திணிக்கவில்லை. 1847-ம் வருஷத்திய பிரிட்டிஷ் சங்கத்தில், ஆசிரியர்மாக்ஸ்முல்லர் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிடுவதை இனித் தருகிறேன்.

மாக்ஸ் முல்லர் சமஸ்கிருதத்தில் வல்லவர். அம்மொழியிலே பற்றுக்கொண்டவர். ஆனால் திராவிடமொழி, நாகரீகம் இவைகளைனன்கு உணராதவர் என்றே கூறவேண்டும். "பார்ப்பனர்கள் வட இந்தியாவை வென்றமுறைக்கு முற்றிலும் மாறான முறையையே, விந்திய மலைக்குக்கீழ் உள்ள தென்னாட்டை பற்றிய காலத்தில் கையாண்டார்கள்.

பெரும்படைகளாக, ஆயுதந்தாங்கி அவர்கள் தென்னாடு வரவில்லை. வடக்கே பல சாம்ராஜ்யங்கள் இருந்தன; அவற்றின் ஆதரவைப்பெற்று, சாந்தமான முறையிலே, தென்னாட்டில் நுழைந்து குடியேறினார்கள்.

சிற்சில சமயங்களில் தமது அண்டை அயல் ஜாதியாருடன் போராடினரெனினும், பெரிதும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் விதத்திலேயே அவர்கள் போக்கு இருந்துவந்தது.

கடற்கரைப் பிரதேசங்களில், அவர்கள் தங்கள் அமைப்பு, சட்டம், மதம் முதலியவற்றைப் புகுத்தினார்கள். ஆனால் பெரு வாரியாக இருந்த திராவிடரிடம் தங்கள் மொழியைத்திணிக்க முடியாததுகண்டு கொண்டு, புத்திசாலித்தனமாக, திராவிட மொழியைத் தாங்கள் கற்றுக்கொண்டு, அம்மொழி மூலம் தங்கள் போதனைகளை, நாகரீகமடையாதவருக்குச் செய்துவந்தனர்.

ஆதி குடிகளின் மொழியை அவர்கள் சீர்திருத்தி, சமஸ்கிருதத்துடன் போட்டியிடக் கூடிய அளவுவளர்ச்சி அடையச் செய்தனர். இந்த பாஸ்பா உதவிகாணமாக, ஆரியருக்கும் ஆதிகுடிகளுக்கு மிடையே ஒற்றுமை நிலவிற்று.

வடக்கே முகம்மதியர் அழிக்க முற்பட்டபோது, தென்னாட்டிலேதான், பிராம்மணீயம் தஞ்சம் புகுந்தது. சொந்த மொழியைப் புறக்கணிக்கவோ அல்லது விட்டுவிடவோ செய்யாமலேயே, ஒரு உயர்தாமான் நாகரீகத்தை மக்களிடை புகுத்தமுடியும் என்பதற்கு இது ருசிகாமான சான்றாகும்.

தோல்விப் படலம்.

சாம்பால்பூர் ஜில்லாவிலே நடந்த சம்பவமொன்றைக் கவனிப்போம். இதிலே, தாய்மொழி ஒன்று உள்ள ஜனசமூகத்தின்மீது, ஒரு புதுமொழியை வலுக்கட்டாயத்திலே புகுத்துவது எவ்வளவு ஆபாசமானது, காரியத்திற் கேற்றதாகாது என்பது விளக்கமாகத் தெரியவருகிறது.

சாம்பால்பூர் ஒரு காலத்திலே, மத்திய மாகாணத்தில் ஒரு பகுதியாக இருந்தது. இந்த ஒருபிரதேசம் தவிர, வேறு எங்கும் ஓரியா மொழி இல்லை. ஆகவே, சாம்பல்பூர் நிர்வாகம் மிகக் கஷ்டத்தை விளைவித்தது.

ஓரியா மொழி பயின்ற சில்லறை அதிகாரிகள் கிடைப்பதும் கஷ்டமாயிற்று. அந்தக் காரணத்தாலே, மற்றெல்லா இடங்களைவிட, சாம்பல்பூரில் தான் நிர்வாகத்திலே ஊழல் மலிந்திருந்தது.

இக்காரணத்தை முன்னிட்டு, மத்திய மாகாணத்து பிரதம கமிஷனர் ஒருவர், சாம்பால்பூரில், ஓரியாவிற்குப் பதிலாக ஹிந்தி மொழி இருக்க வேண்டுமென உத்தரவிட்டார்.

ஒரியா ஒன்றே தெரிந்த அம்மக்கள், ஹிந்தி புகுத்தப்படுவதை பலமாக எதிர்த்தார்கள். ஆகவே சர். ஆண்டரூ பிரேசர், என்ற கமிஷனர், இந்திய சர்க்கார் அனுமதிபெற்று, பழயபடி ஒரியா மொழியை சாம்டால்பூரில் நிலவச்செய்தார்.

1905-ம் ஆண்டு, சாண்டேல்பூர், பதாம்பூர், புஸ்ஜ் ஹார், பிரதேசந்தவிர, மற்றையபாகங்கள், புதிதாகநிருவப்பட்ட பீகார்-ஒரிஸ்ஸா மாகாணத்துடன் இணைக்கப்பட்டன. இப்போது சாம்பால்பூர், புதிதாக நிருவப்பட்டுள்ள, ஒரிஸா மாகாணத்துடன் இணைக்கப்பட்டு விட்டது.

சாது மிரண்டால்.....?

மிக மகத்தான ஹிந்திமொழிப் பிரச்சினை விஷயமாக பொதுஜனங்கள் காங்காசுக்கு ஒரு வித அதிகாரமும் அளிக்க வில்லை.

காங்கரஸ் தேர்தல் அறிக்கையில் இதைப்பற்றி ஒரு வார்த்தையுங் கூறப்படவில்லை. நான் படித்துப்பார்த்த அளவிலே, எந்தக் காங்காஸ் வாதியும் தேர்தல் பிரசாரத்தின்போது, காங்காஸ்காரர் அதிகாரத்திற்கு வந்தால் ஹிந்தியை நமது பள்ளிக்கூடங்களில் கட்டாய பாடமாக்கப் போவதாகப் பேசவுமில்லை.

ஆகவே, அதிக பாதகத்தைத்தரும்படியான இந்த மாற்றத்தை காங்கரஸ் மந்திரிகள் பொதுஜன ஆதரவான அதிகாரத்தைப் பெறாமலேயே செய்கிறார்கள். ஆதரவிற்குப்பதிலாக பொதுஜன எதிர்ப்புத்தான் உருவாகி இருக்கிறது. நூற்றுக்கணக்கான கூட்டங்களிலே பொதுஜனப் பிரமுகர்கள், கட்டாய ஹிந்தித்திட்டத்தை எதிர்த்தார்கள். "இந்தத் திட்டத்தை சர்க்கார் சுலபத்தில் நிறைவேற்ற முடியாதெனவும், பொதுமக்கள் விருப்பத்திற் கிணங்க, காங்கரஸ் சர்க்கார் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும்" என கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களே ஒரு பொதுக் கூட்டத்தில் கூறியுள்ளார் அரசியல் அனுபவமுடையவர் இந்த மந்திரிசபையிலே அவர் ஒருவர்தான். அவர் கூறிய இந்தப்பொன்மொழியை சர்க்கார் புறக்கணித்து விட்டு, ஈவு இரக்கமின்றி, சிறுவர்களின் மீது, ஹிந்தி படிப்பைக் கட்டாயமாகத் திணிக்க விரும்புகிறது, மக்கள் இவ்வளவு எதிர்க்கும்போது ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தால், அது முழுத் தோல்வியாக முடியும் என்பதுடன், ஆபத்தான நிலைமையை உண்டாக்கும் என்

யதை, இந்த மந்திரிகள் உணரவில்லை. மதராஸிகள் பாவ சாதுக்கள். ஆனால் சாது மிரண்டால் காடு கொள்ளாது என்ற மூது மொழி, மந்திரிகளுக்குத் தெரியாததல்ல.

தமிழர் மதிப்புக் குறையும்.

ஹிந்தியைக் கட்டாய பாடமாகப் புகுத்தினால் இந்த மாகாணத்திற்கு, மற்றைய மாகாணத்துடன் சம்பந்தப்படுவதால் உண்டாகும் நிலைமையை இனிக்கவனிப்போம். மத்திய சர்க்கார் (இந்திய சர்க்கார்) கல்கத்தாவில் இருந்தபோது, சர்க்கார் உத்தியோக மண்டலம் பூராவும் வங்காளிகளிடம் இருந்தது. இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்புசர்க்கார் தலைமஸ்தானத்தை டில்லிக்கு மாற்றிய பிறகு, உத்தியோக மண்டலம் பஞ்சாபிகள், ஐக்கிய மாகாண வாசிகளின் வசமாயிற்று.

ஆனால் மதராசுக்கு என்றும் போக்கிடமில்லாதிருந்தது. சென்னைமாகாணத்தைக் கண்டாலே வட நாட்டாருக்கு அலட்சியம்.

சென்னைக்குப் பல அநீதிகளையும் இழைத்திருக்கிறார்கள். உதாரணமாக, மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்த சட்டகாலத்தின்போது, ஆண்டுதோறும் 350 லட்ச ரூபாய், மெஸ்டன் தீர்ப்பு என்ற திட்டத்திற்கிணங்க, சென்னை மாகாணம், மத்திய சர்க்காருக்குக் கொட்டிக்கொடுத்துக்கொண்டுவந்தது.

டில்லியிலே நமக்கு (சென்னை மாகாணத்தினருக்கு) செல்வாக்கே கிடையாது. நமது உணர்ச்சிகளை மதிப்பதில்லை. முன்பு வங்காளம், இப்போதுபஞ்சாப், ஐக்கிய மாகாணம் ஆகியவைகள், நம்மைத் தமதுஅடிமைகளெனவே கருதி வருகின்றன.

நாம் நமது சம உரிமைக்காகளழவேண்டும். ஜனதாமாகாணங்களுக்கு இருப்பதைப்போலவே, இந்திய சர்க்கார் நிர்வாகத்திலே நமக்கும் உரிமையும் பங்கும் இருக்கவேண்டும்.

ஹிந்தி மொழிக்கு விட்டுக் கொடுத்தால், அது, வடநாட்டு மாகாணங்களுக்கு அடங்கி நடக்கும் சாதுக்கள் நாம் என்பதற்கு மற்றொரு உதாரணம் என்று தான் கருதமுடியும்.

ஹிந்திக்கு எல்லாரும் விரோதி.

இந்தியர்களில் பெரும் பான்மையினர், (பெஜாரடி) ஹிந்தி மொழி பேசுகிறார்கள் என்று கூறுவது ஆதாரமற்றது. சுத்த அபத்தம்.

வங்காளிகள் ஹிந்தி மொழியை சட்டைசெய்வதில்லை. முஸ்லிம்கள். கட்டாய ஹிந்திக்கிட்டத்தை எதிர்க்கிறார்கள். அவர்களை என்றும் விரும்புவது உருதுமொழியாகும்.

ஹிந்தி திணிக்கப்படுவதை, பம்பாய் மாகாணத்திலுள்ள கன்னடமொழி பேசுபவர்களும். மராட்டியரும், கடுமையாக எதிர்க்கிறார்கள்.

சிந்து, அஸ்ஸாம், பஞ்சாப், ஆகியவைகளும், இத்தகைய முறையை எதிர்த்தே தீரும்.

நமது பிள்ளைகளின் குரவளையை அழுத்தியேனும் ஹிந்தியைப் புகுத்த வேண்டுமென, காங்காஸ் மந்திரிகளை எதுதான் தூண்டுகிறது?

அதிகாரபீடத்திலே இடங்கிடைத்து விட்டதாலும், திட்டத்திற்கு எதிரிடையாக பலாத்காரமான எதிர்ப்பு வந்தால், தங்கள் உதவிக்குவர பிரிட்டிஷ் துப்பாக்கிப்படை இருக்கிறதென்ற நம்பிக்கையினாலுமே, நமது பள்ளிக்கூடங்களில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்க, காங்கரஸ் மந்திரிகள் முயற்சிக்கிறார்கள். புதிதாகச் சப்பாதித்துக்கொண்டஅதிகார வெறிமட்டுமேயின்றி அவர்களுக்கு தேசீயக் காய்ச்சல் கடுமையாக இன்று இருக்கிறது. அந்தக் காய்ச்சல் குறைந்து நிதானமானால் தான், அவர்களுக்கு உள்ளது உள்ளபடி தெரியும் தேசீயம், கலை இவைகளையே அழிக்கக் கூடிய வேலைகளிலும் அவர்கள் ஈடுபடாதிருப்பார்கள். தேசீயம் நல்லது தான். தேசீயம் அவசியந்தான். ஆனால், அந்த தேசத்தின் ஒருபகுதியினரின் மொழி, கலை இவற்றை அழித்து, வேறு பகுதியினரின் ஆதிக்கத்தை வளர்க்க, இந்தத் தேசீயம் உபயோகப்படுத்தப் பட்டால், அதனை எதிர்க்க வேண்டுவது அதிக அவசியமாகிறது.

எது காரியத்திற்கொத்த உண்மை என்பதைப்பற்றியோ தேசத்திற்கும் தேச மக்களுக்கும் உள்ளவித்தியாசத்தையோ, கலை ஞானத்திற்கும், அரசியலுக்கும் உள்ள தாரதம்மியத்தைப் பற்றியோ, அவர்களுக்குக் கவலை இருக்கக் காணோம். இந்தியாவின் பல பாகங்களிலே பலவித மொழிகள், நாகரீகம், கலைகள், சமுதாய நிலைகள் இருப்பதன் காரணமாகத்தான் சமஷ்டி ஏற்பட வேண்டி இருக்கிறதென்பதையும் அவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

சமுதாயநிலை, கலைநிலைமை, இவைகள் அகிலஇந்தியாவிற்கும் ஒரேவிதமாக இருப்பின், அகில இந்தியாவிலும் ஒரே மொழி பேசப்பட்டு, அல்லது பேசுவதற்கானவழி கோக்கப்படுவதாகவுமிருப்பின், இந்தியாவிற்கு சமஷ்டி எதற்கு, ஒரே ஐக்கிய சர்க்காரான்றோ ஏற்படவேண்டும்.

பொறுக்க முடியாது.

கலைஞான உரிமை நமது உயரிய இலட்சியம். அதை ஹிந்தி அரக்கன் தன் இருப்புக்காலின் கீழ் போட்டுத் துவைப்பதை நாம் சகியோம்.

நமது பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு ஏற்கனவே இருக்கும் சுமையே அதிகம். இந்த ஹிந்தியைப்படிக்க, சக்தியையோ, நேரத்தையோ அவர்களால் செலவிட முடியாது. ஆங்கிலமிருக்கிறது. அதை வேறு கற்க வேண்டும்.

அதிலேகலைகள், விஞ்ஞானம், இவைகளைப் பயிலவேண்டும். இப்போதே நாவிட மொழி வளர்ச்சியை ஆங்கிலம் கெடுத்திருக்கிறது. ஒரு பள்ளிக்கூட மாணவன், கலாசாலை மாணவன், அல்லது ஒரு பெரியவர், யார் பேசுவதைக் கேட்டாலும், அவர்களுடைய சம்பாஷணைகளிலே எவ்வளவு இங்கிலீஷ் வார்த்தைகள் புகுந்து விடுகின்றன என்பதைப் பார்க்கலாம்.

பி. எ. பட்டதாரிகளுக்குங்கூட தமிழிலோ, தெலுங்கிலோ, ஒரு ஒழுங்கான பிரசங்கம் புரிய முடிவதில்லை. நமது எண்ணத்தின போக்குகூட நமது மொழி, கலைக்குமாறானதாகவே இருக்கக்காண்கிறோம். இன்னமும் இந்த "அற்புதமான" ஹிந்தியை மனவளர்ச்சிக்குப் பக்குவமான சிறு பிராயத்திலே நமது பிள்ளைகள் படித்தால், மேலும் இதைப்போன்ற கோளாறுகள் ஏற்படாது என்று யாரால்தான் உறுதி கூறமுடியும்.

அன்னியக் கலையை, அன்னிய மொழியின் மூலம் கற்பது மிகக்கேடுடையப்பது, இதனாலேயே நமது சிறுவர்கள் நசுக்கப்பட்டுவிட்டார்கள், என்ற ஆங்கிலப்படிப்பைக் குறைகூறும்போது சொல்லப்படுகிறதே.

அதேவிதமாக ஹிந்திக்கும் கூறவேண்டி இருக்கிறது.

ஆங்கிலத்தால் வரும் அநுகூலங்கள்.

ஆங்கிலத்திலாவது சில சௌகரியங்களுண்டு. அந்த மொழி அறிந்தால், சர்வ கலாசாலைகள் ஏற்பாடு செய்யும் டீட்சைகளில்

தேறி நமது வாலிபர்கள் பட்டம் பெற்றால் நல்ல வேலையாவது கிடைக்கும். அது சர்க்கார் மொழி. நீதிமன்றத்தில் நிலவுவதும் அதுவே.

வியாபார சம்பந்தமாக அத்யாவசியமான மொழியாக அது இருக்கிறது, அதிலே, எவ்வளவோ நூல்கள் நயங்கள், வனப்பு, சொல் அமைப்பு உள்ளன. பிரிட்டிஷ் தொடர்பு இருக்கும் வரை மேலே ஆங்கிலத்தைப் படித்தே தீரவேண்டி இருக்கிறது.

நாம் யாவரும் வரவேண்டுமென விரும்பும் சுயாட்சியை, பன்னெடு நாட்களாகுமென்பதை கூறவேண்டியவனாக இருக்கிறேன். இன்று சுயாட்சி கிடைத்தால் ஒரு காளைக்குக்கூட அதை நிலைத்திருக்கச் செய்யமுடியாது.

நம்மிடம் ஆகாயக் கப்பல்கள் இல்லை, சுடற்படைகள் கிடையாது, சேனைகள், சேனைத்தலைவர்கள் இல்லை. இன்று இந்தியாவை விட்டு பிரிட்டன் சென்று விட்டால், நாளை பிரெஞ்சியர் இந்நாட்டின்மீது படையெடுத்து வந்தால், பிரிட்டிஷார் உதவி கிடைக்குமென எதிர்பார்க்க முடியாது.

பூரண சுதந்தரம் சாத்தியமா?

நமது தேசத்தை காமே பாதுகாத்துக் கொள்ளக் கூடியபக்குவத்திற்கு நாம் வரும் வரையிலே, நாம் பொறுத்துத் தீர வேண்டும். இங்கிலாந்திடமிருந்து விடுபட்ட பிறகுங்கூட, நாம் தனித்திருந்து சுதந்திர நாடாகவாழ இயலாது.

இந்தக்காலம், பலநாடுகள் ஒன்றாகக்கூடி பாதுகாப்பைத் தேடிக் கொள்ளும் காலம். காலஞ் சென்ற சர் சி. சங்கரன் நாயர் போன்ற நாடுகளின் நட்பு, ஒப்பந்த உடன்படிக்கை, உதவி, நமக்குத் தேவையாக இருக்கும்.

பூரண சுயாட்சியைப் பெற்ற, பிறகு, ஆங்கிலம் பேசும் பல நாட்டினர் அடங்கிய பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலே, சம அந்தஸ்து டையே ஒரு அம்சமாக நாமிருப்பது, சுலபமல்லவா,

ஆபத்தைக் குறைத்துக்கொள்ளக்கூடிய மார்க்கமாகாதா?

ஆனால் இது அரசியல் விஷயம்; இதிலே நான் பிரவேசித்துவிட்டேன். இன்று யாதொரு அரசியல் விவகாரத்தை

யும் பேசவேண்டுமென்பது என் நோக்கமல்ல. இந்தக் கூட்டத்திலே, என் ஆசியற் கருத்திற் கொத்தவர்களேயன்றி, வேறு பல ஆசியல் கட்சியினர், காங்காஸ்காரர்கள்பலர், மிதவாதிகள், மூஸ்லிம்லீக் கட்சியினர், ஆகியோர் இங்கு விஜயஞ்செய்திருக்கிறார்கள்.

ஆகவே நான் இங்குஎந்தஆசியல் விஷயமாகவும் பேசப்போவதில்லை. இந்தபிரசித்தபெற்றஊரிலே, நாம் அனைவரும், கட்டாயஹிந்தியை வெறுப்பதைக் காட்டவும் நமது பள்ளிக்கூடங்களில் ஹிந்தியைக் கட்டாயபாடமாக்க தற்போது நடந்துகொண்டுவரும் முயற்சிகளை எதிர்க்கவுமே கூடியுள்ளோம்.

மனவெழுச்சியை அலக்ஷியம் செய்வதா.

ஏதோ மனஎழுச்சிகாரணமாகநாம் ஹிந்தியை எதிர்ப்பதாகச் சில சமயங்களில் சொல்லப்படுகிறது. ஆனால் மனஎழுச்சியின் உண்மையான மதிப்பை ஏன்குறைக்கிறார்கள் என்பது தான் எனக்கு விளங்கவில்லை. சுதேசமனஎழுச்சி, அல்லது ஜாதீய உணர்ச்சி (அந்த ஜாதீயஉணர்ச்சிகாரணமாக்வே நாம் ஹிந்தியை எதிர்ப்பதாகக் கூறப்படுவதாயினுஞ்சரியே) இவைகளைச்சட்டை செய்யாது, காரியங்களை சாதித்துக்கொள்ளத் தொடங்கினால் ஆபத்தும் கேடும் விளைந்து, அதிகாரத்தை அகம்பாவமாகச் செலுத்திபவர்கள் தங்கள்தவறைத் தாமாகவே உணர்ந்தனர் என்பதை சரித்திரம் எடுத்துக்காட்டுகிறது.

நாம் ஏன் கட்டாய ஹிந்தித்திட்டத்தை எதிர்க்கிறோம் என்பதற்கான காரணங்களை நான் ஏடுத்துக்காட்டினேன். இதுவரை ஒருவராவது பதில்கூற முடியாதபடி, ஆணித்தரமாக, அசைக்கமுடியாதகாரணங்களைக்காட்டி, கட்டாய ஹிந்தித்திட்டத்தைக் கண்டித்து, திருவாளர் பாரதியார் அவர்கள் பகிரங்கக் கடிதத்தை விடுத்துள்ளார்.

ஆகவே வெறும் மனஎழுச்சி காரணமாகத்தான் நாம் ஹிந்தியை எதிர்க்கிறோம் என்று கூறுவது ஆபாசக்கூற்றேயாகும்.

கட்டாய ஹிந்தித் திட்டத்தினால் மக்களிடை மனக்கொதிப்பு நாளுக்குநாள் வளர்ந்து வருகிறது பார்க்கக்கண்களும் கேட்கச் செவிகளும்படைத்த வர்களாக நமது மந்திரிமார்கள் இருப்பின், அந்த எதிர்ப்பு எவ்வளவு பிரம்மாண்டமான உருவுடன் இருக்கிறதென்பதை அறிவர்.

அவர்கள் விவேகிகளாக இருந்தால், வங்கராளத்திலே பிரிவினை காரணமாக எவ்வளவு தொந்தரவு நேரிட்டதோ அவ்வ

ஹிந்தி படித்தால் வடநாட்டில் வேலை கிடையாது.

சர். எம். கிருஷ்ணநாயர் ஆரம்பவிழா பிரசங்கம்.

27-2-38-ந் தேதி காஞ்சிபுரத்தில் நடைபெற்ற ஹிந்தி எதிர்ப்பாளர் மகாநாட்டைத் திறந்து வைத்த சர். எம். கிருஷ்ணநாயர் சொற்பொழிவு:—

நண்பர்களே!

இந்த முக்கியமான மகாநாட்டைத் திறந்துவைக்கும் பெருமையை எனக்கு அளித்தமைக்காக வரவேற்பு கமிட்டியாருக்கு நான் எனது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது சென்னை மாகாணத்திலே உள்ள எல்லா ஆங்கிலப் பள்ளிக்கூடங்களிலேயும் முதல் மூன்று பாரங்களிலே (5, 6, 7-வது வகுப்புகளிலே) ஹிந்தியைக் கட்டாயப் பாடளவு தொல்லைகள், ஹிந்தி காரணமாக இந்தமாகாணத்தில் ஏற்படும் என்று நாம் எச்சரிக்கை செய்வதை ஏற்றுநடப்பர்.

தன்னைப் பெற்ற தாய், தாய்நாடு, தாய் மொழி, ஆக ஒருவனுக்கு மூன்றுதாய்மார் என்று நமது மூதுமொழி கூறுவதுண்டு. தாயைக்கவனியாதவன் மாதாவிற்குத் துரோகம் செய்தவனாகிறான், தாய் நாட்டை நேசியாதவன், தேசத்துரோகியாகிறான், தாய் மொழியைப் பாராட்டாதவன் தாய் மொழியைக் காட்டிக்கொடுத்த துரோகியாவான்.

ஏசுநாதரைக் கொஞ்சப் பணத்துக்காகக் காட்டிக்கொடுத்த ஜூடாஸ் என்று தாய் மொழியைக் காட்டிக்கொடுப்பவனை நாம் கூறுவோமாக. ஜூடாஸ் செய்த சதி காரணமாக ஏசுநாதர் கொல்லப்பட்டார்.

ஆனால் கிருஸ்து மார்க்கம் நிலைத்து நிற்கிறது. அதுபோன்றே திராவிடமொழிகளும் நிலைத்து நிற்குமாக.

மாக்க வேண்டுமென்ற சென்னை (காங்கரஸ்) சாக்காரின் யோசனையை, நாம் முழுபலத்துடனும் கண்டிக்கும் பொருட்டு இந்த பழம், பெரும், சரித்திர சம்மந்தமான புண்ணீயஸ்தலமென்னும் காஞ்சியில் கூடியுள்ளோம்,

பல பாஷைகளின் சிக்கலான நுட்பங்களைக் கற்றுத் தெளிவக்கூடிய மேதாவிகள் இருக்கிறார்கள், என்றாலும் அப்படிப்பட்டவர்கள் தொகை மிகக்குறைவானதாகும். சாதாரண புத்தியுள்ள ஆண், பெண், அதிலும் பள்ளிச்சிறுவர்கள், இவர்களைக் குறித்தே நாம் இந்தப் பிரச்சினையைக் கவனிக்கிறோம்.

நம் குழந்தைகள் பள்ளிக்கூடங்களிலே, இங்லீஷ், கணக்கு, சரித்திரம், பூகோளம், தாய் பொழி ஆகியவைகளை இலக்கண சுத்தமாய்க் கற்கவேண்டி இருக்கிறது. இவ்வளவு விஷயங்களுடன் ஹிந்தியையும் சேர்த்து அக் குழந்தைகள் படிக்கவேண்டுமெனக் கட்டாயப்படுத்துவது, கொடுமையாகும்.

இந்தக் கொடுமை காரணமாக, கண்டிப்பாய் நம்குழந்தைகளின் பள்ளி வாழ்க்கை ஓருசுமைபோலாவதுடன், அவர்களின் அறிவு வளர்ச்சியும் மழுங்கிவிடும்.

முதல் மூன்று பாரங்களிலே, கட்டாயப்படுத்திப் புகுத்தப்படும் ஹிந்தி பாஷையை சிக்கிரத்திலே குழந்தைகள் மறந்தே விடும். ஆணாயினும், பெண்ணாயினும், 15-வது வயது பூர்த்தியான பிறகே, எஸ். எஸ். எல். சி. பரீட்சைக்குப்போக அனுமதிக்கப்படுவர்.

ஆகவே, ஆறாவது பாரத்தில் படிக்கும் பிள்ளைகள் சராசரி 15-வயது கொண்டவர்களாகவே இருப்பர். ஆதலால் முதல், இரண்டு, மூன்றாவது பாரங்களிலே படிக்கும் பிள்ளைகளுக்கு முறையே, 10, 11, 12-வயதுதான் இருக்கும். தாய் மொழியையும் மேலே குறிப்பிட்டுள்ள, வயதுள்ள மக்களுக்குக் கட்டாயத்தின் பேரில் கற்றுக்கொடுத்த பிறகு, அவர்களின் பெற்றோர் ஏழை தொழிலாளிகளாக இருப்பின் இக்குழந்தைகள் பெற்றோரின் உதவிக்காக, பணம் சம்பாதிக்க ஏதேனும் வேலை செய்ய வேண்டி நேரிடுகிறது.

அத்தகைய பிள்ளைகளைக் கவனிப்போருக்கு அவர்கள் பள்ளிக்கூடத்தை விட்டு விலகிய பிறகு, படிப்பு வாசனை அற்றுப்போவது நன்கு தெரியும்.

தாங்களே பேசும் மொழி, வீட்டுமொழி, எங்கும் பேசப் படும் மொழியாகிய தம் தாய் மொழிக்கே இக்கதி என்றால் முதல் மூன்று பாரங்களில் நிர்ப்பந்தத்தின் பேரில் திணிக்கப் படும் ஹிந்தியை வீட்டிலோ வெளியிலோ சாதாரணமாகப் பேசப்படாத ஹிந்தியை, சுத்தியிலே மறந்தே விடுவார்கள் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ!

ஹிந்தி பொதுமொழி என்றால்

ஹிந்தியை, அகில இந்திய பொது மொழியாக்கப் பிரயத் தனம் நடக்கும்போது கண்டிப்பாக, சிக்கல் நிறைந்த வகுப்பு, மத, விவாதங்கள் எழும்பியே தீரும். இடைக்கால மந்திரி களில் ஒருவரும், சென்னை மாகாண முஸ்லிம் பிரமுகருமான கான் பகதூர் P. கலிபுல்லா சாகிப் அவர்கள், ஏற்கனவே, இந்த பிரச்சனையைக் கிளப்பிவிட்டார்.

பத்திரிகைகள் வாயிலாகவும், பிரசார மூலமாகவும் அவர், அகில இந்திய பொது பாஷையாக உருது இருக்க வேண்டுமே யொழிய ஹிந்தி இருக்கக்கூடாதெனக் கிளர்ச்சி யும் செய்து வருகிறார். எனக்கு உருது, ஹிந்தி, இரண்டும் தெரியாது.

ஆனால் ஹிந்தியில் அமோகமான சமஸ்கிருதவார்த்தை களும், உருதுவில் பெர்சியன் பதங்களும் இருப்பதாக அறிகி றேன். திராவிட மொழிகளைப் போன்றே ஹிந்தியும் இடப் புறமிருந்து வலப்புறமாக எழுதப்படுகிறதெனவும், அதன் எழுத்துக்கள் நாகரி லிபிகள் எனவும் தெரியவருகிறது.

உருது வலமிருந்து இடமாக எழுதப்படுகிறதெனவும் அராபி எழுத்துக்கள் கொண்டதெனவும், இந்துக்களில் சிலர் சமஸ்கிருதத்தை தேவபாஷையெனக் கருதுவதாகவும், முஸ் லிம்கள் அராபி மொழியை அங்கனமே கருதுவதாகவும் சொல்லப்படுகிறது.

ஹிந்தி படித்தால் வடநாட்டில் வேலை கிடைக்குமா?

தென்னாட்டிலுள்ள படித்துப் வேலையில்லா வாலிபர்கள், வடநாடு சென்று வேலைபெற ஹிந்தி உதவும் எனக் கூறப்படுகிறது. முன்னே கூறியுள்ளபடி பள்ளிக்கூடங்களிலே இளம்பிராயத்திலே நிர்ப்பந்தமாகப் புகுத்தப்பட்ட ஹிந்தி மொழியை, தென்னாட்டு வாலிபர்கள், வேலையைத் தேடிக்கொண்டு வடநாடு செல்லும் பிராயம் வந்ததும், மறந்தே விட்டிருப்பார்கள்.

ஹிந்தியை அவர்கள் மறந்து விடவில்லை என்றுவைத்துக்கொண்டாலும், வடநாட்டிலே இந்த படித்த பட்டதாரிகளுக்கு வேலை கிடைக்குமென்ற நிச்சயமுமில்லை. ஹிந்தி தெரிந்திருந்தால் தென்னாட்டு பி. ஏ' க்களுக்கு வடநாட்டில் வேலை கிடைக்கும் என்ற இந்த கூற்று சுத்த ஆபத்தமென்பது, 1937-ம் ஆண்டு, மே மாதம் 31-ந் தேதி லண்டன் கிழக்கிந்திய சங்கத்திலே, லார்டு லோதியன் தலைமையிலே கூடிய கூட்டத்திலே, சர். டேஜ்பகதூர் சாப்ரு அவர்கள் வாசித்த, இந்தியாவிலே கல்வியும் வேலையில்லாத் திண்டாட்டமும்'' என்ற பிரசங்கத்தைப் பார்ப்போர் நன்கு உணர்வர்.

ஐக்கிய மாகாண சர்க்காரால் ''கல்வியும் வேலையில்லாத் திண்டாட்டமும்'' என்ற விஷயமாக விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட கமிட்டியில் தாமே. தலைவராக இருந்ததாகவும், நீண்ட சுற்றுப்பிரயாணம் செய்து, உத்தியோகஸ்தர்கள், மற்றைய பிரமுகர்கள், ஆங்கிலேயர், இந்தியர், வர்த்தகர்கள், கலாசாலை ஆசிரியர்கள் மற்றும் பல துறைகளிலுமுள்ளவர்களை விசாரித்து ஏராளமான சாட்சியங்களைச் சேகரித்ததாகவும், அந்த பிரசங்கத்திலே, சர். டேஜ் பகதூர் சாப்ரு குறிப்பிடுகிறார்.

அப்படி விசாரணை நடத்திய போது ஐக்கிய மண்டல போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல், திரு. ஹாலின்ஸ் (Mr Hollins) என்பவரும் சாட்சி கூறினாராம். அவரைப் பற்றி சர். டேஜ் பகதூர் சாப்ரு, புகழ்ச்சியாகவே கூறுகிறார். திரு. ஹாலின்ஸ், விசாரணைக் கமிட்டி முன் சாட்சியங் கொடுப்பதற்குச் சில வாரங்களுக்கு முன்பு பல பி. ஏ. பட்ட

தாரிகளை போலீஸ் கான்ஸ்டேபிள் உத்தியோகத்திற்கு நியமித்ததாகக் கூறினாரென சர் டேஜ் பகதூர் சாப்ரு தமது லண்டன் பிரசங்கத்தில் கூறியுள்ளார்.

ஐக்கியமாகாணத்திலே, போலீஸ்காரருக்கு, 13 லிருந்து 15 ரூ. வரை சம்பளம். சிற்சில இடங்களில் ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் அலவன்சு கிடைக்கும். வேறு ஒரு தொழிலும் கிடைக்காததால், பி. ஏ. பட்டதாரிகள், கான்பூர் முதலிய இடங்களிலே, தெருக்களில் பால் விற்பதாக, மற்றொரு சர்க்கார் உத்தியோகஸ்தர், சாப்ரு கமிட்டியாரிடம் கூறியுள்ளார். சர்க்காருக்கு சாப்ரு சமர்ப்பித்த அறிக்கையில் இவைகளைப்பற்றி குறிப்பிட்டுள்ளதாகவும் சொல்கிறார். ஹிந்தியையே தாய்மொழியாகக் கொண்ட, ஐக்கியமாகாணத்து பட்டதாரிகளான வாலிபர்களுக்கு, இவ்வளவு குறைந்த சம்பளத்தில் தங்கள் சொந்த பிரதேசத்தில் வேலை கிடைப்பதே திண்டாட்டமாக இருக்கிறதென்றால், தென்னாட்டு பட்டதாரிகளான வாலிபர்கள், ஹிந்தி கற்றுக்கொள்வதால் மட்டும், வடநாட்டிலே வேலை தேடிக் கொள்ளமுடியும் என்று எண்ணுவதற்கு இடமிருக்கிறதா? திராவிட வாலிபர் நிலை மோசமாகத் தான் இருக்கிறது. ஆனால், வடநாட்டிலுள்ள ஹிந்தி பியின்ற பட்டதாரிகளின் நிலைமையோ வென்றால், படுமோசமாகவே இருக்கிறது.

ஹிந்தியில் பொது ஞானமுண்டா?

இந்தியாவிற்கு ஒரு பொது பாஷை வேண்டுமானால், இங்லீஷ் தயாரில் இருக்கிறது. சுமார் 75 வருஷங்களாக படித்த இந்திய உலகிற்கு, இங்கிலீஷே பொது பாஷையாக இருந்து வந்திருக்கிறது. தினே, தினே, அதன் வளர்ச்சி, விரிந்து, ஊன்றி வருகிறது. 1885-ம் ஆண்டு பம்பாயிலே, பல மாகாண பிரமுகர்கள் கூடி அகில இந்திய தேசிய காங்கரசைத் துவக்கியதற்குக் காரணம், ஆங்கிலபாஷா ஞானமேயாகும்.

அடுத்தடுத்துக் காங்கரஸ் பல இடங்களில் கூடினதற்கும் சமூதாய, தொழிலாராய்ச்சி சம்மந்தமான, பற்பல மகாநாடுகள், பல சமயங்களில் இந்தியாவிலே பல் முக்கியமான இடங்களிலே நடைபெற்றதற்கும் ஆங்கிலபாஷா ஞானமேதான் காரணம். காங்கரஸ் ஆசாட்சி செலுத்தும் பல மாகாணங்களிலும், சட்டசபைகளில், கடவடிக்கைகள் தாய் மொழியில்

கடைபெறவில்லை. ஆங்கில பாஷையில் தான் நடைபெறுகிறது

பல்வேறு காரணங்களால். இங்கிலீஸ் பாஷை, நம் நாட்டிலே, மதிக்கப்படும் விருந்தாளியாக வந்தாகி விட்டது. அது நிரந்தரமாக நிலைத்து நிற்கும் தகைமைத்தது. வளர்ச்சி கவர்ச்சி நிரம்பிய மொழி. எவ்வளவு நுட்பமான, புலப்படுத்துவதற்காய எண்ணங்களாயினும், அந்த பாஷையிலே அழகு பெற விளக்கமுடியும், விஞ்ஞானம் போன்ற விலைமதிக்கொணா விதவிதமான பல மணிகள் ஜொலிக்கும் பாஷை.

ஷேக்ஸ்பியர், மில்டன் போன்ற கவிதா சிரேஷ்டர்கள் பாடிய பாஷை. பாரடே போன்ற விஞ்ஞானிகளின் போதனைக்கு உகந்ததான இங்லீஸ்பாஷை. மதிப்புற்குரியதே யன்றோ? மேனாட்டு கொள்கைகள் எண்ணங்களுடன் கம்காடு தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டுமானால் ஆங்கில பாஷா ஞானம் அத்யாவசிய மாகிறது. (வேறு பிரன்சு போன்ற ஐரோப்பிய மொழியேனும் தேவையாக இருக்கும்) காகரீக உலகிலே பெரும் பகுதியிலே உலவிவருவது ஆங்கிலம்.

வியாபார உலகில் உன்னத ஸ்தானம் பெற்றிருப்பதும் ஆங்கிலமே. இவற்றுடன், ஆங்கிலம் தேவபாஷையல்ல; மதத் தகராறுகளைக் கிண்டிவிடுவதல்ல. இந்தியா பூராவிற்கும் பொது பாஷையாக ஒன்றுமில்லை. இப்போது படித்த இந்தியருக்கு, இங்லீஷே பொதுபாஷையாக இருக்கிறது.

இங்லீஷால் தேசபக்தி போய்விட்டதா?

இங்லீஷால் தேசபக்தி போய்விட்டதாக கூறுகிறார்கள். தேசபக்தி என்ற தத்துவத்தைச் சரியாக உணர்ந்து கொள்ளாமல், "ஆங்கிலம், அன்னிய மொழி, அதை உதறித்தள்ளுவோம்" எனக்கூறி, மொது மக்கள் விருப்பத்திற்கு மறாக, தேசத்தின் ஒரு பாகத்திலே மட்டும் நிலவிவரும் ஹிந்தியை, அகில இந்தியர் பொது மொழியாக்க வேண்டுமெனக் கூறுவதற்குக் காரணம் ஒன்றும் இல்லை.

அக்காரியமும் பலிக்காது. கிரிக்கட் (Cricket) விளையாட்டை, தேசீய விளையாட்டாகக் கொள்ளலாமா என்ற விஷயத்திலே, சென்னை மந்திரிகளுள் அபிப்பிராய பேதமிருந்தது.

கிரிக்கட், அன்னிய தேசத்தாரின் விளையாட்டு, ஆகவே அதை நாம் வெறுத்து விலக்கவேண்டுமென, சில மந்திரிகள் கருதுகிறார்கள். என் நண்பர், கனம். டாக்டர் சுப்பராயன் தமது சகாக்களுடன் இவ்விஷயமாகப் பலமாகமாறுபடுகிறார்.. கிரிக்கட் விளையாட்டை இந்திய தேசிய விளையாட்டாகக் கொள்ளவேண்டுமென ஆதரித்துக் கூறுகிறார். டாக்டர் சுப்பராயன் கூறுவதை நான முழு மனதுடன் ஆதரிக்கிறேன். அதைப்போலவே, அன்னிய பாஷைகளாக இருப்பினும், இங்லீஷையே இந்தியாவிற்குப் பொது பாஷையாக்க வேண்டுமென நான் கூறுவதை அவர் சம்மதித்து ஏற்றுக்கொள்வார் என நம்புகிறேன்.

ஆங்கிலம் நமது மதிப்பிற்குரிய விருந்தாளி. தாய்மொழி நமது அன்னையிலும் இனியது. எப்படிப்பட்ட அன்னிய மொழியானாலும் அது எவ்வளவு வளர்ச்சி, கவர்ச்சி, வனப்பு பொருந்தியதாக இருப்பினும் அது சாதாரண மக்களின் மொழியாக முடியாது. இம் மாகாணத்தில் பேசப்படும் தமிழினுடையவும் மற்றைய திராவிட மொழிகளினுடையவும் ஸ்தானத்தை, ஆங்கிலமும் பெற முடியாது. தாய் மொழி நம் தாய்மார் நம்மைத் தாலாட்டி வளர்த்த மொழி, சிறு குழவிகளாக நாமிருந்தபோது கொஞ்சிய மொழி. நமது மழலைப் பருவமொழி; சிறுவர்களாக இருந்தபோது, கருத்துக்கள் தெளிவடையாதிருந்தபோது, எண்ணங்களை உருவாக்கி வெளியிட ஏதுவாக இருந்த மொழி; அன்னிய பாஷையிலே எவ்வளவுதான் பாண்டித்தியம் பெற்றிருந்த போதிலும், பிற் காலத்திலே காதல், அன்பு, கோபம், சோகம் முதலிய மனோ பாவங்களைச் சித்தரித்துக் காட்ட உதவும் மொழி. நமது மரணப்படுக்கையிலே, நம் மரண வேதனையைத் தெரிவிக்க உபயோகிக்கும் மொழி. அப்படிப்பட்ட தாய் மொழிக்கீடானது வேறொன்றுமில்லை.

உலகிலுள்ள எல்லா பாஷைகளிலும், நமது உயிர் போன்றது, தாய் மொழி யொன்றே. அன்னிய பாஷையிலே எவ்வளவு வல்லமை பெற்றிருந்த போதிலும், காலமுழுதும் கீர்த்திப் பிரதாபத்தரக்கூடிய ஒரு கிரந்தம் இயற்றுவதென்றால், அது தன் தாய் மொழியில் எழுதப்பட்டதாகவே இருந்தாக

வேண்டும். இச்சமயம் எனக்கு ஆசிரியர் கிப்பன் (Gibbon) வாழ்க்கையில் ஒரு சம்பவம் நினைவிற்கு வருகிறது.

கிப்பன், பிரான்சு பாஷையிலே அதிக பாண்டித்யம் பெற்றவர். ஆகவே அவர் தமது "ரோம சாம்ராஜ்யத்தின் எழுச்சியும் வீழ்ச்சியம்" என்ற காப்பியத்தை, பிரான்ச்சு பாஷையிலே எழுதவேண்டுமென முதலில் தீர்மானித்தார்.

அதன்படியே முதல் அத்தியாயத்தை பிரான்ச் பாஷையில் எழுதி ஒரு நண்பரிடம் காட்டினார். அதனை ஊன்றிப் பரத்துவிட்டு, அந் நண்பர் கூறினார். "இதுமிக அருமையானதே. ஆயினும் ஆசிரியர், சரித்திர கிரந்தி கர்த்தா என்ற பெயர் என்றென்றும் உலகத்தில் நிலைத்து நிற்க வேண்டுமானால் இந்த காப்பியத்தை; அன்னிய பாஷையாகிய பிரஞ்சிலே எழுதுவதில் பயனில்லை. உனது தாய் மொழியாகிய ஆங்கிலத்திலே எழுத வேண்டும்" என்றாராம்.

கிப்பன் இந்த போதனையை ஏற்றுக்கொண்டு அக்காப்பியத்தை 27 ஆண்டுகளில் எழுதி முடித்தார். ஆசிரியர் கிப்பனின் பெயர், ஆங்கில பாஷை உள்ளவும் அழியாது! அவரது புகழ் நிலைத்து நிற்கிறது!

தமிழ் இலக்கியங்கள்.

என்றும் அழியாப் பெரும் புகழ் படைத்த, குறள், சிலப்பதிகாரம் போன்ற தமிழ் இலக்கியங்களை, தமிழைத் தாய் மொழியாகக் கொண்டவரே யன்றி வேறு எவரே எழுதுவர்? நமது தாய் மொழிகளாகிய தமிழ் முதலிய திராவிட மொழிகளை, காத்து, வளர்த்து, பரிபாலிப்பது, நமது கடமையாகும். ஆங்கிலத்திலுள்ள கலைகளை, சிறப்பாகவிஞ்ஞான நூல்களைத் தமிழிலே மொழிபெயர்த்தல், நமது தாய் மொழி வளர்ச்சிக்கு, ஆக்கமும், வளர்ச்சியும் தேடுதற்கு சால்சிறந்ததொரு மார்க்கமாகும்.

விஞ்ஞான நூற்களைத் தமிழிலே மொழிபெயர்க்கும் போது, ஆங்கில மொழியிலே காணப்படும் பதத்தின் கருத்தைத் தெள்ளத் தெளிய எடுத்துக்கூறும் தகைமையுடைய தமிழ்ச்சொற்கள் கிடைக்காத கஷ்டம் நேரிடக்கூடும். அச் சமயங்களிலே, புதிய சொற்களை சிருஷ்டி செய்பவோ, அதே

ஆங்கிலப் பதங்களை எடுத்து உபயோகித்துக் கொள்ள வேண்டாம் தயங்க வேண்டாம்.

உதாரணமாக, வழக்காடும் மக்கள் அனைவருக்கும் இப்போது, "கோட்டீஸ்" "சம்மன்" போன்ற பதங்கள் சர்வ சாதாரணமாகத் தெரியும். அவைகள் ஆங்கிலப் பதங்களே எனினும், தமிழ் மொழியிலேயே காணப்படும் பதங்கள் போலாகிவிட்டன. இன்று தற்கால ஆங்கிலமே, ஆங்கிலோ-சாக்சன், கார்மன்-பிரன்சு, கிரீக். லத்தீன் முதலிய பல பாஷைகளின் கலப்பே என்பதை நீங்கள் அறிவீர்கள்.

இதர பாஷைகளிலிருந்து புதிய வார்த்தைகளை எடுத்து உபயோகித்து, தமது பாஷையில் புகுத்தும் பணி இன்றும் தொடர்ந்து நடந்தே வருகிறது. இம்மாகாண மொழிக்கு ஆக்கந்தேட, திராவிய சகாயம் முதலிய உதவிகளைச் செய்ய வேண்டியது, சென்னை சர்க்காரின் கடமையாகும். வீணுக்கு பணத்தையும் பலத்தையும், ஹிந்தியைக் கட்டாயப் பாடமாக்குதல் போன்ற திட்டங்களுக்காக விரயமாக்காமல், திராவிட மொழி வளர்ச்சிக்காக, பண்டிதர்களுக்கு பண உதவி செய்து, திராவிட மொழி வளர்ச்சிக்கு சென்னை சர்க்கார் உதவி அளித்தால், நாட்டிற்கு நிரந்தரமான நன்மை அளித்தவராவர்.

ஐக்கிய மண்டலத்திலே, முதல் மூன்று பாரங்களிலே, தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென திட்டம் வகுத்தால், அந்த மாகாணத்து மந்திரிகளும், மக்களும் எப்படி அதை "வரவேற்பார்கள்" என்பதை நாம் சிந்தித்துப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம்.

அப்படி இருந்தும், சென்னை மாகாண மந்திரிகளே, ஹிந்தியை நமது பள்ளிக்கூடங்களில் நமது சிறு பிள்ளைகளுக்கு கட்டாயமாக்கத் துணிந்து நிற்பதைக் காண்கிறோம். இது ஒரு பெரும் துர் அதிர்ஷ்டவசமான சம்பவமாகும். இதிலிருந்து நாம் மீளுவோமாக.

ஹிந்தி எதிர்ப்பாளர் மகாநாட்டை ஆரம்பித்து வைப்பதற்காக, இதுகாலை உங்களிடையே வருவதற்காக நான் கண்பர், சர். கே. வி. ரெட்டி நாயுடு அவர்கள் தலைமையில் இம்மகாநாடு வெற்றிகரமாக நடக்குமாக. இவ்வார்த்தைகளுடன், நான இம்மகாநாட்டைத் துவக்கி வைக்கிறேன்.

தமிழ்க்கலை தேடி

தமயனிலை.

(பாரதியார் தலைமைப் பிரசங்கம்)

26—2—38-ல் வட ஆற்காடு ஜில்லா திருவத்திபுரத்தில் கடைபெற்ற தமிழர்கள் மகாநாட்டின் தலைவர் தோழர் எஸ். சோமசுந்தர பாரதியார் அவர்களின் தலைமைப் பிரசங்கம் வருமாறு:—

தமிழ்ப் பெரு மக்களே!

உலகம் முன்னோக்கி மிகவிரைவாக இயங்கி வருகிறது. எந்த நாடும் தந்நிலையில் யாதேதார் இயக்கமும்இன்றி மடிந்து அமைந்துகிடப்பதாகத் தோன்றவில்லை. இல்லை; தியானபரராய் அமைந்து கிடக்கும் கீழ்த்தேய மக்கள்கூட தூங்காமல் தூங்கும் சோம்பிய நிலையிலிருக்கின்றார்களில்லை.

மேனாட்டிலும்இயக்கம் இன்றிச் சோம்பி நோயுற்றுக் கிடந்தாரும் மிகு உணர்ச்சியும், பேருள்ளமும்கொண்டு விரைந்து கடக்கின்றனர். அவர்தம் கடைகீழைவும், உள்ள மிகுதியும் காணுந்தோறும் அமெரிக்கரும், ஐரோப்பியரும் அவலமும், ஓராற்றால் பொறாமையும் கொள்ளுகின்றனர்.

விழிப்பு.

இனி நம் நாட்டுக்கு வருவோம். நம் நாட்டிலும் நம் தமிழகம் ஒழிய ஏனை நாட்டு மக்கள் அனைவரும் விழிப்புற்று விரைந்து நிற்கின்றனர். ஆடவரும் பெண்டிரும் தத்தம்முள் வீறுகொண்டு நாட்டின் நலத்துக்கும், கலை வளர்ச்சிக்கும் மொழி வளர்ச்சிக்கும், தேய முன்னேற்றத்துக்கும், தனித்தனியே முந்தம்நோக்கத்தினாய் முனைந்து நிற்கின்றனர்.

தாகூர்களும், போஸ்களும் உலக அரங்கத்தில் தம் பெருவன்மை காட்டியும், வெண்றிமாலை சூடும் முகத்தால் தாம் பிறந்த வங்காள நாட்டின் இளமை நிலைமைக்கு வளமை மிகுவிக்கின்றனர்.

நேருக்களும் சாப்ருக்களும் இந்து ஸ்தானத்திற்கு எழிஞ் வினைவிக்கின்றனர். இம்மட்டோ! வடமேற்கு மூலையிலுள்ள பஞ்சாபும், தென்கிழக்கிலுள்ள ஆந்திர தேசமும், இலக்கியம், கலை, விஞ்ஞானம். தேசியம், சிற்பம், முதலிய கலைத்துறைகளில் நிகரற வினங்கி நிற்கின்றனர்.

வங்காளமும், கேரளமும்.

வடகிழக்கிலுள்ள வங்காளமும் தென்மெற்கிலுள்ள மலையாளமும் மிக்க அண்மைக்காலம் வரையில் இலக்கியச் செல்வமின்றி வறிதே கிடந்தன - இன்றோ, அவை, பல்கிக் கிடக்கும் கலைச் செல்வங்களும் அளப்பருஞ் சொற்களும் நிறைந்து வினங்கும் மொழிகள் பலவற்றுள்ளும், முன்னணியில் நிற்கின்றன.

அந்நாட்டு ஆண் மக்களும பெண்மக்களும், வானத்தை நோக்கி மையாந்து கிடக்கும் எனை மொழிச் சகோதரர்களின் மனமும் கருத்தும் மயங்கித் தயங்கி நிற்கத்தக்க நிலையில், கலை கலம் நிரம்பாத் தம்மொழிகள், அக்கலம் பலவும் நிரப்புதற்குரிய உலையா முயற்சியினை மேற்கொண்டு, நாளும் உழைத்து வருகின்றனர்.

ஆனால் சோம்பிக்கிடக்கும் தமிழர்கள், பண்டை நிலையை எண்ணி எண்ணி உழையாது நிற்க, அவ்வெண்ணம் அவர்களை முற்போக்கில் செல்ல ஒட்டாது பிற்போக்கிலேயே செலுத்துகின்றது. மேற்கூறிய இருவகை மொழியாளரும், இக்காலத் எதிர்கால இளைஞர்கள், இளமையும் வளமையும் எய்தி இன்புடன் பாரதநாட்டில் வாழ்வதற்கான வழிகளைக் கண்டு பிடிப்பதில், கவனம் செலுத்தி உழைக்கின்றனர்.

வடமொழியின் துணையின்றித் தமக்கே உரியவாகத் தனிப்பட்ட இலக்கியமும் சரித்திரமும் இவற்றிற்கு நெடுங்காலம் வரையில் இல்லை. ஆனால் இன்றோ, முன்னேறற நாட்டு மக்கள்பால் காணப்படும உள்ள மிகுதியும், உழைப்புத் திறனும் கொண்டு உழைக்கும் வகையில் தம்மை ஒப்பாரினும் தாம் முற்படச் செல்ல முனைந்து நிற்கின்றனர்.

அவ்விருவகையினரையும் கண்டு, அவர் தம் உழைப்பு நலம் அறிந்து, உலகம் வியக்கின்றது. தம்மை யுணர்ந்து தம் தனிச் சிறப்பையும் கண்டு தம் சமூகத்திற்கு ஏற்றங் கொடுக்கும் நிலையை அறிந்து கொள்ளுவதற்கு முன்னே, அவர்கள் வடமொழி

யின் ஆதிக்கத்தை முழுதும் பெற்ற வடமொழியின் வண்ணமும், பான்மையுமே பெற்றுவிட்டனர்.

அவை தோன்றிய மிக்க அன்மைக்காலத்தே வடமொழி கலப்புப் பெரிதும் செறிந்து விட்டதனால், அவற்றிற்கே உரிமை பெற்ற கலையும் இலக்கியமும் தோன்றுதல் கூடாமற் போயிற்று.

அவர் தம் பண்டைநிலை.

நெடுங்காலம் வரையில் அவர்கள் வடமொழியில் உள்ள சாதாரணக் கலைப்பகுதிகட்கு வேண்டியதொண்டினைப் புரிந்து வந்தனர். அவர் நாட்டுச் சமயமும் அரசியலும் அத்தொண்டிலேயே அவர்கள் மேன்மேலும் உழைக்க தூண்டினவே யன்றி அவர்கட்கே உரிய மொழித்துறையில் தனிப்பட்ட இலக்கியச் செல்வத்தை ஈட்டுவதற்குரிய முயற்சியினையும் கிளர்ச்சியினையும் எழுப்பவில்லை.

எனினும், சென்ற சில காலத்துள் சுயநலமற்ற பெருமக்கள் பலர் தோன்றி எழுப்பிய உணர்ச்சிபால், தம்மை உணர்ந்து, தமக்கே உரிய தம் மொழி வளர்ச்சிக்குரிய, உழைப்பை மேற்கொண்டு மிக்க விரைவுடன் இலக்கியப் பெருஞ் செல்வங்களை பல ஈட்டி, அவ்வின்பத்தில் திளைத்தாடுகின்றனர்.

இவ்விருமொழிகளும் தற்கால மக்கள் சமூகத்திற்கு வேண்டப்படும் நவ நவமான உணர்வுகள் கருத்துக்கள். பொருள்கள் முதலிய பலவற்றையும் உணர்த்தத்தக்க சிறப்புடைய சொற்களும், நூல்களும் செறிந்து இலங்குகின்றன.

தமிழர்கள்.

தமிழர்கள் தங்கள் கலப்பில்லாத கலை நலத்தையும், குற்றமில்லாத மொழி நலத்தையும் நிகரில்லாத இலக்கிய நலத்தையும் பன்னிப் பன்னிப் பேசுகின்றனர். அவர்களுடைய முற்கால நிலைமையாது?

அசோகர் தமது கருத்துக்களைச் சிலாசாசனங்களில் வெளியிடுவதற்கு முன்னமேயே-ஏசு கிறிஸ்து மக்களுக்கு உண்மைகளை எடுத்துக்காட்டுவதற்கு முன்னமேயே-தமிழர்கள் உலக மக்களுக்கு என்னென்றி கொளுத்தும் நலமுடையராய் இருந்தனர் என்பது உண்மையே.

சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன் தோன்றிய தொல்காப்பியம் என்னும் பேரிலக்கணப் பெருநூல், தமிழ் மொழியின் தொன்மைச் சிறப்பை விளக்கும் ஒரு பெருநூலாகும்.

சரித்திர காலத்துக்கு முன்பே தோன்றிய இலக்கியங்கள், வாய்ப்பின்றிப் பரந்து, பல்வேறு கலைத்துறைகளைத் தன்னகத்தே கொண்டு, பல்வேறு மக்கள் சமூகத்தைச் சமமாகக் கருதி நிலவி இருந்தன.

வள்ளுவர் வழங்கிய வான் புகழ்குறளும், அகத்துறை நிரம்பிய கலியுப், குறுந்தொகையும், குறுநூறும், பொருட்டுறை காட்டிய புறநானூறும், இளங்கோ அருளிய வளங் கெழுமிய சிலப்பதிகாரமும் பண்டைத் தமிழ் மக்கள் புதுப்பொருள் கண்டு ஆராய்ந்து உணர்த்தும் மதுரை உடையர் என்பதை விளக்குகின்றன.

பண்டைச் சரித்திரத்துள்மொழி கலத்காலும் இலக்கிய கலத்தாலும் முதலிடம் பெற்று பாராட்டப் பெறும் தமிழ் மக்களின் தமிழ்ச் சிறப்பினைத் தமிழாய நாம் இன்று வியந்து பேசுகின்றோம.

இப்பாந்த உலகத்து ஏனைநாட்டினரை விடுத்து, நம் இந்திய நாட்டு ஏனை மக்கள் சமூகங்களிடையே நம் தமிச் சமூகத்தை வைத்து நோக்கின், நம் தமிழ்ச்சமூகம் எவ்வாறுளது? எந்நிலையிலுள்ளது? என்பது நன்கு தெரியும்

தென்னாப்பிரிக்காவில் உள்ள தமிழ் மக்களின் துணிவுகடமையும், உண்மை உழைப்பும் கண்டு நமது மகாத்மா காந்தியடிகளும் பெரிதும் வியந்து பாராட்டியுள்ளனர்.

அவருடைய வியப்பு நிறைந்த அன்புநீர், தமிழகம் போந்து தமிழனுடன் உறவாடி, நேர்நின்று, அளவளாவிப் பயின்றுள்ள இந்நாள்று, உலர்ந்து ஆவியாய்ப் பறந்து போய்விட்டது.

தற்காலப் புத்தர்பெருமானாக விளங்குகின்ற நம் மகாத்மாவுக்குத் தாய் நாட்டினின்று நீங்கி, வேற்று நாட்டில் உழைத்து வாழும் நம் தமிழ்ச் சகோதரரிடத்து எழுந்த அன்பு, வற்றி வறண்டு போலித தேசிய உணர்வும், அசத்திய வாக்கும், போலி வாழ்க்கையும் உடைய ஒரு சிலரால், இருந்த இடம் தெரியாமல் மறைந்து போம்படிப் பற்றறத் துடைக்கப்பட்டு விட்டது.

தமிழின் வீழ்ச்சி.

வங்காளம், கோளம் ஆகிய இரண்டிற்கும் வேறுபட்ட நிலையில் நம் தமிழகம், வடவர், தமிழர் என்ற இரு திறத்தாரைச் சென்ற 200 ஆண்டுகளாகப் பெற்றிருக்கின்றது. அக்காலத்தில், அவர்கள் கலை அறிவு நிரப்பி, கலைத்துறைகள் பலவும் இயற்றியுள்ளனர்.

முன்னேற்ற நோக்கமுடைய மக்கள் பலர், அப்போது உழுதிருப்பாராயின், எல்லையின்றி பெருகிய வடமலையும் தென்கலையும் ஆகிய இரு கலைகளையும் ஒருங் செவ்வையாகக் கொண்டு அருப்பெரும் தொண்டுகளைச் செய்திருபடர்.

பெருவண்மை படைத்த தற்கால நாகரிகத்தை வளர்த்துக் கொள்ளுதற்குரிய இவர்கள், அதற்குரிய நெறிமுறைந்து முற்போக்கோடு முயன்றிருப்பதால் சுருக்கமும் தூய்மையும் அமைந்த தமிழ்க் கலையும், பாடலும் பண்பும் அமைந்த வடகலையும் போன்ற வளர்ச்சி பயக்கும் இனிமைப்பண்புகளை வழங்கியிருக்கும்.

ஆனால், தமிழர்கள் தம்மை மறந்து, தம் மொழி வளர்ச்சியையும் கைவிட்டமையின், தமிழ்வளர்ச்சி குன்றிநெகிழ்வதாயிற்று; தாழ்ந்து, இதன் வளர்ச்சிக்குரிய முயற்சியினைக் கைக்கொண்டு உழைத்தற்கு மிகுதியும் வெறுப்புக்கொள்வதோடு, எதிர்காலத்தில் தம்மொழி எய்தவேண்டிய சிறப்புக்குரிய பணியாளராக வேண்டிய கடமையினையும் அறவேமறந்திருந்தின்றனர்.

பண்டைத் தமிழ் நலத்தை அளவிறப்ப நுகர்ந்து தேங்கெறிந்த நிலையில் வட மொழியின் புளிச்சுவையில நாட்டங்கொண்டு அதனையே பெரிதும் உண்டு அறிவு கேட்டைபைத் தேடிக்கொடங்கினர்.

ஆந்து அவர் தம் அறிவினையமக்கி, அறிவால் ஆகிய அவர் தம் ஆக்கை நலத்தை ஈடழித்துப் பலவீனர்களாக்கி விட்டது. அதனால் புது நெறியில் கருத்தைச் செலுத்திப் புதுமையும் முற்போக்கும் நிரயபிய கலைச்செல்வங்களை ஆக்கிக்கொள்ளும் அமைதி குன்றினர்.

சுவை பயவாத கவிதைகளையும், இயற்கைக்கு மாறான சுவை கொண்ட வெற்று நூல்களையும், பொய் நூல்களையும் புனைந்து அறிவு கெடுவாராயினர். இவ்வண்ணம் அறிவு

வளர்ச்சிக்குக் கேடு சூழ்ந்துகொண்ட தன் பயனாய், இக் காலத்தினர் தமிழ்ச் சுவை இல்லாத நூற்றுணறையையும், தமிழ்க் கே உரிய தமிழ்ச்சுவையைப் பிறமொழியால் உணரும் வேற்று நூற்றுணறையையும் மேற்கொண்டனர்.

வடகலை முதலிய புதுக்கலைகளின் வரவால், அந்நிய கலைத் துறைகளிலும் ஆர்வங்கொண்டு அவற்றைத் தேர்வதில் தம் அறிவைச் செலுத்துவாராயினர்.

கி பி ஐந்தாம் நூற்றாண்டாகிய புராண காலத்துக்கு முன்பு தனித்தமிழில் இனிமைநலத்தை சுவைத்தறிந்த தமிழ் மக்கள், இரு ஜாதிப் பொருள்களைத் தழுவிக்கொண்டு, பல ஜாதிகளுக் குப் பிறந்த கூட்டத்தோடு செல்வாரைப் போலக் கலப்பு நூற் பொருள்களைக் கைப்பற்றிச் செந்தமிழின் சிறப்புக்குக் கேடு செய்கின்றனர்.

ஒரு பரிதாபகரமான நிலை.

தமிழரின் தற்காலநிலை, தம்மை யொத்த மொழித்தொண்டு புரியும் மக்கள் சமூகத்தினரும் சேர்ப உணர்வினரும் கண்டு இரங்கித்தணை செய்பத்தக்க நிலையிலேனும், நில்லாமல் மிகக் கீழ்ப்பட்டிருக்கின்றது.

நெருக்கிப்புறக்கணித்து வைவாரைப்போல, பிறமொழியினர் பார்க்கும் பார்வை, தற்காலத்து இயற்கை, நலம் குன்றி நிற்கும் தமிழுக்குரிய ஒவ்வொரு தமிழனுடைய மனமும் ஆறாப்புணணு ற்று அவதியுறச் செய்கின்றது. அன்றியும், வடகலையிற் கல்ப் பால் வலி இழுத்து மெலிந்து நிற்கும் அவனது மனமும், உடலும், வேறு முயற்சிக்குத் துணை செய்யக்கூடிய பலமின்றிக் கிடக்கின் றது.

தன் மனையுள் தமிழன் ஒரு "பறையனா"கவே இருக்கின் றான்; அவனுடைய பெருமை அழிந்து விட்டது; சமூக நிலை யில் அவர் நிற்றற்கு ஓர் இடம் இல்லை, தன்னிலை இன்னும் தாழ்வடையாது காத்தற்குரிய தகுதியும் இல்லை.

அவனுடைய உயர்ந்த எண்ணமெல்லாம் "உயர்ந்தவ" னென்று சொல்லப்படுகின்ற ஒரு நிறைதாருக்கு அடிமைப்பட்டு உழைத்து ஊழியம்செய்வதற்கும், அவர்கள் வீதியைச் சுத்தம் செய்வதற்கும்

அவர்களால் அடிமையைப்போல் நடைக்கப்படுவதற்குமே அமைந்திருக்கின்றது.

அவனுடைய கல்லொழுக்கமும் மனப்பான்மையும், அடிமைப் பள்ளத்தில் இறுகக்கட்டுண்டு, தனது தாழ்ந்த நிலைமையினையும் ஓராது, அதனை உயர்வாகக் கருதிப் பேசிக்கொள்ளுமாறு செய்து விட்டன.

சுயமரியாதையுடைய எவ்வுயிரேனும் கேட்குமாயின், நாணி வருந்தத்தக்க இழிவுரைகளையும்இக் காலஅடிமை மனப்பான்மையுடைய தமிழன், அப்பான்மையால் அவற்றைப் புகழுரையாகக் கருதிப் புன்னகை பூரிக்கின்றான்.

தமிழ்மக்களில் உயர்ந்தோர் எனக் கருதும் உயர் தமிழன் ஆரியர் வகுத்த ஜாதி முறை நான்களுள் கீழ்ப்பட்ட ஜாதியாகிய சூத்திர ஜாதியுள் சற்சூத்திரனாகவாவது தன்னை மதிக்குமாறு செய்து கொள்ள விரும்புகின்றான்!.

சற் சூத்திரனென்றால் சூத்திர ஜாதியில் நல்ல பாம்பரையில் வந்தவன் என்பது பொருள். தற்காலத் தமிழ் "தெய்வமொழி" எனப்படும் ஆரிய மொழியின் ஒரு சிறு கலப்பு மின்றித் தனித் தியங்குவது முடியாத காரியம் என்று சொல்லப்படுகின்றது.

அவனுடைய மதம், பாஷை, இலக்கியம், சமூக வாழ்வு என்ற யாவும் பார்ப்பனச் சகோதர்களுடைய உதவியால்தான் நிற்கின்றன என்று நன்றாய்க் கற்பிக்கப் பட்டிருக்கின்றான்.

உண்மையை நோக்குவோமானால் தமிழனுக்கு உண்டாகின்ளதமிழறியாமை யாகியநோயால் ஜன்னி பிறந்து தக்கபடி தமிழன் என்ற உணர்ச்சி மருந்தைச் செலுத்திச் சிகிச்சை செய்யாவிடின் தமிழ்ப்பான்மை தளர்ந்து சோர்ந்து தமிழன் என்னும் தகுதிப்பாட்டில் செத்து மடிவான் என்பது நிச்சயம்.

இவ்வாறு தமிழன் வீழ்ச்சி குறித்து வந்திருக்கும் நிலையை மாற்றுவது அருமையன்று. இவனுக்கு வந்திருக்கும் மூளைக் கோதிப்பு (ஜன்னி) கலந்தாத கலப்பு மொழிக்கலையாகிய கெட்ட உணவு காரணமாக வந்தது.

இக்கொதிப்பினை முதலில் தணித்து கலப்புமொழிக் கணை புணர்வாலாகிய விஷத்தைப் போக்குதல் வேண்டும். இவ

றுக்கு எளிதில் செரிக்கக் கூடிய மென்மையான உணவுகளைக் கொடுப்பது போல, தற்காலத் தமிழன் விரைவில் கஷ்டமின்றி தெளிவாய் அறிந்துகொள்ளக் கூடிய எழிய நூல்களாகிய தமிழ் உணவுதந்து தனித்தமிழனாக்க வேண்டும்.

இவ்வீழ்ச்சிக்கு காரணமாயிருந்த இடைக்காலத் தமிழ் நூல் களிலிருந்து அதற்கு ஆக்கந்தரக்கூடிய முயற்சி வழியில் மாறும்போது உள்ளக் கிளர்ச்சிதரக்கூடிய துறைகளைக் கண்டறிந்து, அவற்றின் வழியாக நம் பண்டைத்தமிழகம் வளம் பெற வேண்டும்.

மூலகாரணம்.

தமிழின் வளர்ச்சிக்குக்கேடு செய்வதாகிய சேர்க்கை நம்தமிழகத்தில் சுமார் 1500 ஆண்டுகட்கு முன்பே வந்துதோன்றிற்று. அது தோன்றுவதற்குமுன் தமிழ் மிக்கவளமும் சீரிய நாகரிகமும் பெற்றே இருந்தது தமிழரது நாகரிகவாழ்க்கையில் தோய்ந்து சிறந்த ஆரியருடைய கலப்பு அக்காலத்தில் உண்டாயிற்று.

அவ்வாரியருடைய பாஷை, சமூகம் முதலியவற்றுக்கு இடமாகிய சமஸ்கிருதத்தில் காணப்படும் நன்மைகளை மேற்கொண்டு அவற்றை மட்டில் தம்தமிழ்மொழியில் தழுவி, தமிழ் மாண்பினை வளர்த்துக்கொள்வதை விடுத்து, அந்த சமஸ்கிருதத்தில் காணப்படும் நன்மையல்லாத தீமைகளையும் வாரித்தழுவி, அச் சமஸ்கிருதத்தையே பின்பற்றி, தம் தூயதமிழ்நெறியை விடுத்துவிட்டனர்.

அதனால், ஆபாசப்பொய் கதைகளையும், பொய்யொழுக்கங்களும், தமிழ்நெறிக்குப் பொருந்தாத இலக்கிய இலக்கணங்களும் எழுந்து, தமிழர்களின் இயற்கை அறிவைக்கெடுத்து தமிழன் என்பதையும் மறந்து கெடுமாறு செய்துவிட்டன.

இவ்வகையில் தமிழர்கள் தங்கள் பண்டைத்தமிழ்ச் செல்வங்களையும், நாகரிக இயல்புகளையும் இழந்தனர்; ஆனால், தாம் புதிதாய் மேற்கொண்ட சமஸ்கிருதத்தையேனும் நிரம்பப்பயின்று முழுத்த சமஸ்கிருத மக்களாக மாறிவிட்டனரோ எனின், அப்படியும் ஆகவில்லை. தமிழ் நெறியே பின் பற்றி ஒழுகியிருப்பாயின், அவர்களுக்கு ஒரு கேடும் வந்திராது; முழுத்த சமஸ்கிருதக்காரர்களாகவே மாறியிருப்பரேல், இதுபோது, அவ்வகையில், பழமையும் கூடிய அளவுச் சிறப்பும் பெற்றிருப்பர்.

ரோமர் என்னும் மேனாட்டினர் தங்கள் மொழிச் சிறப்பும், கலைச்சிறப்பும் எனவிடாது, தம் சமூகத்திற் கலக்கப் போந்த கிரேக்கருடைய மொழியிலும் கலையிலும் கல்லனவையாய் உள்ளவற்றை மேற்கொண்டு சிறப்படைந்தனர்.

ஜர்மானியர், தமக்குச் சொந்தமாயிருந்த மொழியும், கலையும் முற்றிலும் கைவிட்டு, லத்தின் மொழியும், கலையும் கலந்து, முற்றிலும் புதிதாய நாகரீகமும், மொழியும பெற்றுச் சிறப்படைந்தனர்.

சங்க காலத்திற்குப் பின் இருந்த தமிழர், வடமொழியின் மொழி நலத்தையும் கலை நலத்தையும் ஆராய்ந்து, தமது தூய்மை அறிவு கொண்டு புடைத்து, நல்லனவற்றை தேர்ந்து கொள்ள முடியவில்லை.

ஒருமுறை தவறியன்றி, அவ்வடவர் மொழி, கலை, நாகரிகம் முதலியவற்றில் நழைந்து, அவற்றின் வெறிகொண்டு, இக்கால இக் கீழ் நிலைக்குக் காரணமாகிய செயல்களைச் செய்து ஒழிந்தனர்.

இந்நிகழ்ச்சிபால், வட கலையோ, தமிழ்க்கலையோ, எக்கலையும் எவ்வளவும் சீர் பெறாது போயிற்று. போகவே, தமிழர் தமது உண்மையை இழந்தனர்; தென்னிந்தியப் பார்ப்பனர் ஆரியக்கலையிலும், டழந்தமிழ்க்கலையிலும் போற்றப்பட்டு வந்த மெய்மையை இழந்தனர். எனவே, இக்கலப்பால், வடவருக்கோ, தமிழருக்கோ யாதொரு நலமும் உண்டாகவில்லை என்பது நன்றாய்த் தெரிகிறது. ஆண்மையும் ஆராய்ச்சியும் பொருந்திய ஆரிய ஆரண்யகங்களும், நவநவமான செயல் முறைகளுக்கு நெறிகாட்டத்தக்க சேர்மை படைத்த தமிழ்ச்செய்யுட்களும் வளர்வது நின்று போயின; அவற்றிற்கு மாறாக தூய்மையில்லாத கலப்புக் கருத்துடைய இழி நூல்களும், இழி நாகரிகமும் நம் தமிழகத்தில் எழுவ வாயின.

ஆரியக் கொள்கை.

ஆரியரின் வழிவந்துள்ள கூட்டத்தார், தமிழிலுள்ளயாவும் சமஸ்கிருதத்திலிருந்தே வந்தன என்றும், சமஸ்கிருத நூல்களிற் காணக்கூடியவை என்றும் சிறிதும் வாய் கூசாமல் கூறுகின்றார்கள். இது முற்றிலும் உண்மைக்கு மாறானதாகும்.

வேறுபட்ட கலைகள் எதிர்ப்படும்போது, ஒவ்வொன்றும் மாறுபாடு அடைவது இயல்பே. வழக்கிலிருக்கும் தமிழ்க்கலையும் வழக்கிறந்த வட மொழிக்கலையும் தம்முள் மாறுபாடு அடைந்

திருக்க வேண்டும். அம்மாறுபாடுகளில் ஒருசில முழுதும் ஒத்தும் சில சிறிதொத்துப் பெரிது மாறுபட்டும் இருக்கும்.

ஒரு சிலர், தமிழர் வணங்கும் தெய்வங்களின் பெயரெல்லாம் சமஸ்கிருதமாகவே இருப்பது காட்டி, தமிழர்க்குத் தெய்வ வழிபாட்டு உணர்வு சமஸ்கிருதக் கலப்பாலேயே உண்டாயிற்று என்பர்.

வேறு பலர், தக்க ஆராய்ச்சிசெய்து, மறுக்க முடியாத காரணங்களைக் காட்டித் தமிழ்நாட்டுக் கோயில்களிற் காணப்படும் எந்தத் தெய்வமும் ஆரியத்தெய்வமாகாது என்று சொல்லுகின்றனர்.

சிவன், சுப்பிரமணியம், விஷ்ணு என்ற தெய்வங்கள் ஆதியில் திராவிடர் வணங்கிய தெய்வங்களே என்றும், அவை ஆரிய மொழியில் ஆரியப் போல், ஆரிய தெய்வ வரிசையில் பின்னரே சேர்க்கப்பட்டன என்றும், சில ஆராய்ச்சியாளர் பலரும் நுட்பமாய் ஆராய்ந்து தெரிவித்திருக்கின்றனர்.

இப்பொருள்பற்றி நிகழ்ந்த ஆராய்ச்சி இங்கு வேண்டியதில்லை. நாம் இப்பொழுது தமிழர்களுக்குத் தங்கள் தமிழ், தமிழ்க்கலை, தமிழர் சமூகம் என்ற இவற்றிற்குச் செய்யக் கடமை மூண்டுள்ள செயல் முறைகளை ஆராய்ந்து செய்பவே கூடி இருக்கின்றோம்.

ஒருவகைச் சம்பந்தமும் இல்லாதவர்போல, இதுவரையில் தூங்கிக்கிருந்த தமிழர்களாகிய நாம் இனிமேல் தூங்கிக் கிடக்க முடியாது. தமிழர் சமயம், தமிழர் தத்துவம், தமிழ் இலக்கியம், தமிழர் மனப்பான்மை தமிழ் நாட்டில் தப்பாகக் காட்டப்பட்டு மறைந்துக்கின்றன வென்றாலும் பல வருடங்களாக, மற்ற சமூகத்தவருக்குத் தப்பாகவே எடுத்துக்காட்டப்பட்டு வருகின்றன.

தமிழர்களுடைய மிகஉன்னதமான கோயில் வேலைகளும், கோயிற் கட்டிட அமைப்புகளும், வட இந்தியாவிலிருந்து வந்த ஆரியர் கற்பிக்கக்கற்றுக் கொண்ட பிறகே, தமிழர்களால் கட்டப்பட்டன என்று கூட சில மூட மதியினர் சொல்லி வருகின்றனர்.

சில அநியாயமான பொய்யுரைகள்.

தமிழர்களின் மத சம்பந்தமான தத்துவங்கள் பார்ப்பன சகோதரர்கள் கொடுத்தபிச்சை என்று சொல்லுகின்றனர். வள்ளுவரும், கம்பரும் வாய்மலர்ந்து பாடிய பாக்கள் பலவும் சமஸ்கிருதத்தில் வழிவந்தனவே என்று அடிக்கடி சொல்லி வருகின்றனர்.

பெரும் பாறைகளைக் குடைந்து செய்துள்ள கல் வேலைகளும், மலைக் குகைகளிற் செய்யப்பட்டிருக்கும் சிற்ப வேலைகளும் கூட ஆரிய வேலைக்காரர்கள் போதித்த போதனையால் செய்யப்பட்டனவே என்கின்றார்கள்.

தற்காலத்திலும் சில பள்ளிக்கூடச் சரித்திர ஆசிரியர்கள் தாங்கள் எழுதிய இந்து தேசசரித்திரப் புத்தகங்களில் வட நாட்டில் இருந்து வந்த ஆரியர்கள் தென்னாட்டிலிருந்த தமிழர்களை வென்று அடிப்படுத்திக் கொண்டனர் என்று எழுதியும் கற்பித்தும் வருகின்றார்கள்.

பண்டைச் சரித்திரக் குறிப்புகளை வைத்துக்கொண்டு சிறிது ஆழ்ந்து நோக்கினால், சாதாரண மனிதனுக்குங்கூட ஆரியக் கொள்கைகள் தமிழ்க் கொள்கைகளில் இடையே மிகச் சிறிதே தோய்ந்திருக்கின்றன என்றும், சமஸ்கிருதக்கலையறிவும் சிறிதே பாய்ந்திருக்கிறதென்றும் விளக்கமாய்த் தெரியும்.

மேலே சொன்ன இவ்வனிபாயமான சமஸ்கிருதக் கானல் இந்தக் காலத்தில் ஒரு சில பார்ப்பனர் வாயளவில் இருந்து கொண்டும் பலவேறு வகைப்பட்ட காரணங்களால் ஒரு சில தமிழர்களுக்குத் தெரிந்த வண்ணமும் இருக்கிறது.

வேதங்கள்.

வேதங்களும், வேதவேள்விகளும் ஆரியர் கொள்கைக்கும், ஆரிய நாகரிகத்திற்கும் அடிப்படையாகும். தங்கள் தத்தம் நூல்களில் கருத்தூன்றாமல் எவ்வாறு அலட்சியமாய் இருந்தார்களோ அவ்வாறே இவ்வேதங்களின் வகையிலும் தமிழர்கள் கருத்தூன்றாது இருந்தனர்.

இவை தமிழர்களால் படிக்கப்படாமலும், படிக்கக்கூடாமலும் இருந்தன. வைதீகக் கிரியைகளிலும், தமிழர்களுக்கு அவ்வேதம் பயன் படுவதில்லை. இவ்வாறு வேதங்கள் தமிழர்களுடைய மனத்திலும், உள்ளக்கருத்திலும் ஒருவகை ஊற்றமும் பெறவில்லை.

நால்வகைச் சாதிப்பிரிவும், அவை படிப்படியாக அமைந்திருக்கும் அமைதியும், அவ்வவ்வகுப்புக்குள் மிகப்பலவாய் பிரிந்திருக்கும் வகுப்புப் பிரிவுகளும், பிறவுமே ஆரிய நாகரிகத்தின் மூடிவான அமைப்பாகும்.

இச்சாதிப் பிரிவினை, தமிழ்நாட்டில் இருந்ததுமில்லை; எக்காலத்திலேனும் அது நடைமுறையில் வந்ததுமில்லை. தமிழ்ச் சமூகத்துள், சூத்திரர் வைசியர் என்கின்ற பாகுபாடு உண்டு என்றும், தமிழர்களுள் சிலரை சூத்திரர் என்றும், வைசியர் என்றும் எந்த ஆரியனும் மேற்கொண்டதுகிடையாது.

காடறிந்த தமிழர்களுக்குள் எந்தச்சாதியினரும் பார்ப்பன சமூகத்தினராக ஏற்றுக் கொள்ளப்பட்டதே கிடையாது. தமிழகத்தில் உள்ள பார்ப்பனர்களாயினும் தாங்கள் ஆதியில் வடகாட்டில் இருந்துவந்த ஆரியர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றாகள.

தமிழர்களனைவரும் ஆரியச்சாதிப்பகுப்புக்குள் கடையான சாதிப் பகுப்பாகிய சூத்திரர் என்றே அழைக்கப்படுகின்றனர்.

இதனால் தமிழ்ச் சமூகம் ஆரிய சமூகத்தில் இருந்து ஒரு தலைபாக ஒதுக்கப்பட்டு இருக்கின்றது என்பதும், தமிழரும் ஆரியரின் வேறுபட்டவர் என்பதும், தமிழர் உண்மையில் ஆரியர்க்குப் புறம்பானவர் என்றே மதிக்கப்பட்டிருங்கின்றனர் என்பதும், அத்தமிழர்கள் செய்யும் தொண்டுகளும், உபகாரங்களுமே பார்ப்பனச் சகோதரர்களால் அங்கீகரிக்கப்பட்டு வருகின்றன என்பதும் நன்கு விளங்கும்.

சாதிமுறை.

தமிழர் சமூகத்தில் தொழில்பற்றிய வகுப்புமுறை இருந்தே தவிர, ஆரிய முறைப்படி உள்ள சாதிவகை எக்காலத்திலும் இருந்ததுகிடையாது. ஆரிய சாதி முறை சமூகப்பாகுபாடாய்ப் பல சமூகங்களின் ஒழுக்க வழக்கங்களுக்கு ஏற்ப ஏற்பட்டதாகும்.

அந்த முறையில் சூத்திரியர் தம் பெண்களைப் பிராமணர்களுக்கு வைப்பு ஸ்திரீகளாக இருப்பதற்குக்கூட கொடுக்கலாம்; ஆனால் அவர்கள பிராமணரின் கலியாணம் ஆகாத இளயகளினையும், கலியாணம் செய்து கொள்ளக்கூடாது.

வைசியர் தமக்குமேலுள்ள இருதிறத்தாருக்கும் பெண் கொடுக்கலாமேதவிர, பெண் வாங்கமுடியாது. முதல் மூன்று சாதிக்குள்ளும் சமபந்தி போஜனம் உண்டு.

இந்தக் கலப்புமணமும் முதல்மூன்று சாதியிலும் உயர்ந்தவர்களுக்குத்தான் உண்டு. ஆனால் அதே நிலையிலுள்ள பெண்களுக்கு அவ்வாறு தாமாகவே கலப்பு மணம் செய்துகொள்ளும் உரிமை கிடையாது என்று சாஸ்திர பூர்வமாக விலக்கப்பட்டிருக்கிறது.

கலியாண விஷயங்களில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் வேறு வேறு விதி விலக்குகளைச் செய்து கொண்டதுகாணயாகத் தான் ஆரியர்க்குள் சாதி உயர்வு தாழ்வுகள் உண்டாயின.

இவ்வகையான சாதிக் கோளாறு தமிழர் தமிழகத்தில் இல்லை. தமிழ் மக்கள் இடையே, எந்த வகுப்பாருக்குளளும் உயர்வு தாழ்வு என்ற வேற்றுமையே இருந்தது கிடை—

யாது. ஒரு வகுப்பிலுள்ள ஒரு பெண், வேறொரு வகுப்புக் குரிய ஓர் ஆடவனை மணந்து கொள்ள மாட்டாள்.

ஒவ்வொரு தமிழ் வகுப்பும் தன்னுள் அடங்கி, தனக்குள்ளே கலியாணம் காட்சி செய்து கொள்ளும் இயல்புடையது; எவ்வகையிலும் இதர வகுப்போடு சம்பந்தம் செய்து கொள்ளுவது கிடையாது.

கம்மாள வகுப்பினர் தாம் ஏனை எல்லா வகுப்புக்களிலும் உயர்ந்தவர் என்று கூறுவர். வேளாளர் தம்மில் உயர்ந்தவர் தெய்வங்கள் தவிர வேறு இல்லை என்பர். இடையன் ஒருவன் தன் மகளை மறவன் ஒருவனுக்கு மணம் செய்துகொடுக்க இசைய மாட்டான்.

மறவன் மகள் ஒருத்தி இடையன் ஒருவனை மணஞ்செய்து கொள்ளவிரும்ப மாட்டாள். சமூக நிலையில் ஒரு வகுப்பு எத்துணை வளமும், சிறப்பும் உடையதாய் இருப்பினும், அதற்கு வேறொரு வகுப்பு தாழ்ந்து குற்றேவல் புரியும் அடிமையாவது கிடையாது.

இதனால் ஒன்றுக்கொன்று உயர்வு தாழ்வு கற்பித்துநிற்கும் ஆரியச் சாதிமுறை தமிழகத்தில் கிடையாது என்பது கன்றாய் விளங்கும்.

ஆரியக்கலப்பால். தமிழ்ச் சமூகத்தில் இருந்த வகுப்புகளுக்குள் ஒன்றொன்று கலந்துவிடாதபடி ஒவ்வொன்றும் தனித்தனியாக வேறுபட்டு நிற்கவேண்டிய ஏற்பாடுகள் உண்டாகி தமிழரின் ஒருமை நிலைக்குக் கேடுதான் உண்டாயிற்று.

வகுப்புக்களுள், உயர்வுதாழ்வு என்ற செய்தி நூல்களிலோ, கடைமுறையிலோ எதிலும் இருந்தது இல்லை. தமிழ்நாட்டுப் பறையன் ஒருவன் தன் மகளை ஒரு பிராமணன்மணக்க விரும்பினாலும், கொடுப்பதற்கு ஒருக்காலும் இசையமாட்டான். தாழ்ந்த சாதியான் ஒருவன் தன் சாதிப் பெண்ணை, உயர்ந்த சாதியான் ஒருவனுக்கு மணம் செய்து கொடுக்கலாம் என்ற ஆரிய சாதி முறைக்கும், ஒரு வகுப்பில் பிறந்த ஆண்மகன் வேறொரு வகுப்பில் பிறந்த பெண் மகளை மணந்துகொள்ள முடியாது என்ற தமிழ் வகுப்பு முறைக்கும் உள்ள வேறுபாடு தெரியாதவர்கள், ஆரியர் சாதி முறையை மேற்கொண்டுதான் தமிழர் சாதிமுறை வகுத்துக்கொண்டனர் என்று சொல்லிக் கொள்ளுவர்.

தமிழில் ஆரியரில்பு.

வழக்குமொழியாகிப போது தமிழில் வழக்கிறந்த மொழிபாகிப போங்கிருதம் எவ்வகையில் இயைந்திருக்கிறது என்பதை நோக்குவோம்.

பிறலுங்கு திராவிடமொழியிலிருந்து தோன்றியதாகும். அது தன்னுடைய சொல்லியல் அடைவை அறவே கையுதிர்த்து விட்டு ஆரியமாகிருத இலக்கணத்தை மேற்கொள்வதாயிற்று.

மேலும் அது தன் சொற்பெருக்கில் தனக்கே உரிய தனித் தெலுங்குச் சொற்களையுடையதாய் இருப்பினும், அவை தம் மரபும் உருவும், குன்றி உண்மை வடிவு தோன்ற மாட்டாத நிலையில் இன்றும் காணப்படுகின்றன.

ஆயினும் அம்மொழி இப்போது, சமஸ்கிருதச்சொற்களை விலக்க நினைக்குமாயின் அது நிற்றற்குரிய நிலைபிழந்து கெட்டுப் போகும். தமிழா எனின் இன்றே சமஸ்கிருதச் சொற்கள் எல்லாவற்றையும் விலக்கத் தொடங்கினும், இது தன் நிலை கெடாமல் தன்மணமும், உருவும் சிறப்பும் குறைவுறப் பொலிந்து நிலவும்.

ஐரோப்பிய மொழிகள் லத்தீன் மொழிச் சொற்களை மேற் கொண்டதுபோல, தமிழும் ஒரு சில, ஆரிய மொழிச் சொற்களை மேற்கொண்டது. இதனால், தமிழ்தான் வழக்கிறந்து கெடாமல் இருப்பதற்காக வடசொற்களை மேற்கொண்டது என்று கூறு நினைப்பது மடமையாகும்.

திராவிட இயல்பு.

இதனால் ஆரியக்கலைபறிவு தமிழகத்தில் இன்னும் ஆழ வேரூன்றி நிற்கவில்லை யென்பதும், தமிழர் மனத்தில் தமிழ் நினைவே நிகழ்கின்றது என்பதும் யாவரும், இனிது காணலாம்.

தமிழர்களை தம் தமிழ்நலம் இழந்த அறியாமையால் மறைப்பிண்டு மயங்கி யிருக்கின்றனர். தூய ஆரிய ரத்தம் ஓடுகிறதாம் தமக்குள், தமிழகத்தில் வாழும் பார்ப்பனர் தமிழர் கூட்டுறவால் தமிழ் வாழ்வின் மணம் வீசப்பெற்றுத் திருந்தி, தம்மை அதனின்றும் விடுத்துக் கொள்ளமாட்டாத நிலையை யடைந்து விட்டனர்.

தமிழ் வாழ்க்கையின் சார்பினால், சமூகநிலையும், குடும்ப நிலையும் திருந்தப் பெற்ற தன்பயனால், இவர்கள் வடநாட்டில் உள்ள பிராமணரின்வேறாய்த் தனித்த சமூகத்தினராகவே நிற்கலாயினர்.

திருமணம், பாரம்பரியம் முதலிய வகைக்குரிய சட்டதிட்டங்களிலும், இந்நாசவிடப் பார்ப்பனர்கள் தமிழருடைய நாகரிகத்தைப் பெரிதும் மேற்கொண்டு கங்கைநதி பாயும் காட்டில் உறையும் பார்ப்பனரை நோக்கி மிகுதியும் வேறுபட்டிருக்கின்றனர்.

உணவு, மதம் முதலியவைகளிலும் வட நாட்டுப் பார்ப்பனர்க்கும், திராவிடப்பார்ப்பனர்க்கும் வேறுபாடு உண்டாய்விட்டது. சங்கரர் காட்டிய சமய நெறியிலும் தென்னாட்டுச் சயமநெறிப் பொருட் கூறுபாடுகள் இலகாணப்படுகின்றன.

சமஸ்கிருத இலக்கியங்களை நோக்கினால், அவற்றுள்ளும் தமிழ்க் கலையின் இழைபுகளும், தமிழுக்குச் சமஸ்கிருதம் கடமைபட்டிருக்கும், பகுதியும் உண்டெனபது மிக விளக்கமாய்த் தெரிகின்றது.

தமிழகத்தில் உள்ள ஆரியப் பார்ப்பனரும் தமது ஆரிய மொழியைக் கைவிட்டுத் தமிழ் மொழியையே தாய்மொழியாகக் கொண்டு வழங்கி வருகின்றனர். எனினும் அவர்கள் தமக்குத் தமிழ்மொழி தாய் மொழியன்று யென்று கருதுவதும், வழக்கு இன்றி இறந்தொழிந்த சமஸ்கிருத மொழிக்குத் தாம் கடமைப் பட்டிருக்கின்றார்கள் என்பதும், அவர்களிடத்தில் நன்றாய்க் காணப்படுகின்றன.

தவறான ஆரியனிடத்தில் உடும்புபோல் விடாப்பிடியான பற்று இப் பார்ப்பனரிடத்தில் அமைந்து கிடப்பதும், இயற்கைக்கு மாறாக, தமிழர்களுக்குத் தம் தமிழ்க்கலையை அறிய வேண்டும் என்ற உணர்வு இல்லாமை மிக மிகப் படிந்து கிடப்பதும் வியக்கத்தக்க இயல்புகளாகவே இருக்கின்றன. இவற்றிற்குரிய காரணத்தை நன்கு ஆராய்ந்து தக்க பரிகாரம் செய்ய வேண்டியது அறிவுடையோர் கடமையாகும் என்று கூறி, மேற் செல்லுகின்றேன்.

அபவாதமான பொய்யுரை.

இப்பொழுதைக்குச் சுமார் ஆயிரம் ஆண்டுகளாக, தமிழ்க் கலையின் சரித்திரத்துள் சிறந்து நிற்கும் தொல்காப்பியம், திருக்குறன் என்ற நூல்கள், இடையிற்போந்த ஆரியர்களாலும், ஆரிய வலைப்பட்ட தமிழர்களாலும் பலவகையில் கெடுக்கப்பட்டிருக்கின்றன.

அவர்கள் இவற்றைப்பலவகையிற் சிதர்த்து, அபவாதமான பொய்யுரைகள் வகுத்து, தமிழரின் தூய தமிழ் நாகரிகம்விளக்கமாகாதபடிக் கெடுத்திருக்கின்றனர்

தொல்காப்பியத்தின் ஒவ்வொரு சூத்திரமும், திருக்குறளில் ஒவ்வொரு குறளும், சிரிய ஆரிய நூற்கருத்தென்றும்,

கொள்கையென்றும், மனஞ்சுளியாது, நாகூசாது மொழிகின்றனர்.

நச்சினார்க்கினியார் என்பவருடைய அறிவெல்லாம் தமிழ் நெறிக்கு ஒவ்வாத கருத்துக்களைக் கொணர்ந்து இச்சூத்திரங்களில் புகுத்திக் காட்டுவதற்கே செலுத்தப்பட்டிருக்கிறது.

சூத்திரங்களுக்குஅவர் உரைக்கும் பொருள்தருக்க நெறிக்கு எவ்வகையிலும் ஒவ்வாதிருப்பதால், அதனைச் சரிப்படுத்துவதற்காக அவர் கொண்டு கூட்டிஉரைக்கும் உரைப்பகுதிகளும், இந்நூல்களின் உண்மைப்பொருள்களை மக்கள் நேரே உணர்ந்து கொள்ளாதபடிச் செய்யவேண்டும் என்றும், வடகலையின் துணையின்றித் தமிழ்க்கலை தனிப்பட இல்லையெனப் பின்வருவோர் துணிந்துகொள்ள வேண்டும் என்றும் எண்ணிச் செய்துள்ள வஞ்சவுரைகளும் தமிழ் அறிஞர் மனத்தில் தீராத வேதனையை உண்டு பண்ணுவனவாய் இருக்கின்றன.

கலை நலமும், இலக்கிய நலமும் சிறந்து விளங்கும் இவற்றின் கருத்தும் பொருளும், ஆரியர், தமிழர் என்ற இருவர் கலைத்துறையின் இயல்புகளை வேறுபடுத்துக்காணத்தக்க நிலையில் இருக்கின்றன. இவ்வேறுபாடுகளும், கருமணியும் வெண்மணியும் போல இனிது பிரித்துக் காணத்தக்க நிலையிலேயே உள்ளன.

தொல்காப்பியர் செய்த தொல்காப்பிய இலக்கணம், வடவேங்கடம் தென்குமரி இரண்டிற்கும் இடையில் உள்ள தமிழகத்து, அக்காலத்து வழங்கியவழக்கும், செய்யுளும் ஆராய்ந்து செய்யப்பட்டது என்றே கூறுகின்றது.

நச்சினார்க்கினியாரும், தொல்காப்பியத்தின் காலம் குறிக்க வந்தவர், விளக்கமாகவே, வியாசரால் வேதங்கள் நான்காக வகுக்கப்பட்ட காலத்துக்கு முன்பே தொல்காப்பிய இலக்கணம் தோன்றி விட்டது என்று கூறுகின்றார்.

மேலும் ராம ராவணப் போர்நிகழ்ச்சிக்கு முன்னமே இத் தொல்காப்பியம் தோன்றியிருக்க வேண்டும் என்றும் சொல்லுகிறார். இராமன் சீதையைமணந்து கொண்டு, அயோத்திக்கு வரும்போது, அவனை எதிர்த்துத் தோல்வியுற்ற பரசுராமனது உடன் பிறந்தவரே தொல்காப்பியர் என்றே நச்சினார்க்கினியர் உரைக்கின்றார். இவ்வாறெல்லாம் முன் மொழிந்து வரும் இவர், தொல்காப்பியத்துக்கு உரை பெழுதுங்கால், அவர்காலத்துக்கு மிகவும் பிற்பட்ட ஆரிய புராண நூற் கொள்கைகளையும், தமிழகத்தே இல்லாத ஆரியக் கொள்கைகளையும் புகுத்தி உரை எழுதியிருக்கின்றார். பண்டைச் சங்க இலக்கியங்களில் தொல்காப்பியத்தையடுத்துத் தோன்றிய நூல் திருக்

குறளாகும். இதற்கு உரைகண்டவரும், "திருக்குறளார்சீர் யர் குறுகிய மனப்பான்மையும், சாதியுணர்வும், தமிழ் நாகரிகத்துக்கு ஒவ்வாத கொள்கையும் உடையவர்" என்று எண்ணுமாறு உரை யெழுதி யிருக்கின்றார். தமிழறிவு செறிந்த தமிழ் மக்கள் இனி, இவற்றை நன்கு ஆராய்ந்து, பண்டைக்காலத் தமிழ் படைந்த பெரு நூல்களாகியஇவற்றால் விளக்கமாகும் மிகப் பழைய காலத்துத் தனித் தமிழ்மக்களின் பண்டைச் சரித்திரத்தை வெளிப்படுத்துவது கடமையாகும்.

தனித் தமிழ்க் கலை.

பார்ப்பனீயப்பற்று மிகச் சிறந்தவரும், ஆரியக் கலப்பில்லாத் தனித்தமிழ் பண்டைக் காலத்தில் இருந்ததென்ற உண்மையை இனி மறுக்க முடியாது.

அவ்வாறே, பார்ப்பனீய வெறுப்பு மிக நிறைந்தவரும், ஆரியரையோ, அவர் தம் மொழியென்னும் சமஸ்கிருதக் கலையையோ வைது, நன்கு ஆராய்ந்து தெளிய உரைக்கப்படாத நிலையில் உள்ள தம் பண்டைத்தமிழ் நாகரிகச்சிறப்பினை ஏற்று ஆதரிக்குமாறு அவர்களைக் கேட்பதனாலும், ஒரு சிறப்பும் அடையமுடியாது.

மூடத்தனமான வெறுப்புக்கொண்டு, அவர்களோடு பூசலிடுவதற்காக எந்த அறிவுள்ள தமிழ் மகனும் முன் வா மாட்டான். ஆராய்ச்சி நெறியை விரும்பாது மூட நம்பிக்கையில் குரங்குப்பிடியாய் நிற்கும் வைதிகப் பண்டிதர் கூட்டம் ஏசுமே என்று அஞ்சி, தமிழர் சரித்திர ஆராய்ச்சியாளருள் எவனும் பின் வாங்கமாட்டான்.

உண்மை எவ்வகையிலும், ஆராய்ந்து காணவேண்டியது அவசியமாகும், அதுபோலவே, காம் கண்ட உண்மையை எவரேனும் ஆதரிப்பர் என்று விரும்பியோ, அன்றி மறுப்பர் என்று அஞ்சியோ, எவரும் வெளியிடாது இருப்பது பெருங்குற்றமாகும்.

சமஸ்கிருதக் கலையும் உண்மையில் விலக்கத் தகுவதன்று. ஆனால், அக்கலையறிவால், இயற்கையறிவுமழுங்கி, தமிழர்சிறப்பினைக் குன்றச் செய்யக்கூடாது. உணவையும் உண்ணவேண்டும்; அவ்வுணவும் உண்கலத்தில் இருக்க வேண்டும் என்றால் எவனுக்குத்தான் முடியும்?

ஹிந்தி மொழி.

ஆரியமொழியாலும், அதன் கலையாலும், தேசியம் என்ற போர்வை போர்த்துத் தமிழ் நாட்டில் தமிழ் மொழிக்குரிய

இடமும், உரிமையும் நிலை களாச் செய்தது போதாததுபோல, நமது தமிழ்மொழி, இது போது எதிர்பாராத விடத்திலிருந்து கொனைர்ந்து புகுத்தப் பெறும் புதியதொரு பகை மொழியை எதிர்க்க வேண்டியிருக்கிறது.

நமது மாகாணத்துத் தற்கால காங்கரஸ் மந்திரி சபை தனக்குள்ள செல்வாக்கைக் கருவியாகக் கொண்டு தமிழ் நாட்டுத் தமிழுக்கு விபத்தொன்றைச் செய்யத் தொடங்கித் தமிழ் நாட்டில் உள்ள எல்லாப்பாடசாலைகளிலும் எல்லா மாணவர்களுக்கும் ஹிந்திமொழியைக் கட்டாயப் பாடமாகப் புகுத்தப் போவதாகத் தமிழர்களாகிய நம்மைப் பயமுறுத்தி நின்றது.

அரசாங்கத்தின் கொள்கையென்று சொல்லி, பாடசாலைப் பாடங்களுள் இரண்டாவது மொழி வகையில் இஷ்ட பாடமாக வைப்பதாயினும், நமது மாகாண மொழியாகிய தமிழ் மொயிழின் சிறப்பையும், உரிமைநிலையினையும் கெடுத்து சீர் குலைத்து வரும் வட நாட்டு ஆரிய மொழியின் கிளையாய், சமஸ்கிருதத்தின் முடிவாய் வந்திருக்கும் ஹிந்தி மொழியை நமது தமிழ் நாட்டு அறிவுப்பக்குவமில்லாத இளஞ்சிறுவர் கள் கட்டாயம் படித்துத் தான் ஆக வேண்டும் என்று வற்புறுத்தும் இத் தீச்செய்கையாஞ் நமதுதமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பெருங்கேடும், தமிழர் நாகரிகத்துக்கு அனர்த்தமுமே உண்டாகும்.

ஹிந்தி மொழியை எவ்வகையில் ஆராய்ந்து பார்த்தாலும் அது நம் தமிழ் மொழியின் காற்கீழ் ஒதுங்கக் கூடிய சிறுமையுடையது. ஹிந்தியைக் கட்டாயப்படுத்திப் படிக்கச் செய்வது தமிழ்க் கல்விக்கு இசைந்ததாக இல்லாமலிருப்பதோடு, தற்காலம் நம் தமிழ் இருக்கும் நிலையில், அதற்கும் அதன் கலை வளர்ச்சிக்கும் பெரிதும் தடையும், இடையூறும் விளைவிப்பதாகவே இருக்கிறது.

தமிழ்ச் சிறுவர்களுக்குச் சிறுவகுப்பிலேயே ஹிந்தியைக் கட்டாயமாக நுழைப்பது தமிழ் இளைஞர்களின் முற்போக்கைத் தடுத்து அவர் உயர் கல்வியைக் கற்கவொட்டாமல் தடை செய்யப்படுவதற்காகச் செய்யப்படும் சூழ்ச்சியே தவிர வேறில்லை.

இது சாதிச் செருக்காலும், சமூகத் திமிராலும் தங்களுக்கு உரியது சமஸ்கிருதமேயென எண்ணி, பல நூற்றாண்டுகளாகத் தமிழுக்குத் தாழ்வு செய்துகொண்டே வந்த ஒரு சாதி இளைஞர்களுக்கு உயர் கல்விக்குரிய சலுகை காட்டுவதற்காகச் செய்யப்படும் சுயநலத் தந்திரமேயாகும்.

ஹிந்தியென்பதுசமஸ்கிருதத்தின் கிளை மொழியாகையால், அந்தச் சமஸ்கிருதமே தங்கள் "ஸ்வ பாஷை" என்று கொண்டு பயின்று வரும் அந்தச் சாதிஇளைஞர்களுக்கு ஹிந்திமொழி சுலபத்தில் வந்துவிடும்.

ஹிந்தியை நுழைத்து விடின், எதிர் காலத்தில் ஹிந்திபடித்தவர்களுக்கு உயர்ந்த கல்வியைப் பெறுவதற்குரிய வசதிகளும் பிற்கால வாழ்வுக்குரிய தகுதிப்பாடுகளும் வழங்கப்படும்.

அந்நிலையில், ஹிந்தியைக்கற்க முடியாமல், நம் தமிழ்ச் சிறுவர்களே மிகவும் பாதிக்கப்பட்டு மேற் கூறிய தகுதிப் பாடுகளையும் பெற முடியாமல்வருந்த நேரிடும்.

தற்கால நமது மாகாணமந்திரிசபை, இந்த வகையில் தமிழர்களை அலக்ஷியம் செய்து, அவர்கள் சுபாவத்தையும் நிராகரித்து, தங்களுடைய கட்சிப்பலத்தாலும், காங்காசின் பெயராலும் இந்தக் காரியத்தைச்செய்ய முனைந்திருக்கின்றது.

நமது பாஷை, கலை முதலியவைகளுக்குத் தீங்கு செய்யுமிடத்து, காங்காஸாயிருந்தாலும் நாம் அதற்கு இடந்தரக்கூடாது. உண்மையில் காங்காஸ் ஸ்தாபனங்கூட, ஹிந்தியே எல்லா மக்களுக்கும் கட்டாயமான பொதுமொழியென்று முடிபு செய்துவிடவில்லை.

ஆகவே நமதுமாகாண மந்திரிசபை செய்யும் இது, தமிழர்களாகிய நம்மால் வன்மையாகக் கண்டிக்கத் தக்கதாகும். தமிழர் அபிப்பிராயத்துக்கு நேர்மாறாகச் செய்யப்படும் இந்தச் செய்கை நம் நாட்டிலிருக்கும் குறைகளை நீக்குவதை விடுத்து வகுப்புத் துவேஷத்தையும், சாதிச்சண்டையையும், விருத்தி செய்வதாகவே இருக்கிறது.

தமிழர்களாகிய நாம், நம்தமிழையும், நம்தமிழ்க் கலையையும் காப்பாற்றிக் கொள்வதற்குச் சிறிதும் அச்சமும், தயக்கமுமின்றி, பண்டைய பேராண்மையும், மனவுறுதியும் கொண்டு எதிர்த்துப் போராட வேண்டியது இச்சந்தர்ப்பத்தில் முக்கிய கடமையாகும்.

தற்கால சென்னை மாகாணமந்திரி சபையின் திமிரையும், பிடிவாதத்தையும் ஒருமுகமாக எதிர்த்துப்போராடித் தகர்த்தெறிய வேண்டும்; இப்போது தற்கால மந்திரிகளின் கொடுங்கோன்மையை எதிர்த்துச் சீறிழிப்பதற்குத் தமிழர்களாகிய நீங்கள் இப்போழ்தே எழப்போகின்றீர்களா? அல்லது அவர் அடியில் மிதிப்புண்டு அவர்கட்கு மீளா அடிமைகளாகப் போகின்றீர்களா?

இவற்றுள் நல்லதைத் தேர்ந்து, அஞ்சாமையும், ஆண்மையுங்கொண்டு, நம் மொழியைக் கெடுப்பதற்காக வருகின்ற இந்

தப் போராபத்தைத் தடுத்து நம் தமிழின் தனித்த பெருமையையும், நம் தமிழ்க்கலையின் தனிநலத்தையும் நிலை நிறுத்துமாறு உங்களை மிகவும் வேண்டிக்கொள்ளுகிறேன்.

நமது கடமை.

நாம் இப்போது இரண்டு சிறந்த ஆராய்ச்சிகள் செய்யவேண்டியது நமது கடமையாகும். ஒன்று, மிகப் பழங்காலத்தில் ஆரிடக் கலப்பில்லாத தனித்தமிழ் நாகரிகம் என்பதொன்று இருந்தது என்பதாகிலும் பொய்யாகஇருக்கவேண்டும்; அற்றேல் அதனை எவ்வளவு விரைவில் வெளிப்படுத்தி விடுகிறோமோ, அவ்வளவும் நலமேயாகும்; அல்லது, அத்தகைய நாகரிகம் ஒன்று இருந்தது என்பது சரித்திரபூர்வமான மெய்யாக இருக்க வேண்டும்.

அவ்வாறாயின் அதனையாகிலும் நன்கு தெளிவு தோன்ற ஆராய்ந்து உலகிற்கு உணர்த்தவேண்டும். அதனால் நம் மக்கட் சமூகத்திற்கும், நாகரிக வளர்ச்சிக்கும் பெருநலமே உண்டாகும். சம்பந்தமில்லாதவர்போல ஒருபுறமாகநின்றுகொண்டு வேடிக்கை பார்ப்பது எவருக்கும் நன்மை தராது.

பொய்யே நிரம்பிய ஓர் உலகத்தில் எவனும் நெடுங்காலம் நிலைத்திருக்க முடியாது. ஒன்றுபண்டைத் தமிழ்க்கலையை மறுபடியும் நன்காராய்ந்து பண்டைநிலைக்குக் கொண்டுவாவேண்டுப; அதனால் நம் எதிர்கால வாழ்வுக்குப் பயனுண்டு என்பது விளங்குமாயின் அதன் தனித்தநிலைமைக்காக உழைத்து அத் தமிழ் நாகரிகத்தை வளர்த்து, அதனால் பொதுவாக மக்கட் சமூகத்துக்கே நலமுண்டாகும் என்று தோன்றுமாயின் அதனைச் செய்து கொள்ள வேண்டும்.

அல்லது இஃதெல்லாம் பொய்பெனப் படுவதாய்விளங்கிடுமாயின், விளங்கிய அந்தக்கணமே இதனை விடுத்து, மறுபடியும் சமஸ்கிருதக் காவடியைத்தோளில் வைத்து ஏலேலோ பாட வேண்டும்.

ஆகவே, தமிழர் இனிமேற்றான் முன்னணியில் நின்று முற்பட உழைக்க வேண்டும்; இல்லையேல், பிற்போக்கில் சென்று வீழ்ந்து மடிய வேண்டும். சும்மா வறிதே நின்று சுகம் பெறலாமென்று கருதுவது கூடாத காரியமாகும்.

தென்னிந்தியாவில் தற்போதுநிலவும் கலைகள் தமிழுமல்ல; ஆரியமும் அல்ல. தனித் தமிழ் நாகரிகம் என்ற இச்சிறப்பினை அழித்துப் புதைத்து விட்டுப்புது நாகரிகத்திற் புகுவதோ அன்றி, அதனைப்பற்றி யாதேனும் உணர்ச்சி நிலவுவதாயின்

அதனைப் பண்டை நிலையிற்கொணர்தற்கு உண்மை உழைப்பு, சலியா முயற்சி மேற்கொள்வதோடு இப்பொழுதே செய்ய வேண்டியது நமது கடமையாகும்.

உழைப்பும் முயற்சியும் பெருகக் கொண்டு பண்டை தமிழ் காதரிகப் பெருங் கோட்டையை உருக்கொண்டு சிறக்கும் படைபலத்தை வலுப்படுத்தி கெட்டு நிற்கும் பகுதிகளைப் பிடித்து காண்பார் கண்ணும் கருத்தும் மகிழ்வெய்தும், அதனை அரண் கொண்டு வாழ்வார் திருவும் செல்வமும் செம்மையுறத் துய்க்கவும், தக்க வீறுபிறப்பித்தற்குக் கனவாறு, ஒருமை மனத்தாராய் மடிதற்றுழந்துறுவது தமிழர் ஒவ்வொருவருக்கும் உயிர்க் கடன் என்று தமிழர் தெற்றென உணர்ந்தொழுகுவாராவர்.

தமிழ்ச் சகோதர சகோதரிகளே!

நான் இந்த வரையில் நமது தேசத்து நாட்டு மக்களிடத்து உண்டாகியிருக்கும் விழிப்பும், அதனால் வங்காளமும் பஞ்சாபும் சிறந்து நிற்பதும், அவர்தம்பண்புடைய நிலையும், தமிழர்கள் சிறப்பும், தமிழுக்கு உண்டானவீழ்ச்சியும், தமிழருக்கு ஐரோப்பிய கலப்பால் உண்டான பரிதாபகரமான நிலையும், அதிபர் கொள்கைகளும், அவற்றால் எழுந்துள்ள அநியாயங்களும், பொய்யுரைகளும், வேஷங்களும், சாதி முறையும், தமிழில் ஆங்கில இயல்பு கலந்த வகையும், அவர்கள் தமிழோடு கலந்து செய்யும் உதிப், அச்செய்கையால் அபவாதங்கள் பொய்புரைகள் செய்திருப்பதும், தனித்தமிழின் சிறப்பும், ஐரோப்பர் தமிழைக்கொண்மையும் ஒருவாறு கூறி நமது கடமையில் இன்னவாய் வேண்டியிருப்பதையும் சொல்லியிருக்கிறேன்.

இனி, இது குறித்துச் செய்ய வேண்டியனவற்றை நேற்று கொள்ளத் தக்க காரியங்களை ஆலோசிக்க நீங்களும் இங்கு வந்திருக்கிறீர்கள்; பலர் கூடி தீர ஆலோசித்துச் செய்வதில் சிறப்பு வேறில்லை. ஆனால், இத்தீர்மானங்களை ஆராய்ந்து முடிபு செய்வதோடு கடை முறையில் கொண்டு வருவதும் மென்பதை மறக்கக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இம்மட்டில் என் முன்னுரையை நிறுத்திக் கொள்ளுகிறேன்.

கடவுளைப் பற்றிய ஆபாசக்கதை.

பரமசிவனின் இந்திரியத்தை தேவர்கள், விஷ்ணு முதலானவர்கள் குடிப்பதா?

(ஆஸ்திகன் எழுதுவது)

புராணம் உண்மை, இதிகாசம் உண்மை எழுதி வைத்த வடெல்லாம் சத்தியம் என்று சில அசடுகள் சொல்லுகின்றனர். ஒன்றும் விளங்காமல் இருட்டில்கிடந்து அவையெல்லாம் உண்மையென்று கூறி அவைகளை நம்பி இடர்ப்படுவோருக்கு புராணங்களிலுள்ள ஆபாசங்களைக் கூடுமானவரையில் நாங்கள் விளக்கிக் காட்டுவது மனேகருக்கு உபகாரமாக இருக்குமல்லவா? பொறுமையாகப் படியுங்கள்! கோபப்படாதீர்கள் புராணங்களைக் கிண்டிக்கிளரிப் பார்த்தால் குப்பை கூளங்களைத் தவிற வேறில்லை. நாங்கள் சொல்லுவது பொய்யல்ல என்பது எங்கள் சங்கத்தின் வெளியீடுகளைத் தொடர்ச்சியாக வாசித்துவரும் அன்பர்களுக்குத் தெரியாமலிருக்காது. இவ்வெளியீட்டில் காஞ்சிப்புராணத்தைப்பற்றி சில விஷயங்களைச் சொல்லுகிறோம். ஆகையால், இதையும் வாசித்தறிந்து உண்மையுணர்ந்து சீர்திருத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

சைவசமயாச்சாரியாருள் ஒரு முக்கியமானவர் அப்பர் சுவாமிகள். தேவாரப் பாட்டுகள்தான் சைவசமயத்தவர்களுக்குச்சிறந்த நூல் என்பது அனேகருக்குத் தெரியும். வைஷ்ணவரோடு சைவப் பெரியார்கள் கூடிக் கயிறு சாத்திப்பார்த்தனாரம் அதில் வந்த பாட்டைக்கொண்டு, தைத்தியலடைத்தாக் கதையுண்டு. அந்தப்பாட்டில் கடவுளைப்பற்றி என்ன சொல்லுகின்றது என்பதை கவனியுங்கள். அப்பாடல் வருமாறு:—

"என்னின் அல்லான் ஒப்புடைப் பாலன்
ஒருவனல்லன் ஓர் உமரனல்லன்
ஒருவமன் இவ்வி அப்படியும் அக்கிறமும்
அவ்வண்ணமும் அவன் அருளே

கண்ணாகக் காணினல்லால் இப்படியன்
இன்னிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்று எழுதிக்காட்டொணாதே''

என்று கூறுகின்றது. இதன் கருத்து என்ன வெனில் கடவுளுக்கு உருவமில்லை, குணமில்லை, நிறமில்லை, என்பதாகும். இதே கடவுளைப் பற்றித் தாயுமானவர் என்ன சொல்லுகிறாரென்றால்,

"அங்கு இங்கு என்னாதபடி எங்கும்
பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி,
அருளோடு நிறைந்தது எது?
தன் அருள் வெளிக்குள்ளே தங்கும்படிக்கு
இச்சைவைத்து உயிர்க்குயிராய்த் தழைத்த தெது?
மனவாக்கினால் தட்டாமல் நின்றதெது?''

என்றும் பலவாராகக் கூறியிருக்கின்றார். கண்ணுக்கும் மனத்துக்கும் எட்டாத பரவெளியாக இருப்பது கடவுள் என்று பலரும் கூறியிருக்கின்றனர். அப்பேர்ப்பட்டதாகச் சொல்லப்படும் கடவுளைப் புராணக்காரர்கள் படுத்தியிருக்கும் பாட்டைப் பாருங்கள்!

காஞ்சீபுரம் என்னும் ஊருக்கு "காஞ்சிப்புராணம்'' என்று சொல்லப்பட்டதான ஸ்தலபுராணமொன்று இருக்கிறது. அதனைப் பாடியவர் லேசான ஆசாமியென்று கருதிவிடாதீர்கள்! சைவசமயத்தவர்களால் மிகவும் கொண்டாடப்படுபவரும், திருக்கைலாச பரம்பரை திருவாவடுதுறை ஆதீனத்து திராவிட மகாபாஷ்யகர்த்தராகிய மகா மகா மகிமை பெற்ற சிவஞான யோகிஸ்வரர் என்பவராவார். அப்பெரியார் தன் திருவாயை மலர்த்தி பாடப்பட்ட காஞ்சிப் புராணத்தில் கடவுளைப் படுத்தியிருக்கிறபாடும் ஆபாசமும் எப்படிப்பட்டதென்பதற்கு பூராவும் வரைய இவ்வெளியீட்டில் இடமில்லாமைக்காக காஞ்சிப் புராணத்திலுள்ள 74-படலங்களில் 32-வது படலமாகிய சுரகரீசப்படலத்திலிருந்து ஒரே ஒரு சாம்பிள் தருகின்றோம். அதைக் கவனமாக வாசித்து உண்மை உணர்ந்தால் போதுமானது:—

காஞ்சிப்புராணம் சுரகரீசப் படலம் பாட்டு 27

".....கந்தனை
கல்கவேண்டிச்
சீரிமயத்து மடப்பிடியைத் திருமணஞ்
செய்தபின் எய்தி அக்கண்

ஏரியல் அந்தப்புரத்தின்மன்னி
இன்பக்கலவி நடத்தலுற்றான்''

இதன் பொருள்:— பரமசிவன்—உருவமில்லாத பரம் பொருளான பரமசிவன்—விருப்பு வெறுப்பற்ற பாமசிவன் சுப்பிரமணிய சுவாமியைப் பெருவதற்காகப் பார்வதியைக் கலியாணம் செய்துகொண்டு அந்தப்புரத்திலே கலவி (புணர்ச்சி) நடத்த ஆரம்பித்தார், என்று இப்பாட்டில் கூறப் பட்டிருக்கிறது.

ஷ புராணம் சூரசரீசப் படலம் பாட்டு 28.

''வண்டு இமிர்கூந்தல் இமயவல்லி
வனமுலைதாக்க மகிழ்ந்துபுல்லிக்
கண்டுகேட்டு உண்டுஉயிர்த்து உற்றுப்பன்னாள்
கலவிப்பெருநலம் துய்க்குங்காலை
அண்டாஉணர்ந்து வெருவி அஞ்சி
அம்பிகைதன்பால் கருப்பவீறு
கொண்டிடுமுன்னம் சிதைவுசெய்யும்
கொள்கையின் அங்கியையேவினார்கள்''

இ-ள்:— வண்டு*ள் மொய்க்கின்ற கூந்தலையுடைய பார் வதியின் அழகிய ஸ்தனங்கள் அழுந்துவதனால் மகிழ்ச்சிய டைந்து கட்டித்தழுவி அவளைக்கண்டும் இசைகேட்டும அத பானம் உண்டும் உயிர்த்தும் கட்டிப்பிடித்தும் பலநாள் கலவி யாகிய பேரின்பத்தை பாமசிவன் கடத்தினார். அதனைத் தேவர்களறிந்து நடுங்கிப்பயந்து அப்பிகையின் வயிற்றில் கர்ப் பம் முற்றுவதற்கு முன்னால் அக்கர்ப்பத்தை சிதைத்துவிட வேண்டுமென்று கருதி அக்கினி பகவானை ஏவிவிட்டார்கள் என்பதாம்.

வாசகர்களே இந்த இரண்டு பாட்டையும் கவனிக்க வேண்டும். சுப்பிரமணியனைப் பெறவேண்டுமென்று பரமசிவன் கருதினால் — நினைத்தால் முடியாதா? ஒரு பெண்ணை கலியாணம்செய்து அவளுடன் கலவிசெய்தா பிள்ளை பெறவெண்டும்? அப்படியே யிருந்தாலும் கலவி ஒருமணிநேரம் செய்தால் போதாதா? இடைவிடாமல் பலநாள் செய்ய வேண்டுமா? அப்படியேயைவத்துக் கொண்டாலும் சுப்பிரமணியக்கடவுளை உண்டாக்கவேண்டு மென்று கருதிய பரமசிவனானவர் அதி மும்மறமாக வேலை

செய்யும்பொழுது அதனாலுண்டாகும் கர்ப்பத்தையழிக்க மற்றதேவர்களெல்லாம் கூடி முயற்சிக்கலாமா? கர்ப்பத்தை அழிப்பது ஒழுங்கா? அதிலும் உலகமாதாவென்று சொல்லப் படும் பார்வதிதேவியின் கர்ப்பத்தையழிக்கத் தேவர்கள் முன் வரலாமா? இது தேவர்கள் செய்யக்கூடியகாரியமா? இப் போதைய வெள்ளைக்காரர்களின் ஆட்சியில் அந்தத் தேவர் களிருந்து அந்தப்படி கர்ப்பத்தை சிதைவு செய்தால் கடுந்தண் டனைக்குள்ளாவார்களென்பது நிச்சயமாகும். பரமசிவனும், பார்வதியும் சம்போகம் செய்தபாதிரியை ஒரு யோகீஸ்வரர் சமீபத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்ததைப்போல் ஸ்பஷ்டமாக விளக்கிக் கூறுகிறமுறை, அசியம் எல்லோரும் கவனிக்கத்தக்கது. தேவர்களின் எவுதலின்படி சென்ற அக் கினிபகவான், போய் பார்த்துவிட்டு சந்தர்ப்பம் சரியாகயில்லை என்று திரும்பிவந்து சொல்லுகிறான்.

ஷை புராணம் சுரகரீசப்படலம் பாட்டு 29.

"நீவிர்களே ஆவணைய்தி ஊறுநிகழ்த்திடுபின்க
ளெனக்கரைந்தான்"

இ-ள்:— நீங்களே அந்த இடத்துக்குப்போய் கர்ப்பத்தை அழித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னான் என்பதாகும்.

உடனே மகாவிஷ்ணு பிரம்மா, இன்னும் மற்றுமுள்ள தேவர்களெல்லாம் புறப்பட்டு மந்தாரமலையில் நின்று பரம சிவனை நோக்கி குப்பிட்டுக் கதறினார்கள். உடனே அதனை உணர்ந்த பரமசிவன்.

ஷை புராணம் சுரகரீசப்படலம் பாட்டு 30

"தெரிவையோடு ஆடும்புணர்ச்சி காப்பண் சென்றனன்
வெற்றையோடும் அங்கண்"

இ-ள்:— பரமசிவன் பார்வதியோடு புணர்வதிலிருந்து இடை யில் பிரிந்து அம்மணமாகப்புறப்பட்டு வந்தான், என்று இத் பாடலில் சொல்லப்பட்டிருக்கிறது. காஞ்சிப் புராணம்பாடிய யோகீஸ்வரர் இதோடு விட்டு விட்டனரா? இல்லை.

ஷை புராணம் சுரகரீசப்படலம் பாட்டு 35

"வேண்டுவகூறுமின் உங்கட்கு
இன்னமே வரல்குதும் என்று அருள

சண்டியமாயனை உள்ளிட்டோர் தம்
ஏவலினால் முகன் வத்திளைத்தாய்
மாண்டமலை மகள்பால் கர்ப்பம்
வாய்ப்பது வேண்டிலர் மால்முதலோர்
காண்டகவந்தனர் மேல் இயற்றும்
கடன் அறியேங்கள் எனக்கரைந்தான்''

இ—ள்:- பரமசிவனானவர் உங்களுக்கு என்ன வரம் வேண்டும் இப்போதே தருகிறேனென்று சொல்ல, பார்வதி வயிற்றில் கர்ப்பம் தரிப்பதை நாங்கள் விரும்பவில்லை என்று மகாவிஷ்ணு முதலியோர் கூறினர் என்பதாகும். இதைக்கேட்ட பரம் பொருளாகிய பரமசிவன் சொல்லுகிறார்.

ஷை புராணம் சுரகரீசப்படலம் பாட்டு 36

''பனித்தழத்துருக்கி யன்ன
வெண்புனல் பருகுமின்கள்
எனப்புகன்று அருளவவ்வே
எரிஇறை அங்கை யேற்றான்''

இ—ள்:-குளிர்ந்த முத்தை உருக்கினது போன்ற வெண்மையான நீரைக்குடியுங்கள் என்று சொல்லி, பரமசிவனானவர் தன் இந்திரியத்தை வெளியே விட்டார். அவ்விந்திரியத்தை அந்த க்ஷணத்திலேயே கையையேந்தி கீழிந்தாமல் வாங்கினான் அக்கினிபகவான். சகோதார்களே! கதை நன்றாக இருக்கிறதா? எல்லாமவன் செயல்,

ஷை புராணம் சுரகரீசப் படலம் பாட்டு 37

''எண்ணரும் வருடங்காறும்
ஆயிரம் இரவிப் பொற்பின்
அண்ணல்பால் நின்றுவீழும்
அதனை அவ் அனலோன் உண்ண
வீண்ணவர் எவர்க்கும் அந்நாள்
மேவரும் கர்ப்பம்நீட்டிக்
தண்ணெனத் தளக்கிவெப்பு
நோயினில் தொடக்குண்டார்கள்''

இ—ள்:-எண்ணமுடியாத வருஷமாக ஆயிரம் சூரியனின் தன்மையைப் பெற்று ரமசிவனிடத்திலிருந்து பெருகி விழு

கின்ற அந்த இந்திரியத்தை உண்டவுடன் தேவர்கள் யாவரும் கர்ப்பத்தை அடைந்தார்கள். மேலும் அதனுடைய உஷ்ணத்தைத் தாங்கமுடியாமல் வெப்பு நோயினால் கஷ்டத்திற் குள்ளானார்கள் என்பதாகும்,

பரமசிவன் புணர்ச்சியிலிருந்து பிரிந்து நிர்வாணமாக வந்து தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி அக்கினி பகவான் கையில் இந்திரியத்தை வார்த்தாரென்றும் அதனைக்குடித்த ஆண்தேவர்களெல்லாம் கர்ப்பமுற்று பிள்ளை பெற வழியில்லாமல் துயரப்பட்டார்களென்றும் ஓர் யோகீஸ்வரர் எழுதலாமா? இதனைத்தானே ஆணும் பெண்ணும் கூடியிருக்கச் செய்து கோவில்களிலும், மடங்களிலும் சாம்பல் பக்தர்கள் படிக்கின்றனர். இதனைக்கேட்கும் ஜனங்களுக்கு பக்தி வருமா? காமப்பித்து வருமா? என்பதை வாசகர்களே உணரவேண்டும். தேவர்கள் விரும்பியவுடனே இந்திரியத்தை விட 'பரமசிவனிடத்திலிருப்பது (Pipe) பைப்போ? திருகிவிட்டவுடன் ஊற்றுவதற்கு' இம்மாதிரியான ஆபாசங்களையே ஒவ்வொரு புராணத்திலும் எழுதி வைக்கப்பட்டிருப்பதோடு சுண்டல் கடலையும் வடையும் வைத்துக்கொண்டு கூட்டம்கூட்டி இவைகளைப்படித்துக் கேட்கச் சொல்லுகின்றனர் ராமாயணம் படித்து சீதைக்கும் ராமனுக்கும் தாலி செய்து கட்டி கலியாணம் செய்வது மாதிரி இந்தத் திருவிழாவும் கடந்த முன்வராமற் போனதே விசேஷமில்லையா? இதனவும் கடவுளின் திருவிளையாடலாதலால் அதன் படி செய்து காட்ட பலபக்தர்கள் தயாராக இருப்பார்கள். ஆனால் பொதுஜனங்கள் இன்னும் அந்த லெவலுக்கு வரவில்லை. இன்னும் சில ஆண்டுகள் சைவர்களுக்கு விசேஷ ஆதிக்கம் கொடுத்தால் கட்டாயம் செய்தே தீருவார்கள். இப்புராணத்தை எழுதிய சிவஞானம் பெற்ற நமது யோகீஸ்வரர் இவ்வளவோடாவது விட்டாரா? இல்லை; இன்னும் மேலே சொல்கிறார்.

வே புராணம் சுரகரீகப்படலம் பாட்டு 40, 41

"சுரகரீசத்தின் பாங்கர்ச் சுரகர தீர்த்தமுண்டால்
விரவிநீர் படிந்தோர்பாவ
வெப்புநோய் முழுதும் நீங்கும்,
இரவிகாடகழிய கன்றாம் நீர் அவண் ஏய்ந்தி
நம்மைப் பரவிநீராடில் இந்த
வெப்புநோய் மாறும் காண்மின்"

"ஆயிடை நீங்கிப் பின்னர்
மேருவை அணுகி அங்கண்
மேய இக்கர்ப்பந்தன்னை விடுமின்"

காஞ்சீபுரத்தில் சுரகர தீர்த்தமென்று ஒன்றிருக்கிறது அதில் குளித்தவர்கள் இம்மாதிரி உஷ்ணதோலை விட்டு நீங்குதல் கூடும். நீங்கள் போய் அதில் குளியுங்கள். பிறகு அங்கிருந்து மேருமலைக்குச் சென்று உங்களுக்கு உண்டாகி இருக்கிற கர்ப்பத்தை அவ்விடத்தில் (பிரசவியுங்கள்) விடுங்க ளென்று பரமசிவன் சொன்னார். அப்படியே தேவர் கள் செய்தார்களென்பது இப்பாடலின் கருத்துக்களாகும்.

இப்பொழுது இந்தக்கதை எதற்காகக் கட்ட தென்பது விளங்கும். ஒன்று மகாவிஷ்ணு முதலிய பாமசிவனின் இந்திரியத்தைக் குடித்தார்களென் படுத்த வேண்டுமென்பது. மற்றென்று கா கும் சுரகரீசமென்னும் குளத்துக்குப் வேண்டுமென்பது. இந்த இரண்டு யும் அந்தப்பரம்பொருளின் தத் லப்படுத்திக் காமங்கொண்ட யும் விடக் கேவலமாக

மறுத்துச் சொல்லுபவன் நாஸ்திகன்! அவன் பேச்சைக்கே ளாதே! எனக்குப் பாத காணிக்கை கொடு! என்று மிரட்டு வது யோக்கியதையா? நாணயப்பொருப்பா? என்று யார் தான் கேட்காமலிருக்கமுடியும்? எத்தனை நாளைக்குத் தான் இந்த நாற்றத்தைக் கட்டிக்கொண்டழுவது?

இந்தப் புராணத்தைத் தமிழில் பாடும்படி காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் சொல்லி அருளினாராம். கருச்சிதைக்கிற படலத்தையும் கர்ப்பத்தை அழிக்கிற குளத்தையும் பற்றிக் கடவுள் எதற்காகப் புராணம் பாடச்சொன்னாரென்பது யோசிக்கத்தக்கதல்லவா? விதவைகளுக்கு மறுமணம் செய்யா திருக்கும்பொழுது கர்ப்பமுண்டானால் இந்தத் தீர்த்தத்தில் யொழித்துக் கொள்ளட்டுமென்பதற்காகவா? சிவபக் யும் விபசாரதோஷத்தால் ற்படும் கர்ப்பங்களை யாக இருக்கட்டுமென்பதற்காகவா? இவைகளை பகுத்தறிவைக் கொண்டு யோசித்துப்பார்த் ாட்டங்களும், கொடுமையும், அசிங்க த்தப்பட்டிருக்கிறதென்பது விளங் கள் நிறைந்த புராணங்களை வேண்டுமென்று சுயமரி வெறியர்க